கல்கி



KALKI நவம்பர் 2, 1952

4 அணா

ஆரோக்கியத்தைப்பெற சமநிலை உணவை சாப்பிடுங்கள்



ஒவ்வொரு வகையான உணவும் வெவ்வேறு விதமான உணவுச்சத்துக்கள் அடங்கியதாயிருக்கிறது. அதனால்தான் ஆரோக்கியத்திற்கும், சக்திக்கும் மிக அவசியமான ஐந்துவகை உணவுச்சத்துக்களையும் பெற வெவ்வேறு உணவுப்பொருள்களை சாப்பிடவேண்டும். இதைதான் சமநிலை உணவு என்று கூறப்படுகிறது. ஆகவே சமநிலை உணவில் (1) விடமின்கள், (2) புரதசத்துக்கள், (3) தாதுப்பொருள்கள், (4) மாவுசத்துக்கள், (5) கொழுப்புகள் அடங்கியிருக்கவேண்டும். இந்த ஐந்து வகை சத்துக்களும் மிகவும் அவசியமானவைதான். நீடித்து நிற்கும் சக்தியை அளிக்கும் கொழுப்புகளிடையே மிக சௌகரியமானதும், ஊட்டமளிப்பதுமான ஒன்று டால்டா. எல்லா வித சமையல்களுக்கும் உகந்தது. சீல் செய்த டின்களில் எப்பொழுதும் புதிதாகவும் துப்புரவாகவும் உங்களுக்கு கிடைக்கிறது.

சமநிலை உணவைப்பற்றிய உபயோகமான
பூரண விவரங்கள்

இலவசமாகத் தேவையானால் இன்றே—
அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

சக்தியைப்பெற டால்டாவில் சமையுங்கள்



சமநிலை உணவில் உங்களுக்குத்தேவையான கொழுப்பை அளிக்கிறது

HVM. 175-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 12 | இதழ் 14


1952 நவம்பர் 2

நந்தன ஐப்பசி 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

டாடா அக்ரிகோ கருவிகள்

உறுதியானவை, பலமானவை, நீடித்துழைக்கக்கூடியவை. அவை ஹை கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டவை. வேலை செய்வதற்கு ஏற்றவாறு அவை தயாரிக்கப்பட்டு தீட்டப்பட்டவை. எல்லாவித சோதனைகளிலும், அக்ரிகோ கருவிகளே சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன.




டாங்க் மண்வெட்டி



மேற்கு இந்தியக் கொத்து



ஸ்வான் நெக் மண்வெட்டி



மைசூர் மண்வெட்டி



எல்லாவித நிலங்களுக்கும்

அக்ரிகோ

கருவிகளே தகுதியானவை

தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

ஸேல்ஸ் ஆபீஸ்:

23B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா-1

கிளை ஆபீசுகள்:

பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், ஹைதராபாத், விஜயநகரம் கண்டோன்மெண்ட், ஜலந்தர் கண்டோன்மெண்ட், கான்பூர்.

AG.335B

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 14

தேசிய இளைஞர் முன்னணி

சென்ற மாதத்தில் சென்னை நகருக்குப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு விஜயம் செய்திருந்தபோது, அவர் ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் பல அலுவல்களைப் பார்த்தார்; பல கூட்டங்களில் பேசினார்; பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

அந்த நிகழ்ச்சிகளில் மிக முக்கியமான ஒன்று, ராஜாஜி மண்டபத்துக்கு அருகில், புதிய சட்டசபைக் கட்டிடத்துக்கு எதிரில் நடைபெற்றது.

சென்னை நகரிலும் அருகாமையிலுமுள்ள தேசிய இளைஞர் ஸ்தாபனங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் வாலிபர்களின் அணிவகுப்பு அங்கே நடந்தது.

அவர்களில் சுமார் 300 பெண் தொண்டர்களும் இருந்தார்கள்.

சென்னை தேசிய வாலிபர் காங்கிரஸ், தியாகராய நகர் தேசிய இளைஞர் முன்னணி, தேனாம்பேட்டை சர்வோதய சங்கம், தியாகராய நகர் வாஞ்சி — சிதம்பரனார் இளைஞர் மன்றம், தாம்பரம் தேசிய இளைஞர் முன்னணி, மயிலாப்பூர் இளைஞர் சங்கம், திருவல்லிக்கேணி படேல் வாலிபர் காங்கிரஸ், பெரம்பூர் பாரத் சேவா சங்கம், ஏழு கிணறு காந்திஜி சேவா சங்கம், ஆயிரம்விளக்கு ராஜாஜி சேவா சங்கம் முதலிய இன்னும் பல ஸ்தாபனங்களைச் சேர்ந்த தேசிய உணர்ச்சி உள்ள வாலிபர்கள் மேற்கூறிய அணிவகுப்புக்கு வந்திருந்தார்கள்.

காலை ஒன்பது மணிக்குள் அவ்வளவு பேரும் வந்து அணிவகுத்து நின்றார்கள். பதினொன்றரை மணிக்குப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் வந்து பார்வையிடும் வரையில் அணிவகுப்புக் கலையாமல் நல்ல வெய்யிலில் காத்திருந்தார்கள்.

அவர்களுடைய அணிவகுப்பைப் பார்த்ததில் ஜவாஹர்லால்ஜி மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவர்களுடைய கட்டுப்பாட்டைப் பாராட்டிவிட்டு, அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் நினைவூட்டிச் சில வார்த்தைகள் கூறினார்.

மேற்கூறிய தேசிய வாலிபர் அணிவகுப்பில் வந்து கலந்து கொண்டவர்கள் அடைந்த உற்சாகத்தைப் போலவே, அணிவகுப்பைப் பார்த்தவர்கள் பலரும் உற்சாகம் அடைந்தார்கள்.


சென்னை நகரில் தேசியத் தொண்டில் உற்சாகமாக ஈடுபடக்கூடிய இவ்வளவு வாலிபர்கள் இருக்கிறார்களா என்பது பலருக்கும் வியப்பை அளித்தது.

இந்த அணிவகுப்புக்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்து நடத்தி வைத்த பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீ ராஜாராம் நாயுடுவை அனைவரும் பாராட்டினார்கள்.

* * * *

ஜவாஹர்லால்ஜியின் விஜயத்துக்குப் பின்னர், சென்னை நகரில் அக்டோபர் 25உ யன்று முத்தியால்பேட்டை வாலிபர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது. சுமார் இருநூறு வாலிபர்கள் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து உற்சாகத்துடன் தேசியத் தொண்டில் ஈடுபட முன் வந்திருக்கிறார்கள். சென்னை கிராம முன்னேற்ற மந்திரி ஸ்ரீ பட்டாபிராமராவ் அவர்களுடைய தலைமையில் இவர்கள் அன்று நடத்திய ஆரம்பப் பொதுக் கூட்டத்தில் வெளியான உற்சாகத்திலிருந்து அந்தப் பகுதியிலுள்ள பொது மக்களின் ஆதரவு இந்த ஸ்தாபனத்துக்குப் பூரணமாக இருக்கும் என்பது தெரிய வந்தது.

இத்தகைய தேசிய வாலிபர் ஸ்தாபனங்கள் சென்னை மாகாணமெங்கும் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். "தேசிய இளைஞர் முன்னணி" அல்லது "தேசிய



பண்டித ஜவாஹர்லால் விஜயத்தின் போது சென்னையில் நடைபெற்ற தேசிய இளைஞர் அணிவகுப்பு. நேருஜி பேசுகிறார்.

வாலிபர் காங்கிரஸ்'' என்ற பெயருடன் ஒவ்வொரு ஜில்லாவிலும் பல ஸ்தாபனங்கள் தோன்ற வேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு பேட்டையிலும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் இத்தகைய தேசிய வாலிபர் ஸ்தாபனங்கள் ஏற்பட வேண்டும்.

பின்னர் இத்தகைய தேசிய வாலிபர் ஸ்தாபனங்களுக்கெல்லாம் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய மத்திய ஸ்தாபனம் ஒன்று அமைப்பது பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

வருஷத்துக்கு ஒரு முறை மாகாண முழுவதிலும் உள்ள தேசிய வாலிபர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஓரிடத்தில் சேர்ந்து அணிவகுப்பு நடத்துவதும், ஒருவரை யொருவர் தெரிந்து கொள்வதும், பொதுவான வேலைத் திட்டங்கள் வகுப்பதும் மிக்க உபயோகமா யிருக்கும்.

* * *

தேசிய இளைஞர் முன்னணிப் படைகளின் அவசியம் என்ன, இலட்சியமும் வேலைத் திட்டமும் என்ன—என்பவற்றை இங்கே சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்தியாவின் சுதந்திரம் எத்தனையோ நெடுங்காலம் எவ்வளவோ மகான்களும் தியாகிகளும் மூவைன்று பாடுபட்டு நமக்குத் தேடித் தந்த உயிரனிக்கும் அமுதம்.

அத்தகைய சுதந்திரத்துக்கு விரோதிகள் இந்தச் சென்னை இராஜ்யத்தில் பலர் இருக்கிறார்கள்.

பாட்டாளி மக்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு இந்தியாவை அன்னிய நாடுகளுக்கு அடிமைப்படுத்த ஒரு சாரார் தயாரா யிருக்கிறார்கள். 'சமதர்மம்' 'பொது உடைமை' என்று பேசிக் கொண்டு நாட்டில் கலகத்தையும் குழப்பத்தையும் விளைவிப்பதை இவர்கள் முக்கிய வேலைத் திட்டமாகக் கொண்டிருக்கிறார்கள்.

'திராவிட நாடு' என்றும், 'வடநாட்டுச் சுரண்டல்' என்றும் சொல்லிக் கொண்டு நாட்டின் சுதந்திரத்தைப் பறிகொடுக்க இன்னும் ஒரு சாரார் ஆயத்தமா யிருக்கிறார்கள்.

இவர்கள் நாட்டின் சுதந்திரத்தை மட்டுமல்லாமல், நமது சமயம், ஒழுக்கம், ஆலயம், வழிபாடு, கலை, பண்பாடு, இலக்கியம், சுடுபாடு எல்லாவற்றையும் ஒழித்து விட முயலுகிறார்கள்.

குறுகிய சுயநல நோக்கம் கொண்ட முதலாளிகளும் லேவாதேவிக்காரர்களும் பணக்காரர்களும் காங்கிரஸ் சர்க்காரின் திட்டங்கள் தங்களுடைய சுயநலத்துக்கு விரோதமாகத் தோன்றும்போதெல்லாம் சுதந்திர விரோதிகளுடன் சேர்ந்து சதி செய்யும் அதிசயத்தையும் காண்கிறோம்.

இத்தகைய தேச விரோதிகள்—சுதந்திர விரோதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு ஆர்வம் கொண்ட இளைஞர்கள் பலர் நாடெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து கட்டுப்பாட்டுடன் வேலை செய்வதற்கு வேண்டிய அமைப்புகள் அவசியம் தேவை.

அந்தத் தேவையைத் தேசிய இளைஞர் முன்னணி இயக்கம் பூர்த்தி செய்கிறது.

* * *

காங்கிரஸ் மகா சபையின் தற்போதைய சமுதாய முன்னேற்ற இலட்சியந்தான், தேசிய வாலிபர் முன்னணிகளின் இலட்சியமு மாகும்.

ஆதலின், காங்கிரஸ் கமிட்டிகள் புத்துயிர் பெற்று நன்றாக இயங்கி வரும் இடங்களில் தேசிய இளைஞர் முன்னணிகள் காங்கிரஸ் கமிட்டிகளுடன் ஒத்துழைத்து வேலை செய்ய வேண்டும். எந்தவிதத்

திலும் காங்கிரஸ் கமிட்டிகளுடன் முரண்பட்டு வேலை செய்யக் கூடாது; போட்டி ஸ்தாபனங்கள் என்பதாகக் காங்கிரஸ் நிர்வாகிகள் எண்ணுவதற்கும் இடம் கொடுக்கக் கூடாது.

இன்று இச்சென்னை மாகாணத்தில் பல இடங்களில் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் தூங்கி வழிந்து கொண்டிருக்கின்றன. காங்கிரஸ் மேலிடத்தாரின் விருப்பத்தின்படி பல இடங்களில் புனரமைப்புப் பெறாமல், பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருக்கின்றன. அதாவது காங்கிரஸ் கமிட்டிகளைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதிலும், புதியவர்கள் யாரையும் காங்கிரஸ் கமிட்டிகளுக்குள் விடாமல் தடுப்பதிலுமே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அத்தகைய இடங்களில் தேசிய வாலிபர் முன்னணிகள் காங்கிரஸ் கமிட்டிகள் நிறைவேற்றத் தவறும் காரியங்களைத் தாங்களே மேற்கொண்டு செய்ய வேண்டும்.

* * *

தேசிய வாலிபர் முன்னணிகளின் முக்கியமான வேலைத் திட்டம், தேச சுதந்திரத்தின் விரோத சக்திகளையும், நாட்டில் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கும் நாச சக்திகளையும், ஒழுங்கான முன்னேற்றத்தைத் தடுக்கும் பிற்போக்கு சக்திகளையும் தீவிரமாக எதிர்த்துச் சாத்வீக முறையில் போராட்டம் நடத்துவதுதான்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பொதுக் கூட்டங்கள், அணி வகுப்புகள், ஊர் வலங்கள், சுதந்திரத் திருநாள் கொண்டாட்டங்கள் முதலியவற்றை அடிக்கடி நடத்த வேண்டும்.


தேசிய முன்னணியைச் சேர்ந்த வாலிபர்களில் வாக்கு வன்மையுள்ளவர்கள் சுதந்திர விரோதிகளின் பொய்ப் பிரசாரங்களை மறுத்து மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மற்றப்படி, ஆங்காங்குள்ள வசதிகளைப் பொறுத்து, காங்கிரஸின் எல்லா ஆக்க வேலைத் திட்டங்களிலும் தேசிய இளைஞர் ஸ்தாபனங்கள் ஈடுபடலாம்.

பாரத சேவக் சமாஜத்தார் ஆரம்பித்து நடத்தும் எல்லாத் தொண்டுகளிலும் அவர்களோடு ஒத்துழைத்து வேலை செய்யலாம்.

தமிழ் நாடு முழுவதிலுமுள்ள தேசிய ஆர்வமுள்ள இளைஞர்கள் அனைவரும் ஆங்காங்கு ஒன்று சேர்ந்து, கட்டுப்பாடுள்ள ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டு, தேசத்தின் சுதந்திரத்தையும் பண்பாட்டையும் சமுதாய நலத்தையும் பாதுகாக்கும் முன்னணி வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

பழைய கதைதான்!



"மது விலக்குத் திட்டத்தை ஒழித்துவிட்டு அதிலிருந்து வரும் வருமானத்தை மற்ற திட்டங்களுக்கு வழங்க வேண்டும்" என்று திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஒருவர் யோசனை கூறினாராம்!

திருச்சியும் திரும்புகின்றது!

சென்னை இராஜ்ஜியத்தில் நாலாவது முக்கியமான நகரம் திருச்சிராப்பள்ளி. இந்த நகரத்தில் சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்கள் எல்லாரும் கோட்டை விட்டார்கள். ஏன்! திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலேயே காங்கிரஸ் முதல்தரமான தோல்வியை அடைந்தது.

திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அடியோடு அந்த ஜில்லா மக்களின் ஆதரவை இழந்து விட்டதென்பதைக் குறித்துப் பொதுத் தேர்தலுக்கு முன்னரே பல முறை எச்சரிக்கை செய்யப்பட்டது. ஒன்றும் பயன்பெறவில்லை.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு வடசேரி ஸ்ரீ பொன்னம்பலக் கவுண்டரின் தலைமையில் திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி புனர் நிர்மாணம் செய்யப் பட்டது. வேலையும் சுமாராக நடந்து வந்தது. அதன் பலனைச் சமீபத்தில் நடந்த நகரசபைத் தேர்தலில் கண்டோம்.

திருச்சி நகரசபையில் காங்கிரஸ் அபேட்சகர்கள் கணிசமான வெற்றி அடைந்திருக்கிறார்கள். காங்கிரசுக்கு எதிரான சுதந்திர விரோதிகள் முறியடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

புதிய திருச்சி நகர சபையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் பெரும்பான்மையோரா யிருப்பார்கள் என்றும், காங்கிரஸ்காரர் நகரசபைத் தலைவராக வரக்கூடும் என்றும் அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

* * *

திருச்சியை நினைத்துச் சந்தோஷப்பட்ட பிறகு, காவேரிக்கு அக்கரையிலுள்ள ஸ்ரீரங்கத்தைக் குறித்து வருத்தப்பட வேண்டியிருக்கிறது.

ஸ்ரீரங்கம் நகரசபைக்குக் காங்கிரஸின் சார்பாக நிறுத்தி வைக்கப்பட்ட அபேட்சகர்கள் படுதோல்வி அடைந்திருக்கிறார்கள்.

இதற்குக் காரணம், ஸ்ரீரங்கத்திலுள்ள காங்கிரஸ் பிரமுகர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பூசல் என்பது நமது வருத்தத்தை அதிகமாக்குகிறது.

ஸ்ரீரங்கத்திலுள்ள இரண்டு காங்கிரஸ் பிரமுகர்கள் ஸ்ரீ கே. வாசுதேவன் அவர்களும், ஸ்ரீ இ. வி. சீனிவாஸாச்சாரியார் அவர்களும்.

சென்ற பொதுத் தேர்தலில் நின்று தோல்வி அடைந்த ஸ்ரீ இ. வி. சீனிவாஸாச்சாரியாரின் பேரில் இப்போது ஸ்ரீரங்கத்தின் காங்கிரஸ் நிர்வாகம் இருந்து வருகிறது. அவர் நிறுத்திவைத்த அபேட்சகர்கள் தோற்றுப் போனார்கள்

ஸ்ரீ கே. வாசுதேவன் நிறுத்திவைத்த அபேட்சகர்கள் பெரும்பாலோர் வெற்றி பெற்றார்கள்.

இதைக் குறித்து நமக்கு எழுதியிருக்கும் ஒரு நிருபர், "ஸ்ரீ இ. வி. சீனிவாஸாச்சாரியார் காங்கிரஸின் பெயரால் நிறுத்தி வைத்தவர்கள் பலர் நேற்று வரையில் காங்கிரஸின் எதிரிகளாயிருந்தவர்கள். ஆகையால் அவர்கள் தோற்றுப்போனதே நல்லது. ஸ்ரீ கே. வாசுதேவனால் ஆதரிக்கப்பட்டவர்கள் நல்ல காங்கிரஸ் வாதிகள். ஆகையால் ஸ்ரீ கே. வாசுதேவன் கட்சியார் ஜயித்தது பற்றிச் சந்தோஷப்பட வேண்டும்" என்று எழுதியிருக்கிறார்.

அவ்வாறு சந்தோஷப்பட நாம் சித்தமாயில்லை.

காங்கிரஸ் வாதிகள் தங்கள் உட்பகைமைகளைக் கைவிட்டு, ஒற்றுமைப்பட்டு, காங்கிரஸின் பெயரால் நல்லஅபேட்சகர்களை நிறுத்தி வெற்றி அடைந்தால்தான் நாம் சந்தோஷம் அடைய முடியும்.

பூனமல்லியில் நடந்த செங்கற்பட்டு ஜில்லா மகாநாட்டில் ராஜாஜி கூறிய நன் மொழிகளைத் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள காங்கிரஸ் வாதிகளுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

பழைய தகராறுகளையும் மனஸ்தாபங்களையும் மறந்து விடவேண்டும். காங்கிரஸ் பிரமுகர்கள் ஒருவரையொருவர் காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து நீக்குவது எப்படி என்பதில் கவனம் செலுத்தக் கூடாது. பழிவாங்கும் எண்ணத்தையும் தண்டிக்கும் எண்ணத்தையும் அடியோடு விட்டுவிட வேண்டும்.

பொது மக்களிடம் செல்வாக்கு வாய்ந்த நல்ல காங்கிரஸ் வாதிகள் ஏதோ காரணத்தினால் காங்கிரஸை விட்டுப் பிரிந்து போயிருக்கலாம். அவர்கள் இப்போது திரும்பிக் காங்கிரஸுக்கு வரப் பிரியப்பட்டால், "மன்னிப்புக் கேளுங்கள்: மண்டியிட்டு வேண்டுங்கள்!" என்றெல்லாம் சொல்லாமல், இரண்டு கைகளையும் நீட்டி, வருகிறவர்களை உற்சாகமாக வரவேற்க வேண்டும்.

திருச்சியின் காற்று அருகிலுள்ள ஸ்ரீரங்கத்துக்கும் அடித்து, ஸ்ரீரங்கத்துக் காங்கிரஸைப் பற்றியும் கூடிய விரைவில் நல்ல செய்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்

வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்!

—பாரதியார்

சென்ற வாரம் ஸ்கந்த சஷ்டியை யொட்டி முருகப் பெருமான் திருவிழா தமிழ் நாட்டுச் சிவாலயங்களிலும், சுப்ரமண்ய ஸ்வாமி க்ஷேத்திரங்களிலும் வெகு அமோகமாக நடைபெற்றது. இந்த விழாவில் 'சூர சம்ஹாரம்' என்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதுண்டு. சூரபத்மன் என்ற அசுரனை, கார்த்திகேயன் வெற்றிகொண்ட கதையை அடிப்படையாகக் கொண்டது.

முருகப் பெருமான், சூரபத்மனின் தலையைத் துணிக்கிறான். உடனே அந்த இடத்தில் மாட்டுத் தலை முளைக்கிறது. மாட்டுத் தலையைத் துணிக்கிறான்; ஆட்டுத் தலை முளைக்கிறது. இப்படி எண்ணிறந்த தலைகள் தாங்கித் தாங்கிப் போர் புரிகிறான். கடைசியில் மாமரமாகி நிற்கிறான். அந்த மரத்தை முருகன், தன் வேலைக்கொண்டு துணிக்கிறான். மரம் இரண்டு கூறாகி வெறிபிடித்த சேவலாகவும், ஆக்ரோஷம் நிரம்பிய மயிலாகவும் மாறுகிறது. ஆறுமுகக் கடவுள், கோழியை யடக்கிக் கொடியில் வைத்துக் கொள்கிறான். மயிலை அடக்கித் தன் வாகனமாக ஏற்றுக் கொள்கிறான்.

இந்த நாளிலும் உலகில் பல தீய சக்திகள் பற்பல உருவங்கொண்டு ஆர்ப்பரிப்பதைப் பார்க்கிறோம். தமிழ்த் தெய்வமான வெற்றி வடிவேலன் அத்தீய சக்திகளை மீண்டும் வென்று அருள்புரிவான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்த இதழ் அட்டைப் படச் சித்திரம், மதுரைக் கோவில் சிற்பங்களிலிருந்து நமது சித்திரக் கலைஞர் மணியம் பெயர்த்து எழுதியதாகும்.

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 14

கனவு பலிக்குமா?

நந்தினி மணிமேகலையின் முக வாயைச் சற்று நிமிர்த்துப் பிடித்துக் கொண்டு அவளுடைய மலர்ந்த கண்களை ஊடுருவி நோக்கினாள்.

"என் கண்மணி! உன் அந்தரங்கத்தை நீ என்னிடம் சொல்லாமல் வைத்துக் கொள்வதே நல்லது. பார்க்கப் போனால், உனக்கு நான் பழக்கமாகி முழுமையாக ஒரு நாள்கூட ஆகவில்லை. நெடுநாள் பழகிய தோழிகளிடந்தான் அந்தரங்கத்தைச் சொல்ல வேண்டும்" என்றாள்.

"இல்லை, அக்கா! உங்களைப் பார்த்தால் எனக்கு வெகுநாள் பழக்கமான தோழிமாதிரியே தோன்றுகிறது. யாரிடமும் சொல்லாத விஷயத்தைத் தங்களிடம் சொல்லும்படி என் உள்ளம் தூண்டுகிறது. யாரிடமும் கேட்கக் கூடாத காரியத்தைத் தங்களிடம் கேட்கும் தைரியமும் உண்டாகிறது......"

"அப்படியானால் கேளடி, கண்ணே!"

"உருவெளித் தோற்றம் என்று கதைகளில் சொல்லுகிறார்களே, அது உண்மையாக ஏற்படக் கூடுமா, அக்கா? நம் எதிரில் ஒருவர் இல்லாதபோது அவர் இருப்பது போலவே தோன்றுமா?"

"சில சமயங்களில் அப்படித் தோன்றும். ஒருவரிடம் நாம் அதிகமான ஆசை வைத்திருந்தால், அவருடைய உருவம் எதிரில் இல்லாவிட்டாலும் இருப்பது போலத் தோன்றும். ஒருவரிடம் அதிகமான துவேஷம் வைத்திருந்தால் அவருடைய உருவமும் தோற்றம் அளிக்கும். மாயக் கண்ணனுடைய கதை நீ கேட்டதில்லையா, மணிமேகலை? ஏன்? நாடகம் கூடப் பார்த்திருப்பாயே? கம்ஸனுக்குக் கிருஷ்ணனின் பேரில் ரொம்பத் துவேஷம். ஆகையால் கண்ட இடமெல்லாம் கிருஷ்ணனாகத் தோன்றியது; கத்தியை வீசி வீசி ஏமாந்து போனான். நப்பின்னை என்னும் கோபிகைக்குக் கண்ணன் மீது ரொம்ப ஆசை. அவளுக்கும் கண்ணன் உருவம் இல்லாத இடத்திலெல்லாம் தோன்றுமாம். தூணையும் மரத்தையும் நதியின் வெள்ளத்தையும் கண்ணன் என்று கட்டித் தழுவிக் கொள்ளப் போய் ஏமாற்றமடைவாளாம்! அடியே, மணிமேகலை! உன்னை அந்த மாதிரி மயக்கி விட்ட மாயக் கண்ணன் யாரடி?"

"அக்கா! முதன் முதலாக நாலு மாதத்துக்கு முன்னால்தான் அவரை நான் நேரில் பார்த்தேன். அதற்கு முன்னால் என் தமையன் கந்தமாறன் அவரைப் பற்றி அடிக்கடி சொல்லியிருந்தான். அப்போதெல்லாம் அவர் உருவம் என் கண் முன் தோன்றுவதில்லை. ஒரு தடவை பார்த்த பிறகு அடிக்கடி என் கனவில் அவர் தோன்றி வந்தார். பகலிலும் சில சமயம் எதிரில் அவருடைய உருவம் நிற்பது போலிருக்கும்......"

"நேற்றுக்கூட அந்த மாயாவியின் உருவெளித் தோற்றத்தை நீ கண்டாய் அல்லவா?"

"ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"என்னிடம் மந்திர சக்தி உண்டு என்பதைப் பற்றி உனக்கு யாராவது சொல்லவில்லையா?......"

"ஆம்; சொன்னார்கள். அது உண்மை தானா, அக்கா?"

"நீயே பரீட்சித்துத் தெரிந்து கொள். உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த யௌவன சுந்தர புருஷன் யார் என்று வேண்டுமானால், என் மந்திர சக்தியினால் கண்டு சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள், பார்க்கலாம். எனக்கும் அவர் பெயரைச் சொல்லக் கூச்சமாயிருக்கிறது."

நந்தினி சிறிது நேரம் கண்ணிமைகளை மூடிக் கொண்டிருந்து விட்டுத் திறந்து, "உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஆசைக் காதலன் வாணர் குலத்தில் வந்த வல்லவரையன் வந்தியத் தேவன்! இல்லையா?" என்றாள்.

"அக்கா! உங்களிடம் மந்திர சக்தி இருப்பது உண்மைதான்!" என்றாள் மணிமேகலை.

"அடி, பெண்ணே! எப்போது உன் உள்ளத்தை அவ்வளவு தூரம் ஒருவருக்குப் பறிகொடுத்து விட்டாயோ, அப்போது ஏன் உன் தமையனிடம் அதைப் பற்றிச் சொல்லவில்லை? மதுராந்தகருக்கு ஆசை காட்டுவானேன்? கரிகாலரை இங்கே தருவித்து வீண் பிரயத்தனம் செய்வானேன்? என்னை அநாவசியமாக இங்கே வரவழைப்பானேன்?"

"அக்கா! என் தமையன் கந்தமாறனுக்கு அவரைப் பிடிக்கவில்லை......"

"அழகாயிருக்கிறது! உன் தமையனா கலியாணம் செய்து கொள்ளப் போகிறான்? ஆனால் கந்தமாறன்தானே வந்தியத் தேவனைப் பற்றி உனக்குச் சொன்னான் என்றாய்? இங்கே அவனைக் கூட்டிக் கொண்டு வந்ததும் உன் தமையன் தானே?"

"ஆமாம்; கந்தமாறன்தான் அவரைப் பற்றிச் சொன்னான். அந்தப்புரத்துக்கு ஒரு நாளைக்கு அழைத்துக் கொண்டும் வந்தான். ஆனால் பிற்பாடு அவன் மனம் மாறி விட்டது. அதற்குக் காரணமும் இருக்கிறது. தஞ்சாவூரில் என் தமையனை அவர் கத்தியால் முதுகில் குத்தி விட்டாராம், அக்கா! உங்கள் அரண்மனையிலே என் தமையன் காயத்தோடு படுத்துக் கிடந்தானாமே? உங்கள் அன்பான பராமரிப்பினால்தான் அவன் உயிர் பிழைத்து எழுந்தானாமே?"

"நான் செய்ததை உன் தமையன் அதிகப் படுத்திக் கூறுகிறான். அது போனால் போகட்டும். இப்போது நீ





என்ன செய்வாய்? உன் மனத்தைக் கவர்ந்தவன் இப்படி உன் தமையனுக்கு விரோதியாகி விட்டானே?''

''ஆனால் இவர் என்ன சொல்கிறார், தெரியுமா?......''

''இவர் என்றால், யார்?''

''அவர்தான்! நீங்கள் சற்று முன் பெயர் சொன்னீர்களே, அவர்தான்! கந்தமாறனை அவர் குத்தவேயில்லை யென்று ஆணையிடுகிறார். வேறு யாரோ குத்தித் தஞ்சாவூர் கோட்டை மதில் ஓரத்தில் போட்டிருந்தார்கள் என்றும், அவர் எடுத்துக் கொண்டு போய்க் காப்பாற்றியதாகவும் சொல்லுகிறார்...''

''இதை எப்போதடி அவர் உனக்குச் சொன்னார்?''

''நேற்றுத்தான்!......''

''நேற்று அந்த வந்தியத் தேவனை நீ நேரில் பார்த்தாயா, என்ன? அவனுடைய உருவெளித் தோற்றத்தைக் கண்டதாக வல்லவா கூறினாய்?''

''அதுதான் அக்கா, எனக்கு ஒரே மனக் குழப்பமா யிருக்கிறது. நேற்று நான் பார்த்தது அவரா, அல்லது அவருடைய உருவெளித் தோற்றமா என்று தெரியவில்லை. நேற்று நடந்தவற்றை எண்ணினால், எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கிறது. அக்கா! சில சமயம் மனிதர்கள் செத்துப்போனால் அவர்களுடைய ஆவி வந்து பேசும் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா?''—இந்தக் கேள்வியைக் கேட்டபோது மணிமேகலையின் குரலில் அளவிலாத பீதி தொனித்தது.

நந்தினியின் உடலும் நடுங்கிற்று. எங்கேயோ உச்சி மோட்டைப் பார்த்த வண்ணம் ''ஆம்; அது உண்மைதான்! அற்பாயுளில் மாண்டவர்களின் ஆவி அப்படி உயிரோடிருப்பவர்களை வந்து சுற்றும். ஒருவருடைய தலையை வெட்டிக் கொன்று விட்டார்கள் என்றால், சில சமயம் தலைமட்டும் வரும். சில சமயம் உடம்பு மட்டும் தனியாக வரும். இன்னும் சில சமயம் இரண்டும் தனித் தனியாக வந்து 'பழி வாங்கினாயா?' என்று கேட்கும்!'' என்றாள்.

பிறகு மணிமேகலையைப் பார்த்து உரத்த குரலில், ''அடி பெண்ணே! நீ எதற்காக இந்தக் கேள்வி கேட்டாய்! உன் காதலனுக்கு அப்படி ஏதாவது நேர்ந்திருக்கும் என்று பயப்படுகிறாயா?

உன் மனதில் இந்தச் சந்தேகத்தை யார் கிளப்பி விட்டார்கள்?" என்றாள்.

"இந்த அரண்மனையின் ஆவேசக்காரன் ஒருவன் இருக்கிறான். அவனைக் கூப்பிட்டு அனுப்பினேன். அவனை யாரோ நேற்றிரவு அடித்துப் போட்டு விட்டார்களாம். அவனுக்குப் பதிலாக அவன் பெண்டாட்டி தேவராட்டி வந்தாள். அவள் தான் சொன்னாள்......"

"சீச்சீ! அதையெல்லாம் நீ நம்பாதே!"

"எனக்கும் நம்பிக்கைப் படவில்லை. வெறும் ஆவி வடிவமாயிருந்தால், தொட முடியாதல்லவா, அக்கா!"

"ஆவியையும் தொட முடியாது; உருவெளித் தோற்றத்தையும் தொட முடியாது. நீ ஏன் கேட்கிறாய்! உன் உள்ளத்தைக் கவர்ந்தவனை நீ நேற்றுத் தொட்டுப் பார்த்தாயா, என்ன?"

"அதுதான் ஒரே குழப்பமாயிருக்கிறது. தொட்டுப் பார்த்தது போலவும் இருக்கிறது; ஆனால் வேறு சில விஷயங்களை நினைத்துப் பார்த்தால் சந்தேகமாகவும் இருக்கிறது."

"நேற்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லடி, பெண்ணே! நான் உன் சந்தேகத்தை நிவர்த்தி செய்கிறேன்!"

"ஆகட்டும், அக்கா! நான் ஏதாவது முன் பின்னாக உளறினால் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்றாள் மணிமேகலை. பிறகு அவள் கூறினாள் :—"நேற்று நான் கிட்டத்தட்ட இதே நேரத்தில் இங்கே இருந்தேன். என் தமையன் சொல்லிப் போயிருந்தபடி தங்களுக்கு இங்கே வேண்டிய சௌகரியம் எல்லாம் பணிப்பெண்கள் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று கவனிப்பதற்காக வந்தேன். ஒருமுறை, இதோ இருக்கும் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்!......"

"உன் அழகை நீயே பார்த்துக் கொண்டிருந்தாயாக்கும்..."

"அப்படியொன்றும் இல்லை, அக்கா! என் முக இலட்சணம் எனக்குத் தெரியாதா, என்ன?"

"உன் முக லட்சணத்துக்கு என்ன குறைவு வந்தது? ரதியும் இந்திராணியும் மேனகையும் ஊர்வசியும் உன்னைப் பார்த்துப் பொறாமைப் படமாட்டார்களா?"

"அவர்கள் எல்லாரும் உங்கள் கால் தூசி பெற மாட்டார்கள், அக்கா!"

"சரி, சரி! மேலே சொல்! கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாய்......"

"அப்போது திடீரென்று இன்னொரு முகம் கண்ணாடியில் தெரிந்தது. என் முகத்துக்கு அருகில் தெரிந்தது..."

"அது உன் காதலன் முகந்தானே!"

"ஆமாம்; எனக்குத் தூக்கி வாரிப் போட்டது..."

"எதற்காகத் தூக்கிவாரிப் போட வேண்டும்? நீதான் அடிக்கடி அவனுடைய முகத்தைக் கனவில் பார்ப்பதுண்டு என்று சொன்னாயே? உருவெளித் தோற்றத்தைக் காண்பதுண்டு என்றும் கூறினாயே?"

"அதற்கும் இதற்கும் கொஞ்சம் வித்தியாசம் இருந்தது. கனவில் வரும்போது எதிரே சற்றுத் தூரத்தில் தெரியும். உருவெளித் தோற்றத்திலும் அப்படித்தான். ஆனால் இங்கே பின்னாலிருந்து, —சொல்லக் கூச்சமாயிருக்கிறது......"

"பாதகமில்லை, சொல்லடி கள்ளி!"

"பின்னாலிருந்து கன்னத்தில் முத்தமிட வருகிறதைப் போல் இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் இல்லை. பிறகு கண்ணாடியிலும் அந்த முகம் தெரியவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. இந்த அறைக்குப் பக்கத்தில் உள்ள வேட்டை மண்டபத்தின் இரகசியக் கதவை உங்களுக்குத் திறந்து காட்டினேன் அல்லவா? நேற்று, கண்ணாடி அந்தக் கதவுக்கு நேரே வைத்திருந்தது. ஆகையால் அந்தக் கதவைத் திறந்து வேட்டை மண்டபத்திலிருந்து யாராவது எட்டிப் பார்த்திருப்பார்களோ என்று தோன்றியது. அப்படியிருக்க முடியாது என்றும் எண்ணினேன். அன்னிய புருஷன் ஒருவன் அந்த வேட்டை மண்டபத்தில் எப்படி வந்திருக்க முடியும்? ஆயினும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கதவைத் திறந்து வேட்டை மண்டபத்துக்குள் போய்ப் பார்த்தேன்..."

நந்தினி இதற்குள் ஆர்வத்துடன் கேட்கத் தொடங்கியிருந்தாள். "வேட்டை மண்டபத்தில் அந்தத் திருடன் ஒளிந்திருந்தானா? அகப்பட்டுக் கொண்டானா?" என்று கேட்டான்.

"என்ன அக்கா, அவரைத் 'திருடன்' என்கிறீர்களே?"

"திருடன் என்றால், நிஜத் திருடனா? உன் மனத்தைக் கவர்ந்த திருடனைச்

சொன்னேன் அடி! அவன் வேட்டை மண்டபத்தில் இருந்தானா?"

"அதுதானே அதிசயம்! அவர் அங்கே இல்லை. அதற்குப் பதிலாக எங்கள் அரண்மனைப் பணியாள் இடும்பன்காரி அந்த அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய முகம் அய்யனார் கோவில் வாசலில் உள்ள காடு வெட்டிக் கருப்பன் முகம் மாதிரி இருக்கும். 'இங்கே வேறு யாராவது வந்ததுண்டா?' என்று கேட்டேன். 'இல்லை' என்று சாதித்து விட்டான்..."

"அவன் பொய் சொல்லியிருப்பான் என்று கருதுகிறாயா?"

"அது என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் இன்னொரு ஆள் அந்த மண்டபத்தில் ஒளிந்திருப்பதாகத் தோன்றியது 'திருட்டு தானே வெளியாகட்டும்' என்று நான் இந்த அறைக்குத் திரும்பி வந்து விட்டேன்..."

"திருட்டு வெளியாயிற்றா?"

"கேளுங்கள்! நான் இந்த அறைக்குள் வந்து வேட்டை மண்டபத்துக்குள் ஏதாவது பேச்சுக் குரல் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தேன். பேச்சுக் குரல் கேட்டது. தடபுடலாக ஏதோ விழுகிற சத்தமும் கேட்டது. நான் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே இந்தக் கதவு அசைந்தது. நான் விளக்கை மறைத்து வைத்து விட்டுக் காத்துக் கொண்டிருந்தேன். இந்தக் கதவிலேயே வட்டமான ஒரு சிறிய உட்கதவு இருக்கிறது. அதைத் திறந்து கொண்டு ஓர் உருவம் இங்கே வரப் பார்த்தது. 'அபயம்! அபயம்! என்னைக் காப்பாற்று!' என்று குரல் கேட்டது. குரலும் உருவமும் அவரைப் போல் தோன்றியபடியால், அவர் இந்த அறையில் வருவதற்கு உதவி செய்து விட்டு விளக்கைப் போட்டேன். பார்த்தால் அவரேதான்!"

"மணிமேகலை! இது என்ன அதிசயமடி! விக்கிரமாதித்யன் கதையைப் போல அல்லவா இருக்கிறது?"

"இன்னும் கேளுங்கள்! நாலு மாதமாகக் கனவில் கண்டு வந்தவரை நேரில் பார்த்ததும் என் உள்ளம் பூரித்தது; உடம்பு சிலிர்த்தது. ஆனால் கள்ளக் கோபத்துடன் அவரிடம் பேசினேன். 'பெண்கள் வசிக்கும் அந்தப்புரத்தில் எப்படி அவர் திருட்டுத் தனமாகப் பிரவேசிக்கலாம்?' என்று கேட்டேன். அவரைக் கொல்லுவதற்காக யாரோ சிலர் துரத்திக் கொண்டு வருவதாகக் கூறினார். 'உயிருக்குப் பயந்தோடும் பயங்கொள்ளி' என்று பரிகசித்தேன். அதற்குத் தம்மிடம் ஆயுதம் இல்லை என்று சமாதானம் கூறினார். பிறகுதான் என் தமையனை அவர் முதுகில் குத்தியதைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். 'இல்லவே இல்லை' என்று சத்தியம் செய்தார், அக்கா!"

"நீயும் அதை நம்பி விட்டாயாக்கும்!"

"அப்போது நம்பும்படியாகத் தான் இருந்தது. ஆனால் பிறகு நடந்ததையெல்லாம் யோசிக்கும் போது எதை நம்புவது. எதை நம்பாமலிருப்பது என்றே தெரியவில்லை......"

"பிறகு இன்னும் என்ன அதிசயம் நடந்தது?"

"அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போதே என் ஒரு காதினால் அடுத்த அறையில் ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தேன். பல பேர் நடமாடும் சத்தமும் பேச்சுக் குரல்களும் கேட்டன. ஆகையால் அவரைக் கொல்வதற்கு யாரோ தொடர்ந்து வருகிறார்கள் என்பது உண்மையாகவே இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன். கேளுங்கள், அக்கா! அந்தச் சமயத்தில் இந்தப் பேதை மனம் எப்படியாவது அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி கொண்டது. அவரைக் கொல்ல வருகிறவர்கள் யார் என்றும் தெரிந்து கொள்ள விரும்பினேன். இடும்பன்காரி இதற்கெல்லாம் உட்கையாக இருப்பானா, அப்படியானால் அவன் இவருக்கு உட்கையா, இவரைக் கொல்ல வருகிறவர்களுக்கு உட்கையா என்றும் அறிய விரும்பினேன். வேட்டை மண்டபத்துக்குள் வரும் இரகசியச் சுரங்க வழி இவ்வளவு பேருக்குத் தெரிந்திருப்பதை நினைத்துத் திகில் உண்டாயிற்று. அதிலும் நீங்கள் இங்கே தங்கப் போகிறீர்கள் என்பதை எண்ணிய போது கவலை அதிகமாயிற்று. தகப்பனாரைக் கூப்பிட்டனுப்பலாம் என்று நினைத்தால், அதற்கும் தைரியம் வரவில்லை. இவர் அந்தப்புரத்துக்குள் வந்திருப்பதைத் தகப்பனார் பார்த்தால், உடனே இவர் உயிருக்கே ஆபத்து வந்து விடும். ஆகையால் இவரை இங்கேயே சற்று இருக்கும்படி சொல்லிவிட்டு,

வேட்டை மண்டபத்திற்குள் இருப்பவர்கள் யார் என்று பார்த்துவிட்டு வருவதற்காகக் கதவைத் திறந்து கொண்டு போனேன். உள்ளே ஐந்தாறு ஆட்கள் மூலைக்கு மூலை சுவர் ஓரமாக இருந்தார்கள். என்னைப் பார்த்து விட்டு அவர்கள் பிரமித்து நின்றதாகத் தோன்றியது. அவர்களை அவ்விதம் பார்த்ததில் என் மனத்திலும் சிறிது பயம் உண்டாயிற்று. அந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டு கடுங் கோபத்தை வரவழைத்துக் கொண்டு அவர்கள் யார் என்று கேட்பதற்காக வாய் எடுத்தேன். இதற்குள், இந்த அறையில் என் தோழி சந்திரமதி மற்றொரு கதவு வழியாகப் புகுந்து 'அம்மா! அம்மா!' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தாள். இவர் இங்கே இருப்பது எனக்கு உடனே நினைவு வந்தது. சந்திரமதி இவரைப் பார்த்துவிட்டுக் கூச்சல் போடப்போகிறாளே என்று பயந்து போனேன். வேட்டை மண்டபத்துக்குள் இருப்பவர்களை மறுபடி பார்த்துக் கொள்ளலாம் என்று திரும்பினேன். சந்திரமதியையும் வழி மறித்து அழைத்துக் கொண்டு இந்த அறைக்குள் வந்து பார்த்தேன். இங்கே அவரைக் காணவில்லை. மாயமாய் மறைந்து போய் விட்டார்.. 'யாராவது இங்கே இருந்தார்களா?' என்று சந்திரமதியைக் கேட்டேன். தான் பார்க்கவில்லை என்றாள். இன்னும் சிறிது தேடிப் பார்த்துவிட்டு மறுபடி வேட்டை மண்டபத்துக்குள் போனேன். அங்கேயும் நான் சற்று முன் பார்த்தவர்கள் யாரும் இல்லை. இடும்பன்காரி மாத்திரம் முன் போலவே அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். 'சற்று முன்னால் இங்கே வந்திருந்தவர்கள் யார்? அவர்கள் இப்போது எங்கே?' என்று கேட்டேன். இடும்பன்காரி 'இங்கே ஒருவருமே வரவில்லையே, அம்மா!' என்று ஒரே சாதிப்பாகச் சாதித்தான். அவன் வார்த்தையை என்னால் நம்ப முடியவில்லை. என் தோழி சந்திரமதியோ என்னைப் பரிகாசம் பண்ண ஆரம்பித்து விட்டாள். 'அக்கா! இன்றைக்கு உங்களுக்கு ஏதோ சித்தப் பிரமை தான் பிடித்திருக்கிறது! ஆள் இல்லாத இடங்களி லெல்லாம் ஆள் இருப்பதாகத் தோன்றுகிறது!' என்றாள். பிறகு நீங்கள் எல்லாரும் கோட்டை வாசலை நெருங்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தாள். தங்களை வரவேற்பதற்காக என்னை என் தந்தை உடனே அழைத்துவரச் சொன்னதாகவும் கூறினாள். உடனே நான் அரண்மனை வாசலுக்குப் புறப்பட்டேன். சீக்கிரம் அங்கே வந்துவிடுவதற்காகச் சந்திரமதி வந்த நடையில் சென்று இரண்டு கட்டுக்களைத் தாண்டி மச்சுப்படி வழியாக ஏறி மேல் மாடத்தில் நடந்து போனேன். அப்போது மறுபடியும் ஓர் அதிசயத்தைப் பார்க்க நேர்ந்தது. அந்த வாணர்குலத்து வீரர் நிலா முற்றத்தைக் கடந்து மதில் சுவர் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார். சுவரில் ஒரு மூங்கில் கழியை வைத்து ஏறி மதிள் சுவரைத் தாண்டிக் குதிப்பதையும் பார்த்தேன். என் கண்களுக்கு அவ்வாறு தோன்றியது. அவையெல்லாம் உண்மையாக நடந்தவையா அல்லது என் சித்தப் பிரமையா என்று இன்னமும் எனக்கு நிச்சயமாகவில்லை..."

நந்தினி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அந்த மாளிகை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அடர்ந்த மரங்களுக்கிடையே நேற்று மாலை அவள் பார்த்த இரு முகங்கள் அவள் மனக்கண் முன் தோன்றின. அவர்களைப் பிடிப்பதற்குக் குதிரை ஆட்கள் ஏவப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அவர்கள் ஒருவேளை இதற்குள் பிடிபட்டிருப்பார்களா? பிடி பட்டிருந்தால் இங்கே கொண்டு வரப்படுவார்களா?......

"அக்கா! உங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டு, நந்தினியின் சிந்தனையைத் தடை செய்தாள் மணிமேகலை.

"எனக்கா! எனக்குத் தோன்றுகிறதையா கேட்கிறாய்? உனக்கு மோகப் பித்தம் நன்றாகத் தலைக்கு ஏறியிருக்கிறது என்று தோன்றுகிறது" என்றாள் நந்தினி.

"சந்திரமதியைப் போல் நீங்களும் பரிகாசம் செய்கிறீர்களா?"

"நான் பரிகாசம் செய்யவில்லையடி! நேரில் பார்த்துப் பேசிய உனக்கே உண்மையா, கனவா, சித்தப் பிரமையா என்று தெரியவில்லையே? நான் எப்படிச் சொல்ல முடியும்? இந்த அறையிலிருந்து வெளியேறிப் போவதற்கு வேறு ஏதேனும் இரகசிய வழி இருக்கிறதா?"

"எனக்குத் தெரிந்த வரையில் வேறு இரகசிய வழி இல்லை, அக்கா!"

"நீயும் சந்திரமதியும் போன வழியில் அவனும் போய் மச்சுப்படி ஏறிப் போயிருக்கலாம் அல்லவா?"

"அங்கே வழியில் பல பணிப்பெண்கள் இருந்தார்கள், அக்கா! அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்க முடியாது."

"அதிசயமாகத்தா னிருக்கிறது......... இதையெல்லாம் பற்றி உன் தகப்பனு ரிடம் நீ தெரிவிக்கவில்லையா?"

"தெரிவிக்கவில்லை, அக்கா! தகப்பனு ரிடம் சொல்லக் கூச்சமாகவும் இருக் கிறது; பயமாகவும் இருக்கிறது. ஒரு வேளை அவர் இங்கே வந்திருந்த தெல் லாம் உண்மையாக இருந்தால்......"

"ஆமாம்; புருஷர்களிடம் இதைப் பற்றி யெல்லாம் சொல்லாமலிருப்பதே நல்லது. அவர்களுக்குச் சொன்னாலும் புரியாது......"

"என் தமையனிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண் டிருக்கிறேன்......"

"அவனிடம் சொன்னால் கட்டாயம் ரகளையாக முடியும். உன் தமையனுக்கு இப்போது எப்படியாவது உன்னைக் கரி காலனுக்குக் கலியாணம் பண்ணிவைத்து விடவேண்டும் என்றிருக்கிறது!......"

"அக்கா! நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். கந்தமாறனுக்கு உங்க ளிடம் ரொம்ப விசுவாசம். நீங்கள் சொன்னால் கேட்பான்......"

"அடி பெண்ணே! நான் எந்த நோக் கத்துடன் இங்கே வந்தேனோ, அதற்கு விரோதமாக என்னுடைய உதவியையே கேட்கிறாயே? வெகு கெட்டிக்காரி நீ! அப்படியே கரிகாலருக்கு உன்னை மணம் செய்து கொடுக்கும் யோசனையைக் கை விட்டாலும், மற்றவனைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதே? அவன் உன்னை விரும்புவான் என்பது என்ன நிச்சயம்?"

"அதைப்பற்றி நான் கவலைப்பட வில்லை, அக்கா! அவர் என்னை விரும்பி னாலும் விரும்பா விட்டாலும்......"

"பெண்களின் தலை எழுத்தே அப்ப டித்தான் போலும்! புருஷர்கள் எப்படி நடந்து கொண்டாலும், பெண்கள் அவர் களுக்காக உயிரை விட வேண்டிய தென்று ஏற்பட்டிருக்கிறது! ஏதோ உன் அதிர்ஷ்டம் எப்படி இருக்கிற தென்று பார்க்கலாம். மறுபடியும் நேற்று மாதிரி ஏதேனும் நேர்ந்தால் என் னிடம் சொல்வாய் அல்லவா?"

"உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது அக்கா! நேற்றிரவு ஒரு கனவு கண்டேன்; அதையும் சொல்லிவிட விரும்புகிறேன்......"

"பகற் கனவு கண்டது போதாது என்று, இரவிலும் வேறு கனவு கண் டாயா? அது என்ன? மறுபடியும் அவன் கனவில் வந்து உன்னை ஏமாற்றி விட்டுப் போனானா?"

"இல்லை, இல்லை! இது வேறு விஷயம். நினைக்கவே பயங்கரமா யிருக்கிறது. காலை நேரத்தில் காணும் கனவு பலிக்கும் என்கிறார்களே? அது உண்மைதானா, அக்கா!"

"கனவைச் சொல் கேட்கலாம்! வேறு விஷயம் என்றால், இன்னும் யாரை யேனும் பற்றிக் கனவு கண்டாயா?"

"இவரைப் பற்றித்தான்! இவரை யாரோ ஒருவன் கத்தியால் குத்த வரு கிறது போல் இருந்தது. இவர் கையில் ஆயுதம் ஒன்றும் இல்லை. ஆனால் தரை யிலே ஒரு கத்தி பளபள வென்று மின் னிக் கொண்டு கிடந்தது. நான் அதைத் தாவி எடுத்துக் கொண்டு பாய்ந்தேன். இவரைக் குத்த வருகிறவனை நான் முத லில் குத்தி விடுவது என்ற எண்ணத் துடன் ஓடினேன். அருகில் சென்றதும் அவனுடைய முகம் தெரிந்தது. அவன் என் தமையன் கந்தமாறன்!......'ஓ!' என்று அலறிக் கொண்டு விழித்தெழுந் தேன். என் உடம்பெல்லாம் வியர்வை யினால் சொட்ட நனைந்திருந்தது. வெகு நேரம் என் கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. கனவு அவ்வளவு நிஜம் போல இருந்தது. இது ஒரு வேளை பலித்து விடுமா, அக்கா!"

"அடி பெண்ணே! உன் மனம் உண் மையிலேயே குழம்பிப் போயிருக்கிறது. நிஜமாக நடந்தது பிரமை போலத் தோன்றுகிறது. கனவிலே கண்டது நிஜம்போலத் தோன்றுகிறது! நல்ல தோழி எனக்குக் கிடைத்தாய்! நான் தான் பைத்தியக்காரி என்றால், நீ என்னை விட ஒரு படி மேலே போய்விட்டாய்!" என்றாள் நந்தினி.

இந்தச் சமயத்தில் சந்திரமதி உள்ளே வந்தாள். "அவர்கள் வந்து கொண் டிருக்கிறார்களாம்! வீர நாராயண ஏரி யைத் தாண்டி வந்து விட்டார்களாம்!" என்று தெரிவித்தாள். (தொடரும்)

யமனை எளிதில் வெல்லலாம்

ரா. கி.

"நமனை அஞ்சோம்" என்று நாவுக்கரசர் கர்ஜனை செய்தார். "காலா! உன்னைக் காலால் உதைப்பேன்!" என்று பாரதியார் ஒரு பெரிய போடாகப் போட்டார். பரமசிவன், யமனையும் அவனுடைய எருமைக் கடாவையும் சேர்ந்து விரட்டி மார்க்கண்டனைக் காப்பாற்றினார்.

இவையெல்லாம் அவ்வளவு பிரமாதமான காரியங்கள் அல்ல என்பதைச் சமீபத்தில் நான் தெரிந்து கொள்ள நேர்ந்தது.

சொற்ப செலவிலும், சுலபமான பிரயத்தினத்திலும் ஆயிரக் கணக்கான மக்களின் உயிரைப் பஞ்சம் என்னும் யமன் கொள்ளை கொள்ளாமல் காப்பாற்றலாம் என்பதை நேரில் கண்டறிந்தேன்.

* * *

பழைய தேச பக்தரும், பாரதி சங்கத்தின் காரியதரிசியுமான ஆக்கூர் அனந்தாச்சாரியார் ஒருநாள் என்னைச் சந்தித்து, "பஞ்சத்தைப் பார்க்க வாருங்கள்!" என்றார். "எல்லாம் வேண்டிய பஞ்சம் பார்த்திருக்கிறேன்" என்று சொன்னேன். "எங்கள் ஊர்ப் பஞ்சத்தைப் பார்க்க வரக் கூடாதா!" என்று கேட்டார். "உங்கள் ஊர்ப் பஞ்சத்தில் தனி விசேஷம் என்ன! வர முடியாது!" என்றேன்.

"எல்லாரும் இப்படித்தான் சொல்லுகிறார்கள். ஸினிமாவிலே பஞ்சத்தைப் பார்ப்பதற்குப் பணம் கொடுத்துப் போகிறார்கள். நிஜப் பஞ்சத்தைப் பார்ப்பதற்கு வர மறுக்கிறார்கள்!" என்று ஆக்கூர் வருத்தப் பட்டார்.

"ஸினிமாவிப் பஞ்சத்தில் அடிபட்ட கதாநாயகி டப்பா சங்கீத மெட்டில் பின்னணி வாத்திய முழக்கத்துடன் பாடுகிறாள்; தன் குழந்தைகளுக்கும் பாட்டுப் பாடிப் பிச்சை கேட்பதற்குச் சொல்லிக் கொடுக்கிறாள். உங்கள் ஊர் நிஜப் பஞ்சத்தில் அப்படிச் செய்கிறார்களா!" என்று கேட்டேன்.

"பின், என்னதான் சொல்லுகிறீர்!" என்று ஆக்கூர் கோபித்துக் கொண்டார்.

"பஞ்சத்தைப் பார்க்க வர முடியாது. பஞ்ச நிவாரண வேலை ஏதாவது தொடங்குவதாயிருந்தால் சொல்லுங்கள், வருகிறேன்" என்றேன்.

* * *

இரண்டொரு நாளைக்குப் பிறகு மறுபடியும் ஆக்கூர் அனந்தாச்சாரி வந்தார். தம்முடன் மற்றும் இருவரையும் அழைத்து வந்தார். அவர்கள் அன்னதான சிவன் ஞாபகார்த்த சங்கத்தைச் சேர்ந்த ஆடிட்டர் ஸ்ரீ சூரி அவர்களும், காரியதரிசி ஸ்ரீ டி. எல். ராமநாதனும்.

"இவர்கள் செங்காடு என்கிற கிராமத்தில் பஞ்ச நிவாரணக் கஞ்சி தர்மம் தொடங்க முன் வந்திருக்கிறார்கள். அதைப் பார்க்கவாவது வருகிறீரா!" என்று ஆக்கூர் கேட்டார்.

மறு வார்த்தையின்றி "வருகிறேன்" என்று ஒப்புக் கொண்டேன்.

* * *

அக்டோபர் 19-ல் காலை சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றோம். "ஸண்டே டைம்ஸ்" பத்திரிகையைச் சேர்ந்த இரு நண்பர்களும் எங்களுடன் வந்தார்கள்.

காஞ்சீபுரம் வரைக்கும் சமீபத்தில் நல்ல மழை பெய்து பூமி நீர்வளத்துடன் திகழ்ந்தது. அதற்கப்புறம் போகப் போக, வறட்சி அதிகமாகி வந்தது. ராணிப்பேட்டை நெருங்கும்போது பூமி கட்டாந்தரையாகி விட்டது.

ராணிப்பேட்டையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் செங்காடு என்னும் கிராமம் இருக்கிறது. பெரிய ரோட்டிலிருந்து குறுக்குப் பாதையில் இரண்டு மைல் கட்டை வண்டியில் போகவேண்டும். இந்தக் குறுக்குப் பாதையில் ஒரு கிராமம் பாழடைந்த தோற்றத்துடன் காணப்பட்டது. அந்தக் கிராமத்தின் பெயர் சின்னத் தகரக் குப்பம் என்று அறிந்தேன்.

எங்களுடன் வந்த வாலாஜா தாலுகா விவசாயிகள் சங்கக் காரியதரிசி ஸ்ரீ வி.பி. திருவேங்கட முதலியார் சொன்னார்:—"இந்த ஊரில் 40 வீடுகள் இருக்கின்றன. நாற்பது வீடுகளிலும் குடும்பங்கள் இருந்தன. இப்போது நாலு வீடுகளில் தான் குடும்பங்கள் இருக்கின்றன. மற்ற 36 வீடுகள் காலி!" என்றார்.

கிணறுகள் அடியோடு வறண்டு போய்க் குடி தண்ணீர்கூட இல்லாமற் போனபடியால் 36 குடித்தனங்கள் ஊரை விட்டுப் போய்விட்டன என்று தெரிந்தது.

"அவர்கள் எல்லாரும் எங்கே போனார்கள்!" என்று கேட்டேன்.

"பாதிப்பேர் இந்த ஜில்லாவிலேயே சற்று வசதியுள்ள பிரதேசங்களுக்குப் போயிருக்கிறார்கள். பலர் மைசூர் ராஜ்யத்துக்குப் போயிருக்கிறார்கள்!"

இதைக் கேட்டதும், பத்திரிகைகளிலே மைசூர் மந்திரி ஒருவர் கூறிய புகார் வெளியாகியிருந்தது நினைவுக்கு வந்தது.

"எதற்காக மைசூருக்குப் போயிருக்கிறார்கள்! அங்கேயுந்தான் பஞ்சம் என்று கேள்விப் படுகிறோமே!" என்று கேட்டேன்.

"ஊரை விட்டுப் போனவர்களில் பலர், சொந்த நிலத்தில் பயிர் செய்து கௌரவமாக ஜீவனம் செய்து கொண்டிருந்தவர்கள். அக்கம் பக்கத்திலேயே கூலி வேலை செய்வதற்குப் பிடிக்காமல் கண்காணாத தூர தேசத்துக்குப் போகலாம் என்று போனார்கள். போன இடங்களில் வேலை கிடைக்காமல் பலர் கஷ்டப்படுகிறார்கள். சிலர் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பிச்சை எடுக்கவும் தொடங்கியிருக்கிறார்கள்!—இதைச் சொல்வதற்கே எனக்குச் சங்கடமாயிருக்கிறது!" என்றார் ஸ்ரீ திருவேங்கட முதலியார்.

எனக்கும் அதைக் கேட்பதற்குச் சங்கடமாகத்தான் இருந்தது.

"நாம் போகும் செங்காடு கிராமத்திலும் இவ்வாறுதான் வீடுகள் காலியாயிருக்குமோ! அப்படியானால் அங்கே கஞ்சி தர்மம் ஆரம்பிப்பதில் என்ன பயன்!" என்றேன்.

"அங்கே அவ்வளவு மோசம் இல்லை. இரண்டொரு கிணறுகளில் குடிக்கத் தண்ணீர் கிடைக்கிறது. ஆகையால் ஜனங்கள் ஊரை விட்டுப் போகவில்லை."

"குடிக்கத் தண்ணீர் மட்டும் கிடைத்தால் போதுமா! ஜீவனம் எப்படி நடத்துகிறார்கள்!"

"ஜீவனம் என்னத்தை நடத்துகிறது! எப்படியோ உயிரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்."

"அதுதான் எப்படி என்று கேட்கிறேன்."



செங்காடு கிராமத்தில் கஞ்சிக்காகக் காத்திருந்த கிராமவாசிகளின் கூட்டத்தில் ஒரு பகுதி.

"வீட்டில் இருந்த நகை நட்டுக்கள், பாத்திரம் பண்டங்கள் எல்லாம் விற்று விட்டார்கள். மரங்களை யெல்லாம் வெட்டி விற்று விட்டார்கள். உழவு மாடுகளையும் விற்று விட்டார்கள். ஒரு சமயம் 200 ஜதை உழவு மாடு இருந்த ஊரில் இப்போது இருபது ஜதை மாடுகூட இல்லை."

"எல்லாம் விற்றுவிட்டது. இனிமேல் என்ன செய்வார்கள்!"

"இனிமேல் என்னத்தைச் செய்வது! ஒன்றும் செய்ய வழி இல்லாதபடியால்தான் 'பஞ்சம்' என்ற கூக்குரல் எழுந்தது. சர்க்காரும் இந்த ஜில்லாவைப் பஞ்சப் பிரதேசம் என்று அறிவித்தார்கள்" என்றார் விவசாய சங்கக் காரியதரிசி.

* * *

கிராமத்தின் முகப்பிலேயே கிராமவாசிகளில் பலர் கூட்டமாக நின்று காட்சி அளித்தார்கள். மேள தாள வைபவங்களுடன் எங்களுக்கு வரவேற்பு அளிப்பதற்காகவே அவர்கள் அங்கு நிற்பதாகத் தெரிந்தது. இது சென்னையி லிருந்து சென்ற எங்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. "செங்காடு எவ்வளவு பஞ்சத்தில் அடிபட்டாலும் அதன் பண்பாடு குறைந்து விடுமா!" என்று சமாதானம் கூறினார் கிராமவாசி ஒருவர்.

ஆயினும் இவற்றிலிருந்து ஒரு விஷயம் நன்கு தெரிந்தது. அங்கு ஆரம்பிக்கப் போகும் கஞ்சி தர்மத்தைக் கிராமவாசிகள் எவ்வளவு ஆர்வத்துடன் வரவேற்கிறார்கள், அதை எவ்வளவாகப் பாராட்டுகிறார்கள் என்பது வெளியாயிற்று.

கஞ்சி தர்மம் ஆரம்பமான இடத்திலும் இது ஊர்ஜிதப் பட்டது. புருஷர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளுமாகச் சுமார் எழுநூற்றைம்பது பேர் வந்து காத்திருந்தார்கள். அவ்வளவு பேரும் ஒரு வேளை கஞ்சிக்காக வந்து காத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை நம்புவதே எனக்குக் கஷ்டமாயிருந்தது. ஆனால் கண்ணால் காண்பதை நம்பாமல் வேறு என்ன செய்கிறது!

உடம்புகள் எலும்புந் தோலுமா யிருந்தாலும் அவர்களில் பலருடைய முகங்கள் மலர்ந்திருந்தன.

"ஏழெட்டு நாளைக்கு முன்பு இவர்களுடைய தோற்றம் இன்னும் மோசமாயிருந்தது. ஒருவாரமாய் இங்கே கஞ்சி தர்மம் நடத்தி வருகிறோம். ஆகையினால் தான் இவ்வளவிலாவது இந்த ஜனங்களுடைய முகங்களைப் பார்க்க முடிகிறது" என்றார் ஆக்கூர் அனந்தாச்சாரியார்.

எந்தக் காரியமா யிருந்தாலும் இந்த நாளில் பிரசங்கங்கள் இல்லாமல் நடப்பதில்லை. திருமணங்களிலேகூடச் சொற்பொழிவுகள் வைத்து விடுகிறார்களே! இங்கேயும் நண்பர்கள் சிலர் பேசினார்கள். அவர்களில் வன்னியகுல க்ஷத்திரிய சங்கக் காரியதரிசி ஸ்ரீ வரதராஜன் பேசியது என் கவனத்தைக் கவர்ந்தது. வன்னியகுல சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் இந்தப் பிரதேசத்தில் கட்டுப்பாட்டுடன் நின்று பஞ்ச நிவாரணத் தொண்டு செய்வதில் முனைந்திருக்கிறார்கள் என்று அறிந்தேன். இது மிக்க மகிழ்ச்சி அளித்தது.

பஞ்ச நிவாரண வேலை முழுதும் சர்க்காரும் சர்க்கார் அதிகாரிகளுமே செய்ய வேண்டுமென்று எதற்காக எதிர்பார்க்க வேண்டும்!

சாதாரண நாட்களில் நிலவரி வசூல், ஜமாபந்தி முதலிய மாமூல் வேலைகளைச் செய்வதற்கே ரிவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டவர்கள். அவர்களால் பஞ்ச நிவாரண வேலை எவ்வளவுதான் செய்ய முடியும்!

சமூக முன்னேற்ற ஸ்தாபனங்களும் தர்ம ஸ்தாபனங்களும் இத்தகைய நிலைமைகளில் முன் வந்து தொண்டு செய்யாவிட்டால், வேறு எதற்காகத் தான் அவை இருக்கின்றன!

எனவே, அன்னதான சிவன் சங்கத்தார் வாலாஜா தாலுக்காவில் செய்ய முன்வந்திருக்கும் தொண்டைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

அவர்கள் ஒரே ஒரு கிராமத்திலேதான் பஞ்ச நிவாரணத் தொண்டு செய்கிறார்கள். ஆனால் அது



ராணிப்பேட்டையில் காந்தி மிஷன் சங்கத்தார் பஞ்சத்திலடிபட்ட ஐந்நூறு குழந்தைகளுக்குத் தினம் உணவு அளித்துக் காப்பாற்றுகிறார்கள்.

மற்றும் பல சங்கங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் வழிகாட்டியாகும் அல்லவா!

* * *

அன்றைய தினம் மொத்தம் 750 பேருக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது. முக்கியமாக ரகி தானியத்தைக் கொண்டு கஞ்சி தயாரிக்கப்படுகிறது. சிறிய அளவு சோளமும் சேர்க்கப்படுகிறது.

இதற்கு அவசியமான வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி விசாரித்தேன்.

தினம் முப்பது ரூபாய் செலவு செய்தால் 750 பேர் முதல் 1000 பேர் வரையில் கஞ்சி தானம் செய்யலாம் என்றும், தற்போதைக்கு மூன்று மாதம் இந்தத் தொண்டு செய்யத் திட்டம் போட்டிருக்கிறதாயும் காரியதரிசி தெரிவித்தார்.

குழந்தைகள் சுமார் 150 பேருக்கு இராத்திரி ஒரு வேளை (பவுடர்) பால் கொடுப்பதாயும், அதற்குத் தனிச் செலவு ஆகும் என்றும் தெரிவித்தார்.

ஆகக் கூடி, சுமார் ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு மாத காலம் ஆயிரம் உயிர்களைப் பஞ்சத்துக்கு இரையாகாமல் காப்பாற்ற முடியும் என்று தெரிந்து கொண்டேன்.

பஞ்சத்தைப் பற்றிச் சர்க்காரையும் சர்க்கார் அதிகாரிகளையும் குறை கூறுவதுடன் நம்முடைய கடமை தீர்ந்துவிட்டது என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்களே, அது எவ்வளவு பெரிய மடமை என்பதும் தெளிவாயிற்று.

ஊக்கமும் உற்சாகமும் உள்ள சில நண்பர்கள் சேர்ந்து மனது வைத்து வேலை செய்தால், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வசூல் செய்து ஓரிடத்தில் பஞ்ச நிவாரண வேலை நடத்தலாம்.

சமூக சேவையில் ஈடுபட்ட ஸ்தாபனங்களும் பண வசதியுள்ள மடாலயங்களும் இன்னும் அதிகமாகச் செய்யலாம்.

கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இம்மாதிரி நிலைமைகளில் எவ்வளவு அற்புதமான தொண்டுகள் செய்கிறார்கள்! ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு அருமையான சேவைகள் செய்கிறார்கள்!

ராணிப்பேட்டையில் காந்தி மிஷன் சங்கத்தார் சில மாதங்களாகப் புரிந்துவரும் பஞ்ச நிவாரணத் தொண்டை இச்சந்தர்ப்பத்தில் அறிந்து சென்னையிலிருந்து சென்றிருந்தவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தோம்.

அமெரிக்கா தேசத்திலிருந்து தர்மத்துக்காக வந்த உணவுப் பொட்டணங்களைக் கொண்டு இவர்கள் மூன்று மாதகாலம் பஞ்சத்திலடிபட்ட 500 குழந்தைகளுக்கு உணவு அளித்துக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

பற்பல கிராமங்களில் கஞ்சி தர்மம் ஆரம்பித்து நடத்துவதில் சர்க்கார் அதிகாரிகளுக்கும் உதவியாக இருந்து வருகிறார்கள்.

காந்தி மிஷன் சங்கத் தலைவர் சுவாமி நிர்மலானந்த பிக்ஷுவையும் அவருக்குத் துணை புரிந்து வரும் ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமன், அவருடைய புதல்வி ஸ்ரீமதி பாரதி, ஸ்ரீ திருவேங்கட முதலியார், ஸ்ரீ வரதராஜன் முதலிய சமூகத் தொண்டர்களையும் பாராட்டுகிறேன்.

* * *

இக்கட்டுரை, அப்பர் பெருமானின் "நமனை அஞ்சோம்" என்ற கர்ஜனையுடன் ஆரம்பமாகிறது. அப்பர் பெருமானும் சம்பந்தர் பெருமானும் அவர்களுடைய காலத்தில் பரவியிருந்த கொடும் பஞ்சத்தின் போது மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காகச் செய்த அரிய தொண்டுகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

அதை இச்சந்தர்ப்பத்தில் அம்மகான்களுடைய பரம்பரையில் வந்த மடாதிபதிகளுக்கு ஞாபகப் படுத்தி வைக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு பெரிய மடாதிபதியும் ஒரு கட்டளைத் தம்பிரானின் மேற்பார்வையில் பத்து இடங்களில் பஞ்ச நிவாரணத் தொண்டு ஆரம்பித்து நடத்தினால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அப்போது அவர்கள் நடத்திவரும் சமயப் பிரசாரம் எவ்வளவு நல்ல பயன் அளிக்கக் கூடியதாகும்!

நீங்கள் இன்று உங்கள் பற்களை மகளீன் செய்தீர்களா?



ஆமாம். அவள் தனது பற்பசையை நன்கு தேர்ந்தெடுத்திருக்கிறாள் என்பதை நீங்கள் காணலாம். அவள் புன்னகையின் மூலம் தனது பளபளப்பான பற்களைக்காட்டிப் பெருமைப்பட்டுக்கொள்கிறாள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை பற்களை வெண்மையாக்குவதுடன் விடவில்லை. ஈறுகளுக்கு வலுவும் ஆரோக்கியமும் அளித்து சுவாசத்தை இனிதாக்குகிறது. இன்றே மக்ளீன் உபயோகிக்கும் பழக்கத்தை ஆரம்பியுங்கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையை இன்று முதல் தினமும் இருமுறை உபயோகியுங்கள்.

இப்போது பெரிய அளவிலும் சிக்கனமான மாபெரும் அளவிலும் கிடைக்கிறது



பற்களை அதிக வெண்மையாக்குகிறது

வர்த்தக விபரங்களுக்கு :
ஜே. எல். மாக்லீன், லன் அன்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி 6537 பம்பாய், தபால் பெட்டி 387 கல்கத்தா, தபால் பெட்டி 1370 சென்னை

MTY-12 TAM.



தமிழ்க் களஞ்சியம்

டி. கே. சி

13. தெருவில் மரங்கள் சில!

மனிதர்களுக்குள்ளே சதா சச்சரவு இருந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் எப்படியோ காலந் தள்ளி வருகிறது மனித சமுதாயம்.

அப்படியே தான் அரசர்களுக்குள்ளும் நெடுகிலும் சச்சரவு இருந்து வந்திருக்கிறது. தன்னை எங்கே மிஞ்சி விடுவானோ, தன்னை எங்கே தாக்கி விடுவானோ அடுத்த நாட்டு அரசன் என்பதாக ஒவ்வொரு அரசனும் பயந்து கொண்டே இருந்தான்.

பக்க பலந்தேட வேண்டுமே. அதற்காகப் பக்கத்து தேசத்து அரசர்களோடு கலந்தோ, சண்டையிட்டோ ஒரு சாம்ராஜ்யத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டிய திருந்தது.

பூர்வ காலத்துச் சாம்ராஜ்ய சரித்திரமும் தற்காலத்து சாம்ராஜ்ய வெறியைப் போலத் தான் இருந்திருக்கிறது.

சாம்ராஜ்ய தோரணையில் அந்தக் காலத்தில் கொஞ்சம் பலம் அதிகமாயுள்ள அரசர்கள் வட்டம் சுற்றி வந்தார்கள். அதற்குத் திக் விஜயம் என்று பெயர். நாலா பக்கத்திலும் உள்ள நாடுகளை ஜெயிக்கிறது என்று பொருள்.

திக்விஜயம் போனால் சிற்றரசர்கள், ஏன் சாமான்ய அரசர்கள் கூடக் காணிக்கை, கப்பம் எல்லாம் கட்டி வந்தார்கள். தேர், குதிரை, யானை இவைகளையும் கொடுத்து வந்தார்கள். இனி:

* * *

ஒரு பெரிய சாலை, சாலைக்குப் பக்கத்தில் நாலைந்து பெரிய ஆலமரம் வட்டமிட்டு நிழல் கொடுத்துக் கொண்டு நிற்கிறது.

ஆலமரத்தின் அடியில் தேர்கள் நாலைந்து நிற்கின்றன. தேர்களின் பக்கத்தில் ஜோரான குதிரைகள் நன்றாய் 'மாலிஷ்' பண்ணிப் பிடரி மயிரையும் வாலையும் நன்றாய்ச் சீவி விட்டுப் பளபள என்று நிற்கின்றன. கண்ணைப் பறிக்கின்றன.

இது போகப் பல யானைகள், கொம்பன்கள் அசைந்து கொண்டு நிற்கின்றன. (தமிழ் நாட்டில்க் குதிரைகள் தான் அருமை யானைகள் மந்தை மந்தையாய்க் கிடைக்கும்.)

இவைகளுக் கிடையே அரசர்களுக்குரிய ஆடை ஆபரணங்களுடன் ராஜா, ராஜ ஹோதாவில் உட்கார்ந்திருக்கிறான். பார்த்தார் ஒரு புலவர், அந்த வழியாய் வந்த ஒரு ஏழைப் புலவர்.

மேல் வேட்டியை அரையில்க் கட்டிக் கொண்டு பவ்யமாக ராஜாவிடம் மெள்ளப் போனார் புலவர்.

போய், ராஜாவைக் கேட்டார். "ஏதோ திக்விஜயம் போய் வந்ததாகத் தெரிகிறது. பல அரசர்கள் தேர் என்ன, குதிரை என்ன, யானை என்ன என்று கப்பம் கட்டியிருக்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். தங்கள் தேசம் எதுவோ? தெரியவில்லை. பெயர் என்ன? தயவு செய்து சொல்ல வேண்டும்" என்று கேட்டார் புலவர்.

"தேர்உ ளைப்புரவி
வார ணத்தொகுதி
இறைகொ ணர்ந்துவரு
மன்ன! நின்

தேசம் ஏதுனது
நாமம் ஏதுபுகல்"

[உளைப்புரவி: பிடரி மயிர் கொண்ட குதிரைகள்; வாரணத் தொகுதி: யானைக் கூட்டங்கள்; திறை கொணர்ந்து வரும்: கப்பமாகக் கொண்டு வருகிற; புகல்: சொல்ல வேண்டும்.]

இந்தக் கேள்விக்கு ராஜா பதில் சொல்லுகிறார் புலவரைப் பார்த்து.

"யாழ் வாசித்துக் கவியைப் பாடுகிற பாணர் நீர்; தெரியும் எனக்கு. வாரும், கிட்ட உட்காரும்.

"நீரும் நானும் ஒரே இனந்தான். தேர் முதலியவைகளெல்லாம் திக் விஜயம் செய்து கப்பமாக வந்தவைகள் அல்ல. பாலாற்றங் கரையிலுள்ள (செங்கற்பட்டுக்குக் கிழக்கே) ஆறை நகரைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீரே, அங்கே வாணனாகிய மகத தேசத்து ராஜன் இருக்கிறான் என்பதும் தெரியுமே. நான் பாடல் பாடினேன். அதற்காக இவைகளையெல்லாம் பரிசாகக் கொடுத்தான். அவ்வளவுதான்" என்று 'புலவர் ராஜா' சொன்னார்.

"செங்கை யாழ்தடவு
பாண ரே.

வாரும், ஒத்தகுடி
நீரும் நாமும்: மக
தேசன் ஆறைநகர்
காவ லன்

வாண பூபதி
மகிழ்ந்த ளிக்கவெகு
வரிசை பெற்றுவரு
புலவன் யான்"

[யாழ் தடவு பாணரே: யாழ் வாசித்துப் பாடும் கவிஞரே; மக தேசம்: செங்கற்பட்டு, திருவண்ணாமலை முதலிய இடங்களுக்கு மகத தேசம் என்று ஒரு உபசாரப் பெயர் இருந்தது; ஆறை நகர் காவலன்: தலை நகராகிய ஆறை நகரில் வாழ்பவன்; வாண பூபதி: வாணனாகிய மன்னன்; மகிழ்ந்தளிக்க: சந்தோஷமாய் எனக்குக் கொடுக்க; வெகு வரிசை பெற்று வருபுலவன் யான்: இந்த வளமான பரிசுகளையெல்லாம் பெற்று வருகிற புலவன்தான் நான்.]

"நீரும் இத்தனை பரிசுகளையும் பெற்று வரலாம். நீரும் போம்.

"வழி தெரிய வேண்டாமா உமக்கு. அடையாளம் சொல்லுகிறேன் கேளும்:

"வாண பூபதியின் அரண்மனை முற்றத்தை ஒட்டிப் பெரிய பெரிய மாடங்களோடு கூடிய மாளிகைகள். அந்த மாடங்களில் முத்து வர்ணமான (நித்திலம்) கல்லுகள் பதித்த சிகரங்கள் (டோம்கள்) அலங்கரிக்கின்றன. இவைகளோடு அழகான கோபுரங்கள் வேறு அலங்கரிக்கின்றன.

"சிகரங்கள், கோபுரங்கள் இவைகளின் அடி நிழலில் ஒரு காட்சியைப் பார்க்கலாம். திருவாத்திமரம் நிற்கும் (கொடியில் எழுதிய திருவாத்தி மரம்) உயர்ந்த வேம்பு நிற்கும் வளமான பனையும் நிற்கும். மரங்களின் அடியில் அரசு நிற்கும்.

"நீரும் இப்பரிசு
பெற்று மீளவரல்
ஆகும் ஏகும், அவன்
முன்றில் வாய்

நித்தி லச்சிகர
மாட மாளிகை
நெருங்கு கோபுரம்
மருங்கெ லாம்

மாட மாளிகை கோபுரம் இவைகளின் நிழல்களில் (தெருவில்தான்) சில மரங்கள் நிற்கின்றனவாம்.

ஆரு நிற்கும்உயர்
பனையும் நிற்கும்வளர்
வேம்பும் நிற்கும்அங்(கு)
அருகி லே

அரசு நிற்கும் அர
சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை
யாள மே.

திருவாத்தி மரம் நிற்கிறது. பனை நிற்கிறது. வேம்பும் நிற்கிறது. இவைகள் பக்கத்திலே அரசு நிற்கும் அதாவது சோழ அரசன் சேர அரசன் பாண்டிய அரசன், மூவரும், நிற்கிறார்கள்—வாண பூபதியைப் பேட்டி காணத்தான்.

அத்தி நிற்குமாம்: அத்தி என்றால் யானைக்கும் பெயர். அரசர் மூவரும் சவாரி செய்து வந்த யானைகள்தான். யானையை விட்டு இறங்கி நிற்கிறார்கள் அரசர்கள் என்பது குறிப்பு.

இனி முழுப் பாடலையும் பார்க்கலாம்.

'தேர்உ ளைப்புரவி
வார ணத்தொகுதி
திறைகொ ணர்ந்துவரும்
மன்ன! நின்

தேசம் ஏதுனது
நாமம் ஏதுபுகல்'
'செங்கை யாழ்நட
பாண ரே

வாரும், ஒத்தகுடி
நீரும் நாமும் ; மக
தேசன் ஆறைநகர்
காவ லன்

வாண பூபதி
மகிழ்ந்த ளிக்கவெகு
வரிசை பெற்றுவரு
புலவன் யான்


நீரும் இப்பரிசு
பெற்று மீளவரல்
ஆகும் ஏகும்அவன்
முன்றில் வாய்,

நிந்தி லச்சிகர
மாட மாளிகை
நெருங்கு கோபுரம்
மருங்கெ லாம்

ஆறு நிற்கும்உயர்
பனையும் நிற்கும்வளர்
வேம்பும் நிற்கும்அங்(கு)
அருகி லே

அரசு நிற்கும்அர
சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை
யாள மே

ஆறை நகரில் இருக்கும் வாணனைப் பேட்டி காண வந்த சோழ, சேர, பாண்டியர்கள் நிழலில் ஒதுங்கி ஒதுங்கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தை விளக்கத் தமிழ் நாட்டு மரங்கள் சில வந்து ஒரு கூத்துக் கூத்தாடி விட்டுப் போகின்றன.



பையன் (பெரிய மனிதரைப் பார்த்து):—ஸார், நீங்கள் இந்த ஷாப்புக்குள்ளே போய்விட்டு வருகிறவரைக்கும் நான் உங்கள் காரைப் பார்த்துக் கொள்ளுகிறேன்!

பெரிய மனிதர் :—வேண்டாம், போடா! அதற்கு நான் வேறு ஆளை ஏற்பாடு செய்து விட்டேன்!

பையன் :—அப்படியானால் ரொம்ப நல்லதுங்க! நான் அந்த ஆளைப் பார்த்துக் கொள்கிறேனே!



பி. எஸ். மணி

காட்டில் ஒரு அழகிய மான் வாயு வேகமனோ வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்த மானைப் பின்தொடர்ந்து ஒரு வேட்டைக்காரன் ஓடிக் கொண்டிருந்தான். மான் அவனிடமிருந்து தப்புவதற்காக வளைந்து வளைந்து கல்லிலும் முள்ளிலும் புதரிலும் பாய்ந்து சென்று கொண்டிருந்தது. ஆனால் அந்த வேட்டைக்காரன் கொஞ்சமாவது சளைக்க வேண்டுமே? அவனும் அந்த மானை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்ற உறுதியுடன் வேகமாகப் பின் தொடர்ந்தான். எவ்வளவு வேகமாக ஓடியும் அந்த வேட்டைக்காரனுடைய கண்ணிலிருந்து அந்த மான் மறைய முடியவில்லை.

கடைசியில் மான் ஒரு குடிசையின் முன்னால் வந்து களைத்துப் போய் விழுந்தது. குடிசையினுள்ளிருந்து ஒரு அழகான பெண் ஓடிவந்து மானைக் கட்டிக் கொண்டாள். அதைத் தன் தளிர்க் கரங்களினால் தடவிக் கொடுத்தாள். மானும் அவளை அன்புடன் உற்று நோக்கியது.

மானைப் பின்தொடர்ந்து ஓடிவந்த வேட்டைக் காரன் குடிசையின் முன் வந்து நின்றான். திக்குத் தெரியாத காட்டில் ஓர் அழகிய பெண் மானுடன் வாசம் செய்வது அவனுக்கு மிகுந்த வியப்பை யளித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அப்படிக் கல்லாய்ச் சமைந்து திகைத்துப் போய் மௌனமாய் நிற்பானா?

வெகுநேரம் வாய்மூடி மௌனியாய் நின்ற அவன் பிறகு சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "பெண்ணே! உன்னை அடைக்கலம் அடைந்திருக்கும் மான் என்னுடைய வேட்டைப் பொருள். அதை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்" என்று கூறினான்.

"ஐயா! என்னுடைய சகோதரனை என்னிடமிருந்து பிரிக்க முயல்வது நியாயமாகுமா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"என்ன? காட்டில் திரியும் மான் உன்னுடைய சகோதரனா? அடைக்கலம் புகுந்த மானைக் காப்பாற்றுவதற்காக நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? அது என்னிடம் நடக்காது" என்றான் வேட்டைக்காரன்.

"ஐயா, நான் சொல்வது உண்மை. நான் மகிழ்புரி மன்னனின் சகோதரி. என் பெயர் குந்தளா. இந்த மான் என்னுடைய சகோதரன்தான். ஒரு மந்திரவாதி என் அழகில் மயங்கி என்னை மணக்க விரும்பினான். என் சகோதரன் அதற்கு இசையவில்லை. அதற்காக அந்த மந்திரவாதி கோபமடைந்து என் சகோதரனை மானாக மாற்றி விட்டான். மானாக மாறிய என் சகோதரன் நாட்டில் வாழ வெட்கப்பட்டு காட்டுக்கு ஓடி வந்து விட்டான். என் சகோதரனைக் காணாமல் தவித்த நான் பல இடங்களில் தேடி அலைந்து கடைசியில் இந்தக் காட்டில் கண்டு பிடித்தேன். சகோதரனைப் பிரிந்து வாழ மனமின்றி நானும் இந்தக் காட்டில் தன்னந் தனியாக வாழ முடிவு செய்து விட்டேன். இப்பொழுதாவது நான் சொல்லுவதை நம்புகிறீர்களா?" என்று கேட்டாள் அந்த அழகிய பெண். அவள் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இராஜகுமாரி குந்தளாவின் சோகக் கதையைக் கேட்டு அவனுடைய மனம் இறங்கி விட்டது. "இளவரசியே, கவலைப்படாதே! உன் சகோதரனுக்கு ஒரு கொடுமையும் செய்ய மாட்டேன். நீ இனிமேல் இக்காட்டில் அநாதரவாக வாழ வேண்டாம். நீ உன் அருமைச் சகோதரனை அழைத்துக் கொண்டு என் நாட்டுக்கு வந்துவிடு. எப்படியாவது உன் சகோதரனை இந்தக் கொடிய உருவத்திலிருந்து காப்பாற்ற முயல்கிறேன்" என்றான் வேட்டைக்காரன் மகிழ்ச்சியுடன்.

"ஐயா! என்னிடம் பேரன்பு காட்டும் தாங்கள் யார்? இத்தனை நாட்களாகத் துன்பத்தையே அனுபவித்து வந்த எனக்குத்

தங்கள் வார்த்தைகள் அமுதம் போன்றிருக்கின்றன" என்று கூறினாள் குந்தளா.

"நான் மிதுனபுரி அரசன். காட்டில் வேட்டையாட வந்தேன். மான் ஒன்றைக் கண்டு பின் தொடர்ந்து வந்தேன். அது ஒரு பெண் மானிடமல்லவா கொண்டு வந்து விட்டது?" என்றான் பலமாகச் சிரித்துக் கொண்டே.



அரச குமாரி குந்தளா மிதுனபுரி மன்னனின் வேண்டுகோளுக்கு இசைந்தாள். அவனுடன் அவள் தன் மானையும் அழைத்துக் கொண்டு மிதுனபுரிக்குப் புறப்பட்டாள்.

சோலைகளையும், வனங்களையும், மேடு பள்ளங்களையும் கடந்து சென்றார்கள். கல்லிலும் முள்ளிலும் நடந்து போனார்கள். கடைசியில் ஒரு வெட்ட வெளி மைதானத்தையடைந்தார்கள். அந்த மைதானத்தில் கண்ணுக் கெட்டியவரை செடியோ, கொடியோ இல்லாமல் பாலைவனம் போல் காட்சியளித்தது. அந்தப் பாலைவனத்தில் ஆச்சரியப்படும்படியாக ஒரே ஒரு செடி மட்டும் அவர்கள் பார்வையில் பட்டது.

திடீரென்று வீசிய காற்றில் அச் செடி சாய்ந்துவிட்டது. மிதுனபுரி அரசன் அதைச் சற்றும் கவனியாமல் மேலே சென்றான். ஆனால் அவனுக்குப் பின்னால் நடந்து வந்த குந்தளா அந்தச் செடியின் பரிதாப நிலையைக் கண்டு இரக்கப் பட்டு அச்செடியைத் தூக்கி நிறுத்தினாள். ஒரு கொம்பை அச் செடிக்குத் தாங்கலாக வைத்தாள். என்ன ஆச்சரியம்! அவள் கொம்பை வைத்ததுதான் தாமதம்! அந்தச் செடி மறைந்துவிட்டது. அச் செடிக்குப் பதிலாக ஒரு தேவதை காட்சியளித்தது. தேவதையைக் கண்டதும் திகைத்துப் போய் அப்படியே சிலைபோல் நின்றாள் குந்தளா.

தேவதை சிரித்துக் கொண்டே, "பெண்ணே! நான் இந்தக் காட்டில் வாழும் தேவதை. என் தோழி தேவதைக்கும் எனக்கும் 'பெண்கள் கருணை மிகுந்தவர்களா? ஆண்கள் கருணையுள்ளம் மிகுந்தவர்களா?' என்ற சந்தேகம் எழுந்தது. என் தோழி, 'ஆண்களுக்குத்தான் கருணை அதிகம்' என்றாள். நான் 'இல்லை' என்று கூறினேன். எங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக நான் ஒரு உபாயம் தேடினேன். நான் செடியாகவும் என் தோழி புயல் காற்றாகவும் மாறினோம். பெருங் காற்றில் செடி கீழே சாய்ந்தது. உன்னுடன் வந்தவர் என்னைக் கவனிக்காமலே போய் விட்டார். பெண்கள் தான் கருணை மிகுந்தவர்கள் என்பது உன் செயலினால் நிரூபிக்கப் பட்டது. நான்தான் போட்டியில் ஜெயித்தேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறிற்று.

குந்தளா அப்படியே வனதேவதையினுடைய பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

தேவதை மறுபடியும் தொடர்ந்து, "என்னுடைய கட்சி வெற்றி பெறுவதற்காக நீ உதவி செய்ததால் நான் உனக்கும் ஏதாவது உபகாரம் செய்ய விரும்புகிறேன். உனக்கு ஏதாவது ஆசை யிருந்தால் சொல். நிறைவேற்றி வைக்கிறேன்" என்று கூறியது.

குந்தளா மகிழ்ச்சியுடன், "இதோ! என்னுடைய சகோதரனைக் கொடிய மந்திரவாதி ஒருவன் மானாக மாற்றிவிட்டான். அவனை மறுபடியும் இராஜகுமாரனாக மாற்றித் தந்தால் போதும்" என்றாள்.

தேவதை தனது மந்திரக் கோலால் மானைத் தொட்டது. அடுத்த நிமிஷம் மான் அழகிய இராஜகுமாரனாக மாறியது. தன் சகோதரனைக் கண்டதும் குந்தளா அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. தனக்கு உதவி செய்த தேவதையிடம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். தேவதையும் அதைக் கேட்டு மகிழ்ந்தது. பிறகு அந்த இடத்திலிருந்து மறைந்து விட்டது.

வெகுதூரம் சென்று விட்ட மிதுனபுரி அரசன் பின்னால் குந்தளாவைக் காணாமல் திடுக்கிட்டு நோக்கினான். வெகு தூரத்தில் அவள் நின்றுவிட்டதைக் கண்டதும் அவன் திரும்பி அவள் இருந்த இடத்துக்கு வந்தான்.

குந்தளா அழகிய இராஜகுமாரனோடு நிற்பதைக் கண்டதும் மிதுனபுரி மன்னனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. குந்தளா நடந்ததை யெல்லாம் விவரமாகக் கூறியதைக் கேட்டதும் மிதுனபுரி மன்னன் குந்தளாவின் கருணையை மெச்சினான்.

மிதுனபுரி மன்னன் குந்தளாவையும், அவளுடைய சகோதரனையும் அழைத்துக் கொண்டு தன் நாட்டுக்குப் போனான்.

நல்ல நாளில் மிதுனபுரி மன்னனுக்கும் குந்தளாவுக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது. குந்தளாவின் சகோதரன் தான் அதை முன்னின்று நடத்தி வைத்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?


தி பாவுஸேரி பெனிபிட் சீட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414 • மதராஸ்-5

தந்தி: 'EVERMENS'.... போன்: 85834



நூற்றுக் கணக்கான வர்கள் சிரமகச் சேமிக்கப் பயிற்சி யடைந்து எங்கள் மாதாந்திர சீட்டு வரிசை யில் சேர்ந்து சந்தோஷத் துடன் இருக்கின்றனர்.

நவம்பர் மாத சீட்டு வரிசை
(4-வது வெள்ளிக்கிழமை, எல வரிசை)

சந்தா செலுத்தும் கடைசி தேதி 15-11-52 **முதல் ஏலத் தேதி 28-11-52**

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டின் மதிப்பு
B	ரூ. 100/-	ரூ. 2,500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-
D	ரூ. 25/-	ரூ. 625/-
E	ரூ. 20/-	ரூ. 500/-
F	ரூ. 15/-	ரூ. 375/-
G	ரூ. 10/-	ரூ. 250/-
	25 மாதங்கள்	25 மெம்பர்கள்


ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக் கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகைகளை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும். சேர விரும்பும் வகுப்பு பூர்த்தியாகி விட்டால் அதற்கு அடுத்த வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும். இச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் உடனேயே விண்ணப்பிக்கவும்.

ஆபிஸ் நேரம்: காலை 9 முதல் 12 மணி வரை மாலை 2 முதல் 5 மணி வரை

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

தவணைச் சலுகையில்

உங்கள் புதிய சைக்கிளை வாங்குங்கள்



ரூ. 1,96,000/- மதிப்புள்ள சைகிள்கள் இதுவரை டெலிவரி செய்யப்பட்டுள்ளது. இறுதியான விலைக் குறைவு இதுதான். சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.


ஒரு அரிய சலுகை. 25% முன்னதாக செலுத்தி பாக்கித் தொகையை ஆறு மாத தவணைகளில் செலுத்த வேண்டும். இங்கிலீஷ் சைகிள்கள் ரூ. 195/–, ஹிந்த் 155/–, ஹெர்குலஸ் ரூ. 245/–, பி. எஸ். ஏ. ரூ. 265/–, பிலிப்ஸ் ரூ. 235/–, ராலே கிரீன் ரூ. 360/– டைனமோ செட் 30/– நிபந்தனைகளின்படி உடனடியான டெலிவரி. புத்தம் புதிய சாக்குகள். ஒரிஜினல் பாகங்கள். டன்லப் டயர்கள், சீட்டுக்கு உத்திரவாதம். முழு விலாசத்துடன் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரையும் குறிப்பிட்டு உடனே எழுதுங்கள்.

உங்கள் குழந்தைக்கு ஓர் புதிய டிரைசைகிள்



வெகு சுலபமாக ஓடும். உறுதியாக அமைக்கப்பட்டது. விலை ரூ. 25/-லிருந்து ரூ. 15/-க்குக் குறைக்கப்பட்டுள்ளது. உங்கள் முழு விலாசத்துடன் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரை எழுதி உடனடியாக ஆர்டர் செய்யுங்கள்.

MIDLAND TRADING CO., LTD., POST BOX 1987, BOMBAY-1



ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு, ஆவல் ததும்பும் உள்ளத்துடன், தெருவையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார் ரங்கநாதம் பிள்ளை. அவருடைய இளைய மகன் குமாரலிங்கம் நற்செய்தியுடன் திரும்பி வர வேண்டும் என்று அவர் மனம் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. பி. ஏ. பட்டம் பெற்று ஒரு வருட காலமாகியும் வேலையொன்றும் கிடைக்காமல் வீட்டிலிருந்தான் குமாரலிங்கம். அவன் வேலைக்காக மனுப் போடாத இடமில்லை. கடைசியாகக் கடவுள் கண் திறந்து பார்த்துவிட்டார் என்று நினைக்கும்படி அன்று காலையில், ஒரு கம்பெனியிலிருந்து, அவனை அங்கே நேரில் வந்து பேட்டி காணும்படி கடிதம் வந்திருந்தது. குமாரலிங்கம் அங்கேதான் போயிருந்தான்.

சாதாரண வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த ரங்கநாதம் பிள்ளை கஷ்டப்பட்டுத் தம் இரு பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் வளர்த்து வந்தார். நகரத்தின் ஒரு பலசரக்குக் கடையில் கணக்கெழுதி வந்த அவருக்கு அந்த வேலையும் இல்லாமற் போயிற்று. அப்பொழுது கலாசாலைப் படிப்பை முடித்திருந்த அவருடைய மூத்த மகன் முத்துவுக்குத்தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டு விட்டது. முத்து சில நாட்கள் வேலைக்காக அலைந்து பார்த்தான்; ஆனால் கிடைக்கவில்லை. "சரி, குமாஸ்தா உத்தியோகம் எனக்குத் தேவையில்லை" என்கிற முடிவுக்கு வந்து, ஒரு மில்லில் சாதாரண கூலியாள் வேலையை ஏற்றுக் கொண்டான். அவன் மாதாந்திரம் கொண்டுவரும் அறுபத்திரண்டு ரூபாய் கூலியே அந்தக் குடும்பத்தின் பெருநிதியாக யிருந்து வந்தது. படிப்பில் சாமர்த்திய சாலியாக யிருந்த குமாரலிங்கம் உபகாரச் சம்பளம் பெற்று பி. ஏ. படித்து, முதல் வகுப்பில் தேறி யிருந்தான்.

வெகுநேரம் நின்று மனச் சோர்வடைந்த ரங்கநாதம் உள்ளே சென்று உட்கார்ந்து விட்டார். தன் தந்தையின் அந்த மன நிலையில் வெளியே திண்ணையில் உட்கார்ந்திருந்த முத்து, தூரத்தில் குமாரலிங்கம் வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் உள்ளே ஓடினான். "அப்பா! தம்பி வந்து கொண்டிருக்கிறான்" என்ற அவனுடைய வார்த்தைகள் ரங்கநாதத்தின் காதுகளில் இன்பநாதம் போல் ஒலித்தன.

வாடிய முகத்துடன் உள்ளே நுழைந்த குமாரலிங்கத்தைக் கண்டதும் அவ்விருவரும் திடுக்கிட்டனர்.

"தம்பி! மானேஜர் என்ன சொன்னார்?" என்று அடக்கமாட்டா ஆவலுடன் வினவினார் ரங்கநாதம்.

"அப்பா, அந்தக் கம்பெனியில் டைப்பிஸ்ட் வேலை மட்டும் தான் காலியாக யிருந்ததாம். ஆனால் அந்த வேலை எனக்குக் கிடைக்கவில்லை. ஒரு பெண்ணுக்கு அந்த வேலையைக் கொடுத்து விட்டார்கள்" என்று துயரத்துடன் மொழிந்த குமாரலிங்கம் மனச் சலிப்புடன் தரையில் உட்கார்ந்து விட்டான்.

"தம்பி! இன்னும் எத்தனை நாட்கள் இப்படி வேலைக்காக அலைந்து கொண்டிருப்பது? இந்தக் குமாஸ்தா உத்தியோகத்தைத் தவிர வேறு வேலை உனக்குக் கிடைக்காதா? வேறு தொழில் செய்ய உன்னால் முடியாதா, என்ன?" என்று சற்று மனத்தாங்கலுடன் கேட்ட முத்துவை, குமாரலிங்கம் நிமிர்ந்து பார்த்தான். மன வேதனைப் பட்டுக்கொண்டிருந்த அவனுக்கு முத்துவின் வார்த்தைகள் கோபத்தைத்தான் கிளப்பிவிட்டன.

"அண்ணா! வேறு வேலை கிடைக்காதா என்று கேட்கிறாயே, எந்த வேலை நான் செய்யக்கூடும் என்றுதான் சொல்லேன்."

"என், என்னைப் போல நீயும் ஒரு தொழிலாளியாக எங்கள் மில்லில் சேர்ந்துவிடேன்!"

"என்ன! பி. ஏ. பட்டதாரியான என்னை, கேவலம் மில் கூலியாக வேலை செய் என்று சொல்கிறாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் குமாரலிங்கம்.

இலேசாக நகைத்த முத்து, "தம்பி, நம் வாழ்க்கையை நடத்த எந்த வேலையையும் செய்யலாம். அதில் எந்தவித அகௌரவமுமில்லை!" என்றான்.

இவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ரங்கநாதம், "தம்பி, உன் அண்ணன் சொல்வதும் உண்மைதானே? பாவம், அவன் ஒருவன் கஷ்டப்பட்டுக் குடும்ப நிர்வாகத்தை நடத்துகிறான். அவனுடன் கூட நீயும் ஏதாவது ஒரு வேலை செய்து இந்தக் குடும்ப பாரத்தைப் பகிர்ந்துகொள்வதுதான் முறை" என்று தம் இளைய மகனுக்கு உபதேசித்தார்.

"அப்பா, வேலை செய்யாமல் உட்கார்ந்திருக்கும் என்னை உணவளித்து உபசரிக்க வேண்டியிருக்கிறதே என்று உங்களுக்கு வருத்தமாகயிருக்கலாம். இதோ இப்பொழுதே நான் இந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுகிறேன். ஒரு நல்ல உத்தியோகத்தையடையும் வரைக்கும் நான் இங்கே காலடி எடுத்து வைக்கப் போவதில்லை. அது நிச்சயம்" என்று கோபத்துடன் கூறிய குமாரலிங்கம் வேகமாக உள்ளே எழுந்து சென்றான்.

ரங்கநாதம் பிள்ளையும் முத்துவும் அவனுடைய வார்த்தைகளைக் கேட்டுத் திகைப்படைந்து விட்டனர். தன்னுடைய சாமான்களை ஒரு பெட்டியில் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பிய அவனைப் போக வேண்டாம் என்று எவ்வளவோ சமாதான வார்த்தைகள் கூறியும் அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

* * *

டிக்கட் வாங்காமலேயே சென்னையையடைய குமாரலிங்கத்திற்கு அதிக சிரமம் ஏற்படவில்லை. திருவல்லிக்கேணியிலிருந்த தன் அத்தையின் வீட்டிற்குச் சென்றான். சற்றும் எதிர்பாராமல் அவனைக் கண்டதும் அவனுடைய அத்தை ஆச்சரியமடைந்தாள். ஆனால் விஷயத்தை அறிந்து கொண்டதும் அவள் அவனைக் கடிந்து கொண்டு, அவன் செய்தது பெரிய தவறென்றும், உடனே ஊர் போய்ச் சேர வேண்டும் என்றும் கூறி விட்டாள். ஆனால் குமாரலிங்கம் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சென்னையையடைந்த அன்றிலிருந்தே வேலை தேடும் இயக்கத்தைத் தீவிரமாக ஆரம்பித்தான். வெய்யிலென்று பாராமல் நகரத்திலிருந்த எல்லாக் காரியாலயங்களிலும் சென்று கண்ணீர் ததும்ப வேலை தருமாறு வேண்டினான். ஆனால் எந்தக் காரியாலய மானேஜரின் மனசும் இளகவில்லை.

ஒரு மாதம் சென்றது; அத்தையின் தொந்தரவு தாங்க முடியாமல் அவளுடைய வீட்டிலிருந்து வெளியேறி, பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டான். பம்பாய் நகரத்தின் அகன்ற சாலையில் நடந்து கொண்டிருந்த குமாரலிங்கத்திற்குப் பசி வயிற்றைக் கிண்டியது. கையில் காலணா இல்லை. எதிரிலிருந்த பழக்கடையில் வைக்கப்பட்டிருந்த வாழைப் பழம் அவனைக் கவர்ந்தது. திருடுவதைத் தவிர வேறு வழி எதுவும் அவனுக்குத் தோன்றவில்லை. கடையருகே சென்று விலை கேட்பவன் போலப் பாசாங்கு செய்த அவன் பைக்குள் இரண்டு வாழைப்பழங்கள் சென்று ஒளிந்து கொண்டன. மறு நிமிஷம் அவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். ஆனால் அந்த இரண்டு வாழைப் பழங்கள் அவனுடைய கோரப் பசியைத் திருப்தி செய்து விட முடியுமா?

சாரி சாரியாக ஜனங்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர். பஸ்ஸிற்காகக் காத்து நின்றவர்களிடையே ஒருவனாக நின்றிருந்தான் குமாரலிங்கம். ஒரு பஸ் வந்து நின்றது; நின்றவர்களில் பலர் அதன்மீது படையெடுத்தனர். குமாரலிங்கமும் அதில் கலந்து கொண்டான். ஆனால் அவன் பஸ்ஸில் ஏறவில்லை; அழகிய ஒரு மணிபர்ஸைப் பையில் போட்டுக் கொண்டு, ஒரு ஹோட்டலை நோக்கி நடந்து கொண்டிருந்தான். தன்னுடைய தோள் பட்டையை யாரோ பற்றுவதைப் போல் உணரவே குமாரலிங்கம் திடுக்கிட்டுத் திரும்பினான். புன்னகையுடன் அவனைப் பார்த்தவாறு அவனருகே நின்றான் ஒரு வாலிபன். மிடுக்கான அவனுடைய தோற்றமும் ஆடம்பரமான உடையும் குமாரலிங்கத்தைக் கலங்கச் செய்தன. "என்ன மிஸ்டர் என்னை விடத் தாங்கள் பெரிய சாமர்த்தியசாலி போலிருக்கிறதே! அந்தப் பெரிய மனிதருடைய பையிலிருந்த பர்ஸை லாகவமாக எடுத்துக் கொண்ட தங்கள் திறமையை நான் பாராட்டுகிறேன்" என்று கூறி விட்டு அவனுடைய கைகளைக் குலுக்கினான். குமாரலிங்கம் ஆச்சரியத்துடன் அந்த வாலிபனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சரி வாருங்கள், காப்பி சாப்பிடப் போவோம்" என்று சொல்லிக் கொண்டே அவனைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றான். அந்த மனிதனை எதிர்த்துப் பேச அவனால் இயலவில்லை.

* * *

இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன. அன்று மாலை மில்லிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த முத்து தன்னை யாரோ கூப்பிடுவதைக் கேட்டு, சத்தம் வந்த திசையை நோக்கினான். அவனுடைய நண்பர்கள் கையில் ஏதோ பத்திரிகையுடன் திண்ணையில் உட்கார்ந்திருந்தனர். அவன் அவர்களை நெருங்கியதும், அவர்களில் ஒருவன் மிக்க பரபரப்புடன் "இதைப் பார்த்தாயா?" என்று கூறி, அந்தப் பத்திரிகையின் முதற் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த ஒரு படத்தையும் அதன் கீழிருந்த செய்தியையும் சுட்டிக் காட்டினான்.



சினிமா நக்ஷத்திரம் :—நீங்கள் ஒரு தடவை என்னை ரொம்ப அழகாகப் போட்டோ எடுத்தீர்கள்! இப்பொழுதெல்லாம் அவ்வளவு அழகாக நீங்கள் போட்டோ எடுப்பதில்லையே, என்ன காரணம்?

போட்டோ எடுப்பவர் :—வயசு ஆகிவிட்டதல்லவா...? அந்த விஷயத்தை மறந்து விடுகிறீர்களே!

சினிமா நக்ஷத்திரம் :—......யாருக்கு வயசு ஆகிவிட்டது?

போட்டோ எடுப்பவர் :—......உம், எனக்குத்தான்!

அந்தப் படத்தைப் பார்த்ததும் முத்து அயர்ந்து விட்டான். கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்த அந்தத் தலைப்பைப் படித்தான். "பிரபல பாங்கியில் துணிகரக் கொள்ளை. கொள்ளைக்காரர்களின் தலைவன் குமாரலிங்கம் கைதாகிப் பின்னர் தப்பி விட்டான்......" இதைப் படித்த முத்துவிற்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"என்ன! குமாரலிங்கம் கொள்ளைக்காரனா? 'என் உயிர் உள்ள வரைக்கும் கேவலமான, அகௌரவமான, கேழ்த்தரமான, மட்டரகமான தொழிலைச் செய்ய மாட்டேன்' என்று கூறிய என் தம்பியா கொள்ளைக்காரனாக மாறியிருக்கிறான்?" என்று நினைத்த முத்துவின் உடல் துயரத்தினாலும், அவமானத்தாலும், ஆத்திரத்தினாலும் நடுங்கியது. இந்தச் செய்தியைக் கேட்ட ரங்கநாதம் இடியால் தாக்குண்டவர் போல உட்கார்ந்து விட்டார்.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. குமாரலிங்கம் கூட்டத்தினரின் அட்டூழியம் வலுத்

துக் கொண்டே வந்தது. நாட்டின் பல பாகங்களிலும் கொள்ளைகள், கொலைகள் நடப்பது சர்வ சாதாரணமாகி விட்டது. குமாரலிங்கத்தின் துணிகரச் செயல்களுக்குப் பத்திரிகைகள் பிரதான்யமளித்தன. பிரபல கொள்ளைக்காரனான அவனைப் பிடித்துத் தருபவருக்குப் பதினாயிரம் ரூபாய் இனாம் தருவதாகப் போலீஸ் இலாகா அறிவித்தது. ஆனால் ஒருவராலும் அவனைப் பிடிக்க முடியவில்லை. அவனிருக்கு மிடத்தைக் கண்டு பிடிக்கவும் முடியவில்லை.

புனைவைச் சூழ்ந்துள்ள காட்டில் மறைவான ஒரு இடத்தில் குமாரலிங்கத்தின் கூட்டம் மறைந்து வாழ்ந்து வந்தது. அன்றிரவு ஒரு பெரிய கொள்ளையை நடத்திவிட்டு வெற்றியுடன் திரும்பிய குமாரலிங்கம் ஒரு மரத்தடியில வந்து உட்கார்ந்து கொண்டான். அருகே ஒரு லாந்தர் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

"என்ன குமாரலிங்கம்! நீங்கள் படுக்கப் போகவில்லையா" என்று கேட்டுக் கொண்டே அவனருகில் வந்து உட்கார்ந்து கொண்டான், அவனுடைய நெருங்கிய நண்பனான அலிகான்.

"தூக்கம் வரமாட்டேன் என்கிறது அலிகான்" என்று பதிலளித்த குமாரலிங்கம் சற்று நேரம் மௌனமாக யிருந்து விட்டு, பின் எதையோ நினைத்துக் கொண்டவன் போல் "அலிகான்! இன்று என் பங்கு எவ்வளவு என்று பார்த்து அதை ஏழை மக்களுக்கு வினியோகித்து விடு!" என்று கூறினான்.

"ஆமாம், குமாரலிங்கம்! நீங்கள் உங்கள் பங்கை ஏன் உங்களுடைய பெற்றோருக்கு அனுப்பாமல், ஏழைகளுக்கும் நம் கூட்டத்தினருக்கும் பிரித்துக் கொடுக்கிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அலிகான். வெகு நாட்களாக அதைக் கேட்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தான் அவன்.

"என் தந்தையையும் என் அண்ணனையும் உனக்குத் தெரியாது. கொள்ளை யடித்து, ரத்தம் சிந்தி நான் சம்பாதித்த பணத்தை அவர்கள் கையால் தொடவும் அஞ்சுவார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது எத்தகைய நிலையி லிருக்கிறார்களோ! அவர்களைப் பார்க்க வேண்டும் என்று திடீரென்று ஏனோ எனக்கு ஒரு ஆவல் ஏற்பட்டிருக்கிறது. நாளை நான் எங்கள் ஊருக்குப் போகிறேன். திரும்பி வரும் வரையில் எல்லாவற்றையும் நீயே கவனித்துக் கொள்ள வேண்டும், தெரிந்ததா?"

"அப்படியே ஆகட்டும்" என்று பதிலுரைத்தான் அலிகான்.

ILT றிவேஷத்தில் மதுரை வந்து சேர்ந்தான் குமாரலிங்கம். அப்பொழுது இரவு ஒன்பது மணி யிருக்கும். அந்தக் குறுகிய தெருவில் அதிக ஜன நடமாட்ட மில்லை. தெரு முனையில் மின்சார விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டை நெருங்க நெருங்க அவன் நெஞ்சில் ஏதோ பாரம் அழுத்துவதைப் போலிருந்தது. அரை குறையாக மூடியிருந்த தெரு ஜன்னல் வழியாக அந்த அறைக்குள் பார்த்தான்.

ரங்கநாதம் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். அவருக்குக் கீழே குமாரலிங்கத்தின் தங்கை வசந்தா உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள். மிகவும் இளைத்துக் காணப்பட்ட தன் தந்தையையும், வறுமையின் சின்னங்களுடன் அமர்ந்திருந்த தன் தங்கையையும் கண்டதும் குமாரலிங்கத்தின் கண்கள் கலங்கின. இரு முறை பலமாக இருமிய ரங்கநாதம், இரவு வேலைக்காக மில்லிற்குச் செல்வதற்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்த முத்துவைக் கூப்பிட்டார். அடுத்த அறையிலிருந்து வந்த முத்து, கட்டிலின் ஒரு கோடியில் உட்கார்ந்துகொண்டான். தன் அண்ணனைக் கண்டதும் குமாரலிங்கம் மின்சாரத்தால் தாக்குண்டவன் போலானான். திரண்ட தோள்களுடனும் பரந்த மார்புடனும், அழகிய முகப் பொலிவுடனுமிருந்த முத்துவா இப்பொழுது இப்படி யிருக்கிறான்? ஒட்டிய கன்னங்களும், சோகம் படர்ந்த கண்களும் மெலிந்த உடம்புமாக ஒடுங்கி உட்கார்ந்திருந்த அவனைத் திகைப்புடன் பார்த்துக்கொண் டிருந்தான் குமாரலிங்கம்.

ரங்கநாதம், "முத்து, நீ ஏன் இப்படி இரண்டு 'ஷிப்டு'க்கும் வேலைக்குச் சென்று உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்? உனக்கு வருகிற சம்பளத்தில் நாம் மூன்று பேர் வாழ முடியாதா என்ன?" என்று வினவினார்.

"அப்பா, இப்பொழுது வாழ்க்கையை நடத்தி விடலாம். ஆனால் பிற்காலத்தில்...? வசந்தாவிற்குக் கல்யாணம் செய்ய வேண்டுமல்லவா?" என்று பதிலளித்த முத்து வசந்தாவை வாத்ஸல்யத்துடன் பார்த்தான்.

முத்துவின் வார்த்தைகள் குமாரலிங்கத்தின் இதயத்தைத் தொட்டன. அவனுடைய கடமையை யுணர்ச்சியையும் தியாக உணர்ச்சியையும் கண்டு அவன் நெஞ்சம் உருகியது.

முத்துவின் வார்த்தைகளைக் கேட்ட ரங்கநாதம் நீண்ட பெருமூச் செறிந்தார்.

"அந்தப் பையன் குமாரலிங்கத்தின் மீது எவ்வளவோ நம்பிக்கை வைத்திருந்தேன். என் ஆசையில் மண்ணைப் போட்டு விட்டான் அவன். கௌரவமான உத்தியோகத்தைத் தான் செய்வேன் என்று கூறி வீட்டை விட்டுச் சென்ற அவன், கொள்ளையடிக்கும் கொலை செய்யும் மகா பாவியாகி நம் குடும்பத்தின் மதிப்பையும், கண்ணியத்தையும் சீர்குலைத்து விட்டானே" என்று வருத்தத்துடன் பேசிய அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

ரங்கநாதத்தின் ஒவ்வொரு வார்த்தையும் குமாரலிங்கத்தின் நெஞ்சில் ஈட்டியைப்போல் பாய்ந்தது. கண்களில் மல்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சற்று நேரம் வரை அம்மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தான் இறங்கி யிருந்த ஹோட்டலை நோக்கிப் புறப்பட்டான். அவன் மனத்தில்

திடமான தீர்மானம் ஒன்று உருவாகி விட்டிருந்தது. தன் அறையை யடைந்த அவன், போலீஸ் சூப்பிரண்டிற்கு ஒரு கடிதம் எழுதி, அதைத் தபாலில் சேர்த்து விட்டான்.

மறுநாள் காலை இம்பீரியல் ஹோட்டலின் முன் ஒரு ஆயுதம் தாங்கிய போலீஸ் படை வந்து நின்றது. வேகமாக உள்ளே நுழைந்து போலீஸ் சூப்பிரண்டு, ஜவான்கள் பின் தொடர, 51ம் நம்பர் அறையில் நுழைந்து, பிரபல கொள்ளைக்காரனை குமாரலிங்கத்தைக் கைது செய்தனர்.

அதற்கடுத்தநாள் காலை மில்லிற்குப் போவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்த முத்து, தபால்காரன் கொடுத்துவிட்டுச் சென்ற ஒரு ரிஜிஸ்தர் செய்யப்பட்ட கவரையும், ஒரு சாதாரண கவரையும், எடுத்துக் கொண்டு வீட்டினுள் சென்றான். அந்தச் சாதாரணக் கவரின்மேல் தன் தம்பியின் கையெழுத்திருந்ததைக் கண்டவுடன் ஆச்சரியமடைந்த அவன் ஆவலுடன் பிரித்துப் படித்தான்:

அன்புள்ள அப்பாவுக்கு,

'கௌரவமான, கண்ணியமான உத்தியோகத்தைப் பெற்ற பிறகு நான் வீடு திரும்புவேன்' என்ற வீம்புடன் வீட்டை விட்டு வெளியேறிய நான் அதற்கு மாறாகக் கொள்ளைக்காரனாக மாறினேன். இன்னல் படும் உங்களுக்கு உதவி செய்யாமல் கடமையை மறந்த கயவனானேன். தன் உழைப்பால் உங்களைக் காக்கும் என் அண்ணனின் தியாக உணர்ச்சியும், பெருந் தன்மையும் என் கண்களைத் திறந்து விட்டன. அப்பா; கொடிய பாவியாகிய நான் தங்கள் முன்னால் வரவும் விரும்பவில்லை. இனி இவ்வுலகில் வாழவும் விரும்பவில்லை. எவ்வளவோ கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைத்த உங்களுக்கு நான் எவ்விதத்திலும் உதவவில்லை. ஆனால் இப்பொழுது என்னால் தங்களுக்குச் சிறிது உதவிசெய்யச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.

தங்கள் மகனாக அருகதையற்ற
குமாரலிங்கம்.''

கடிதத்தைப் படித்து முடித்த முத்துவிற்கு ஒன்றும் புரியவில்லை. இதற்குள் அவனருகே வந்து நின்று ஆர்வத்துடன் அக்கடிதத்தைப் படித்த ரங்கநாதத்திற்கும் என்னவென்று விளங்கவில்லை. கையிலிருந்த மற்றொரு கவரைப் பிரித்துப் பார்த்த முத்து, அதிலிருந்த பதினாயிர ரூபாய் செக்கையும், போலீஸ் கமிஷனரிடமிருந்து, பிரபல கொள்ளைக்காரனை குமாரலிங்கத்தைக் கண்டுபிடிக்க உதவியதற்காக, அவர் எழுதியிருந்த நன்றியுரையையும் கண்டதும் திடுக்கிட்டான். உண்மையை உணர்ந்துகொள்ள ரங்கநாதத்திற்கு அதிக நேரமாகவில்லை. துக்கம் நெஞ்சை யழுத்த, கண்களிருந்த நீர் ஆறாகப் பெருக அவ்விடத்திலேயே உட்கார்ந்து விட்டார்.

படித்துப் பாருங்கள்!

ஸ்ரீ ஸ்துதி

இம் மண்ணுலகில் பிறந்து வறுமை யென்னும் வலையில் சிக்கி உழலும் மக்களின் நிலை கண்டு இரங்கி ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்த ஸ்ரீ வேதாந்த தேசிகர் இந்நூலை அருளிச் செய்தார்.

இந்தப் புனித நூலை இசையோடு பயின்று இனிமையாகப் பாடி எல்லோரும் திருமகளின் திருவருள் நோக்கம் பெற்று இன்பமாக வாழ வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் ஸ்ரீ ஏ. கே. ராகவாச்சாரியார் அவர்கள், இந்நூலின் கண் உள்ள இருபத்தைந்து ஸ்லோகங்களுக்கும் ராகங்களும் ஸ்வரங்களும் அமைத்துள்ளார். வடமொழி ஸ்லோகங்கள் நாகர எழுத்திலும் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை: ரூ. 1—0—0.

இலக்கியக் கட்டுரைகள்

தமிழ் ஆராய்ச்சித் துறையில் பல வருஷங்கள் ஈடுபட்டுத் தமிழ்த் தாய்க்கு அரும்பணி புரிந்த பேராசிரியர் ராவ்ஸாகிப் மு. இராகவையங்கார் அவர்கள் அவ்வப்பொழுது பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளையும், ரேடியோவிலும், மற்ற இடங்களிலும் நிகழ்த்திய பிரசங்கங்களையும் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். கட்டுரை ஒவ்வொன்றும் விஷயம் செறிந்து காணப்படுகின்றது. அவர்களுடைய ஆராய்ச்சி அறிவும் தமிழ்ப் பேர் இலக்கியத்தில் அவர்களுக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபாடும் கட்டுரைகளுக்குத் தனிச் சுவையை அளிக்கின்றன. இந்நூலிலுள்ள கட்டுரைகளெல்லாம் வறட்டு ஆராய்ச்சிக் கட்டுரையாக இல்லாமல் சாதாரணத் தமிழ் ஞானம் பெற்றவர்களும் பெரிதும் அனுபவிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

''தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை' என்பது, பரதனைப் பற்றிக் கம்பர் பாடிய இராமாயணத் தொடர். சாஸன வழக்குப்படி 'செம்மை' என்பது மாற்றுயர்ந்த பொன்னின் வகையாம். இச்சொல்லை நயம்பெற இங்கு அமைத்து ஆளுகின்றார் அக்கவியரசர்'' என்கிறார் 'சாஸனத் தமிழ்' என்ற கட்டுரையில். இப்படிப் பலப்பல இடங்கள் இந்நூலில் சுவைப்பட விளங்குகின்றன.

பிரசுரம்: சின்னியர் பப்ளிஷிங் கம்பெனி, 36, வேங்கடாசல முதலி தெரு, பார்க் டவுன் சென்னை 3; விலை: ரூ. 2—8—0.

பாம்புகள்

''பாம்பு என்றால் படையும் கலங்கும்'' என்ற பழமொழிப்படி, பாம்புக்குப் பயப்படாதவர்களே இல்லை என்று கூறலாம். ஆனால் இந்த நூலைப் படித்தால், பாம்பு என்ற பெயரைக் கேட்டாலே அலறிப் புடைத்துக் கொண்டு ஓடும் அசட்டுப் பயம் நீங்கிவிடும்.

விஷமுள்ள பாம்பு எது? இவற்றுள் வேற்றுமை எப்படிக் காண்பது? விஷத்தால் நேரிடுவது என்ன? விஷக் கடிக்குச் சிகிச்சை எப்படிச் செய்வது என்பன போன்ற சந்தேகங்களுக்கெல்லாம் இந்நூலில் ஆராய்ச்சி பூர்வமாக விளக்கம் கூறப்பட்டிருக்கிறது.

எழுதியவர்: மா. ஏகாம்பர நாதன்; கிடைக்குமிடம்: மா. சுவாமிநாதன், 4, பெஸண்ட் ரோடு, கோபாலபுரம், சென்னை—6. விலை: ரூ. 1—0—0

இலக்கிய சேவை

ஆர். ராஜகோபாலன்

ஒரு நாள் என் நண்பர் என்னை இலக்கிய சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எனக்குப் பாட புத்தகங்களை தடுமாற்றம், இதில் இலக்கிய சேவையா! என்னுடைய நண்பர் தமக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டுமென்பதற்காக என்னைத் தூக்கி வைத்துப் பேசுகிறாரோ என்று நினைத்தேன்.

தட்டுத் தடுமாறி, நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொள்ள அவரிடம் என்னுடைய நிலைமையைச் சொன்னேன். ஆனால் அவர் பரிதாபப்படவில்லை. என் நிலைமையைக் கண்டு வருந்தவும் இல்லை. மிகுந்த மகிழ்ச்சியுடன் பெரிய பெரிய காவிய கர்த்தாக்களின் வாழ்க்கையை அலசி எடுத்துச் சொன்னார். கடைசியில் நான் கூறினேன்:

"தமிழ் வியாசமோ இங்கிலீஷ் 'காம்போசிஷனோ' எழுதுவதென்றால் விளக்கெண்ணெய் குடிப்பது போல இருக்கும் எனக்கு. இதில் நான் கட்டுரை கதை எழுதுவதெங்கே, அல்லது அப்படியே தடுமாறி விழுந்து எழுதினாலும் அது இலக்கிய சேவையைவிட இலக்கியக் கொலையாக அல்லவா இருக்கும்......" இப்படிக் கூறியதன் பலனாக அவர் ஒரு நிமிஷம் யோசிக்க வேண்டியிருந்தது.

"உன்னை எழுதவா சொன்னேன்!"

"பிறகு வேறு என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்!" என்று கேட்டேன்.

"நீ வேறு எழுத வேண்டுமா என்ன! அட கண்ணராவியே இதோ பார் நம் நாட்டில் எத்தனையோ எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். பழைய காவியங்கள் இருக்கின்றன."

"இருக்கட்டுமே! அதனால் எனக்கு என்ன!"

"அவற்றை எவ்வளவோ பேர் பிரசுரிக்கிறார்கள். அதைப் படித்து இன்புறுவது என்பது உன்னால் முடியாதா என்ன!" என்றார்.

"ஓஹோ சரிதான் படிக்கச் சொல்கிறீர்களா! அதற்கென்ன படிக்கிறேன்."

"அடடே! இவ்வளவு சுலபமாக முடித்து விட்டாயே. படி யென்றால் இரவல் வாங்கிப் படி என்று அர்த்தமல்ல. மாதமொரு முறை இரண்டு ரூபாய்க்கு வாங்கு என்றுதான் சொல்லுகிறேன்."

நான் புஸ்தகம் வாங்குவதில் அவருக்கு அவ்வளவு அக்கறை என்ன! ஒருவேளை புஸ்தகாலயம் ஏதாவது வைத்திருக்கிறாரா, அல்லது பிரசுர கர்த்தா ஆகிவிட்டாரா! நாம் வாங்கும் புஸ்தகங்களைக் கடன் வாங்கிச் செல்லப் பார்க்கிறாரா என்ற கேள்விகள் என் மனத்திலெழுந்தன.

இப்படிப்பட்ட சிந்தனைகளை என்னுள்ளே கிளப்பி விட்டு விட்டு ஸ்ரீமான் குருமூர்த்தி நகர்ந்தார். ஆனால் அவர் சொன்ன இலக்கிய சேவை என் மனத்தை விட்டு நீங்கவே இல்லை. ஆகவே நான் கேட்ட உண்மையை என்னுடைய நண்பர்களுக்குச் சொன்னேன். அந்த நண்பர்கள் அவர்களுடைய சிநேகிதர்களிடம் சொன்னார்கள். கூடவே இன்னார் இப்படிச் சொன்னார்களென்று என் பெயரும் அடிபட்டது.

இந்த மட்டும் இலக்கிய சேவை செய்யும் ஆர்வமாவது இருக்கிறதே என்று சிலர் சந்தோஷப் பட்டனர். ஆனால் யாரும் இது வரை புஸ்தகம் வாங்கியதாகத் தெரியவில்லை.

ஒரு நாள் நான் வசித்து வந்த அறையிலிருந்தவர் திடீரென்று காலி செய்து கொண்டு போனார். அவருக்குப் பதிலாக அந்த ஊருக்குப் புதிதாக வந்திருந்த ஒருவரை என் அறையில் அமர்த்தினேன்! அவர் வந்ததும்தான் நான் ஸ்ரீமான் குருமூர்த்தியை நினைக்கும் இக்கட்டான கட்டம் வந்தது.

கோபாலசாமி என்ற திருநாமம் படைத்த அவர் பெரிய கருமியாக இருந்தார். வயதில் பெரியவரானதால் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தேன்.


இப்படி யொருவர் வந்து சேர்ந்தாரே என்று விதியையும், ஜாதகத்தையும், பிறந்த வேளையையும் நான் மனமார ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்து கொண்டிருக்கையில், நானே இந்த அறையை விட்டுப் போய்விட்டால் என்ன என்று யோசித்தேன். சென்னைப் பட்டினத்தில் நினைத்தவுடனே அறை கிடைக்கிறதா! ஆனால் 'வாடகை' குறைவாக இருந்தால், கோபாலசாமியும் என் கூடவே வரத்தயார்தான்! ஆகவே, இப்பொழுது புதிய கட்டம் ஒன்று ஏற்பட்டது.

ஒரு சில நாட்களுக்குள் என்னிடமிருந்து அவர் சில விஷயங்களைத் தெரிந்து கொண்டார். நான் வெற்றிலை போட்டால், 'என்னடா சுவாமிக்கு அர்ச்சனை செய்வது போல வெற்றிலைக் காம்பைக் கிள்ளிப் போட்டு அறையை அசுத்தம் செய்கிறாய்!'



கிட்டு:—என்னடா ராமு, இப்படி வாசற்படியிலே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?

ராமு:—வீட்டுக்குள்ளே போகிறதற்கே பிடிக்கவில்லையடா! இங்கே அங்கே ஓடி ஏதாவது விஷமம் பண்ணினால், 'விஷமம் பண்ணாதே' என்று அப்பா அடிக்கிறார். அதற்காகப் பயந்து கொண்டு சும்மா ஒரு மூலையிலே உட்கார்ந்து கொண்டிருந்தால், 'உடம்புக்கு என்ன வந்து விட்டது?' என்று அம்மா தர்மாமீட்டரை வைத்துப் பார்க்க ஆரம்பித்து விடுகிறாள்!



போலீஸ்காரன் (பையனைப் பார்த்து):—ஏன் அப்பா, ராத்திரி இந்தனை நேரத்துக்குக்கு மேல் எங்கே இப்படிச் சுற்றுகிறாய்? என்ன விசேஷம்?

பையன்:—அந்த விசேஷத்தைச் சொல்லத் தெரிந்தால் நான் வீட்டுக்குப் போய் அப்பாவைத் தைரியமாய்ப் பார்ப்பேனே!

என்பார். அவருடைய நண்பன் சொன்ன எதையாவது வைத்துக் கொண்டு அவனைக் கேலி செய்வார்! இல்லாவிட்டால் குறை சொல்லிக் கொண்டே இருப்பார். இப்படித்தானே இவர் என்னைப் பற்றியும் பிறரிடம் சொல்லுவார் என்ற பயத்தில் நான் வாய் மூடி மௌனியானேன். அவர் எதைச் சொன்னாலும் 'ஆமாம்' போடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருந்தது. என்ன போங்கள், எதையாவது அளந்து கொண்டு என் பிராணனை வாங்கிக் கொண்டிருந்தார். எழுத விடமாட்டார், சொந்த விஷயமாக யோசனை செய்ய விடமாட்டார். நான் தூங்க வேண்டுமென்றால் முதலில் அவரைத் தூங்கப் பண்ணி விட்டுப் பிறகுதான் நான் தூங்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

அப்பொழுதுதான், இந்த இலக்கிய சேவை என் கண்களுக்குப் புலப்பட்டது. நான் ஏதாவது கதை, கட்டுரை, நாடகம் எழுதினேன் என்று நினைக்கிறீர்களா! இல்லவே இல்லை. அவருக்குப் புத்தகப் பைத்தியம், படிக்கும் பழக்கம் உண்டு என்று தெரிந்ததுதான் தாமதம். மாதம் இரண்டு ரூபாய்க்கு அல்ல ஐந்து ரூபாய்களுக்குப் புத்தகம் வாங்கினேன்; என் நண்பர்களை நச்சரித்துப் புஸ்தகங்களை வாங்கச் சொல்லி, அதையும் இரவலாக வாங்கி வந்தேன். நான் பழைய புஸ்தகக் கடைக்காரனுக்கு மாதம் இரண்டு ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி அவனிடமிருக்கும் புத்தகங்கள் எல்லாவற்றையும் வாடகைக்கு வாங்கி வந்தேன். அவன் எந்தப் புஸ்தகத்தையும் விற்கும் முன்பு என்னிடம் கொடுத்து விட்டுத்தான் மறுகாரியம் பார்க்க வேண்டும் என்ற நிபந்தனை வேறு இட்டேன்.

இப்படியாக இலக்கிய சேவை செய்த என்னைப் பார்த்து ஸ்ரீமான் குருமூர்த்திக்குச் சந்தோஷம் தான். ஆனால் அவருக்குத் தெரியுமா என் பரிதாபகரமான நிலைமை! இந்தப் புஸ்தகங்களையெல்லாம் படிப்பது ஸ்ரீமான் கோபாலசாமிதான் என்பது! எனக்குத்தான் புஸ்தகம் சேகரிப்பதிலேயே பொழுது கழிந்து விடுகிறதே! ஒரு நிமிஷம் சும்மாயிருந்தால் கோபாலசாமி நச்சரிப்பு அதிகரித்து விடுமே! இப்பொழுது நல்ல வேலையாக அவர் படிப்பதில் கவனம் செலுத்துகிறார். நான் புத்தகம் வாங்கும் இடங்களில் அவர்களே கதையைச் சொல்லி, விமரிசனம் செய்து விடுகிறார்கள். அதனால் நான் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவசியம் இருக்கவில்லை.

எனக்கென்னவோ பயமாகத்தான் இருந்தது. புஸ்தகங்கள் அடுக்கடுக்காக என் அறையில் குவிந்து கொண்டேயிருந்தன. இப்படியே இன்னும் இரண்டு மாதங்கள் போனால், நானும் கோபாலசாமியும் அறையை விட்டு வெளியே வந்து படுத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவு புத்தகங்கள் நிறைந்து விடும். இதுவாவது போனால் போகிறது என்றால், உலகத்திலிருக்கும் புத்தகங்கள் எல்லாமே ஒரு வருஷ காலத்திற்குள் முடிந்து போனால் கோபாலசாமிக்கு எதைப் படிக்கக் கொடுப்பது!

இட நெருக்கடியை உத்தேசித்து என் நண்பர்களுக்கு என்னிடமிருந்த புத்தகங்களைக் கொடுத்து வந்தேன். இதனால் எப்பொழுது பார்த்தாலும் என் அறையில் கூட்டம் இருந்து கொண்டேயிருந்தது. எனக்கு இரவலாகப் புத்தகம் கொடுக்க முன் வந்தவர்கள் அதையெல்லாம் வைத்து என் அறையிலேயே ஒரு "இலவச இலக்கிய வாசகசாலை" ஏற்படுத்தி விட்டார்கள்! ஒவ்வொருவரும் வந்து ஏதாவது பேசிக் கொண்டேயிருப்பார்கள்! ஆனால் கோபாலசாமி முன்போலல்லாமல் இப்பொழுது என்னுடன் சண்டை போட முன் வந்து விட்டார்!

"என்னப்பா இந்த வாசகசாலையை எதற்கு வைத்தாய்! கூட்டம் அதிகமாகி விட்டதே! இந்தச் சோம்பேறிக் கூட்டத்தை நிறுத்து. இது உடம்புக்கு ஆகாது தெரியுமா! ஒரு கவி சொல்லுகிறார்" இப்படி ஆரம்பித்தார் ஒரு நாளைக்கு. எதை வேண்டுமானாலும் கவிகள் சொல்லட்டும், நான் மாத்திரம் அந்த கோபாலசாமி "சோம்பேறிக் கூட்டம்" என்று சொன்னதை எல்லோரிடமும் சொல்லிவிட்டேன். எனவே என் நண்பர்கள் கவனம் முழுமையும் கோபாலசாமி மீது திரும்பியது. "சோம்பேறிக் கூட்டம் என்று எப்படிச் சொல்லலாம்!" என்று அவர்கள் அவருடனே சண்டை செய்யப் போகவே, கோபாலசாமி நிணறி விட்டார்! எனக்கும் ஓய்வு கிடைத்தது.

பிறகு என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்களா! ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல், தாம் படிக்காத சில புஸ்தகங்களுடனும் தம் மூட்டை முடிச்சுகளுடனும் அவர் கம்பி நீட்டினார்! அவர் அந்தப் புஸ்தகங்கள் யாவும் எடுத்துக் கொண்டு போயிருக்கலாமே என்று பிற்காலத்தில் நான் வருத்தப்பட்டதற்குக் காரணம், வாசகசாலை என்ற அடிப்படை உரிமையில் அநேக கோபாலசாமிகள் இப்பொழுது என்னை வதைத்துக் கொண்டிருப்பதுதான்! இதற்கு என்ன செய்வது!

தந்தையின் நண்பர்

ராஜ்

சீர்காழி நடேச ஐயர் அவர்களைத் தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. அவருடைய கலைத் திறமையே பிரசித்திக்குக் காரணம். அவர் சங்கீதத்தில் நிபுணர்; வீணை வாசிப்பதில் அசகாய சூரர்; அவர் வீணையை வைத்துக் கொண்டு சுருதி சுத்தமாகப் பாட ஆரம்பித்து விட்டால் கல்லும் உருகும், குயிலும் வெட்கித் தலை குனியும். அவர் நல்ல பாடகர் மட்டுமல்ல; சிறந்த அறிவாளி. தேச பக்தர். இப்பொழுது அவருக்கு வயது தளர்ந்தாலும், அந்தக் காலத்தில் தேசத் தலைவர்களுடன் விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற தியாகியாவார். சிறைவாசம் செய்யும்போது அவருக்கு இருந்த அவகாசமே சங்கீதத்தை மேலும் மேலும் பயிற்சி செய்து மெருகேற்றிக் கொள்ள உதவியாக இருந்தது. கர்நாடக சங்கீதம் மட்டுமல்ல, இந்துஸ்தானி ஸங்கீதமும் சாஸ்திர ரீதியில் பயின்றிருந்தார். சிறையில் தொண்டர்களும், தலைவர்களும் இவருடைய சங்கீதக் கச்சேரியைக் கேட்டு அனுபவிப்பார்கள்.

நாடு சுதந்தரம் அடைந்தது. நடேசய்யரும் தம் சொந்த ஊராகிய சீர்காழியில் வசிக்கத் தலைப்பட்டார். ஐயரவர்கள் எவ்வளவோ தடவை தேசத் தொண்டில் ஈடுபட்டிருந்தும், தம் குல ஆசார விவகாரங்களை அனுஷ்டிக்கத் தவறுவதில்லை. ஆகையால் இன்று அவரைப் பார்த்தால் அசல் வைதிகப் பிராமணன் என்று சொல்லும்படி இருந்தார். தலையில் முன்னால் வழுக்கை, பின்னால் அர்த்த சந்திரனைப் போல் வெள்ளை மயிர், கழுத்தில் ருத்திராக்ஷம், நெற்றியில் விபூதி, அதன் நடுவில் ஜவ்வாதுப் பொட்டு, இடுப்பில் சங்கிலி போட்ட கடிகாரம்.

நடேசய்யர், உலகத்தில் தம் சங்கீதத்துக்கு அடுத்தபடியாக அவருடைய ஒரே புதல்வி சரோஜினியிடம்தான் உயிரையே வைத்திருந்தார். அவளுக்கு அந்தப் பெயரை சரோஜினி நாயுடுவின் ஞாபகார்த்தமாக வைத்திருந்தார். சரோஜினி நல்ல அழகு வாய்ந்தவள், வெகு சூடிகையாகப் படித்து வந்தாள். அவர் நல்ல சங்கீத வித்வானானதலால் தமக்குத் தெரிந்த வித்தையை அப்படியே மகளுக்குக் கரைத்துப் போட்டிருந்தார். தம் அருமைப் பெண்ணைக் கண்டு பெருமையடைவார் தகப்பனார். அவள் பள்ளிக்கூடத்திலிருந்து வர நேரமாய் விட்டால் அவர் தவித்துப் போய் விடுவார். வயது வந்த பெண் சரோஜினி; மேலும் அவள் தாயில்லாதவள் என்று நடேசய்யர் அவளைக் காலையில் பள்ளிக்கூடத்துக்குத் தாமே அழைத்துக் கொண்டு போவார். மத்தியானம் அவள் சாப்பிட ஒரு பொட்டலத்தில் டிபனும், கூஜாவில் ஜலமும், பிளாஸ்கில் காப்பியும் கொண்டு போவார். சாயந்திரம் பள்ளிக்கூடம் விடப் பத்து நிமிஷம் முன்பே போய்ப் பள்ளிக்கூட வாசலில் நின்று கொண்டு குழந்தையை அழைத்து வருவார். வயது ஆக ஆக, சரோஜினிக்குத் தகப்பனார் இப்படிப் பட்டிக்காட்டு ஆசாமி மாதிரி இருந்து கொண்டு தன்னோடு வருவதும் போவதும் பிடிக்கவில்லை.

ஒருநாள் புதிதாக அந்த ஊருக்கு ஜில்லா கலெக்டராக வந்திருக்கும் ரமணனின் புதல்வி ராதா, "சரோ! உனக்குத் தினம் டிபன் எடுத்துக் கொண்டு வந்து, உன்னைப் பள்ளியில் கொண்டுவந்து விட்டு அழைத்துப் போகும் பிச்சு யாரடி?" என்று வேறு கேட்டுவிட்டாள். இது இன்னும் சரோஜினியின் மனதை வாட்டியது. அப்பாவை இப்பொழுது திருத்துவது என்பது முடியாத காரியம், ஜாடை மாடையாக அப்பாவைப் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டாம் என்று கூடச் சொல்லிப் பார்த்தாள்; அவரோ மசியவில்லை.

சரோஜினி படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழா வந்தது. பள்ளிக்கூடதைச் சேர்ந்த எந்த விழாவும் சரோஜினியின் பாட்டில்லாமல் நடைபெறாது. இந்த விழாவுக்கும் சரோஜினியின் பாட்டு ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்று விழாவுக்குத் தலைமை தாங்க பம்பாய் கவர்னர் ஒப்புக் கொண்டிருந்தார். அவர் தெற்கே சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார். சிதம்பரம் வருவதாக இருந்தவரை சீர்காழி பள்ளி விழாவுக்குப் பிடித்துப் போட்டு விட்டார்கள். விழா நடக்க இரண்டு நாட்கள் இருக்கும்போதே மாணவிகளின் பெற்றோர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பி இருந்தார்கள். சரோஜினிக்கு அப்பா வருவதில் இஷ்டமில்லை, அதை அவரிடமும் நேரே சொல்ல முடியவில்லை. மெதுவாக...... "அப்பா, நீங்கள் விழாவுக்கு வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

அவருக்கு வரவேண்டும் என்ற இஷ்டம் தான். ஏனென்றால் அருமைப் புதல்வி பாடுவதைக் கேட்டு ஆனந்திக்க வேண்டும் என்று அவருக்கு ஆசை. இருந்தாலும் கவர்னர், கலெக்டர் முதலிய முக்கிய பிரமுகர்களெல்லாம் வரும் இடத்துக்குத் தன்னைப்போல் ஒரு பிச்சு போனால் எப்படி இருக்குமோ என்று நினைத்து "நான் அவசியம் வரவேண்டுமா?" என்று கேட்டார்.

"அவசியமில்லை அப்பா! அங்கே ஒரே பட்டு பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களும் இருப்பார்கள். நாமோ ஏழைகள் தானே! நம்மை யார் கவனிப்பார்கள்? கும்பலோடு கும்பலாக நீங்கள் கஷ்டப்பட வேண்டுமே என்று பார்க்கிறேன்" என்றாள் சரோஜினி.

நடேச ஐயருக்கு இது சரி என்று பட்டது. "நீ சொல்வது உண்மைதான் அம்மா! நான் வரவில்லை. ஆனால் நீ திரும்பிவர நாழி



பொக்கைவாய்த் தாத்தா :—எந்தக் காரியத்துக்கும் யாரண்டையும் போய் நான் பல்லைக் காட்டிக் கொண்டு நிற்க மாட்டேன், ஸார்!

யாருமே, உன்னைத் திரும்பி அழைத்துவர வேண்டாமா?" என்று அன்போடு கேட்டார்.

"வேண்டாம் அப்பா, எங்கள் வாத்தியாரம்மாவே திருப்பி அழைத்துக் கொண்டு வந்து விடுவாள். நீ வரவேண்டாம்!" என்று சொல்லி விட்டாள் சரோஜினி.

விழா நாளும் வந்தது. சரோஜினியின் தோழி ராதா, சரோஜினியிடம் "என்ன சரோ, உங்க வீட்டிலிருந்து யார் வருவார்கள் இன்று?" என்று குத்தலாகக் கேட்டாள். "யாருமில்லை ராதா, உங்கள் வீட்டிலிருந்து யார் வருகிறார்கள் என்றாள் சரோஜினி." "அதை ஏன் கேட்கிறாய்? கவர்னர் வந்தாலும் வந்தார் எங்கப்பாவுக்கு ஒழிவே இல்லை. அவருடனேயே சுற்றி வருகிறார். அம்மாவும் கவர்னர் சம்சாரத்துடன் சுற்றிக் கொண்டிருக்கிறாள். அவர்கள் இருவரையும் விழாவுக்கு அப்பாவும் அம்மாவும்தான் அழைத்து வர வேண்டும்" என்று பெருமை தாங்காமல் சொல்லிக் கொண்டாள் ராதா. இதைக் கேட்ட சரோஜினிக்கு வருத்தம் தாங்கவில்லை. ராதை தன்னைப் பரிகசிப்பதாகத் தோன்றியது. தனக்கும் அப்படி எல்லாம் சொல்லிக் கொள்ளும்படியான பாக்கியம் இல்லையே என்று அவள் உள்ளம் பொருமியது.

விழா நேரம் நெருங்கியது. பள்ளிக் கூடத்தில் இதற்கென்று விமரிசையாகப் போடப் பட்டிருந்த பந்தலில் ஒரே கூட்டம். மேடைக்குப் பின்னால் நாட்டியம், நடனம், சங்கீதம் இவைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் பெண்களின் சத்தமும், வாத்தியாரம்மாக்களின் மிரட்டலும் கலந்து ஒலித்தன. விருந்தாளிகள் ஐந்து மணிக்கு வர வேண்டும்; ஆனால் கொஞ்ச நேரம் தாமதித்துத்தான் வந்தார்கள். திரைக்குப் பின்னால் சரோஜினி மேடையில் உட்கார்ந்து கொண்டாள் பாடுவதற்கு. திரை விலகியது. வெளியில் ஒரே வெளிச்சம். பாட ஆரம்பிக்கு முன்பு சரோஜினி கண்களைக் கொஞ்சம் மூடிச் சரஸ்வதி ஸ்தோத்திரம் சொல்லி விட்டுக் கண்களைத் திறந்தாள். எதிரில் அன்றைய விருந்தாளி பம்பாய் கவர்னரைப் பார்த்தாள், தூய கதராடை அணிந்து காந்திக் குல்லாயுடன் விளங்கினார். அவர் பக்கத்தில் யார்? அவள் கண்களையே நம்ப முடியவில்லை! அவள் எந்த உலகில் இருக்கிறோம் என்று ஒரு கணம் திகைத்தாள். பம்பாய் கவர்னர் பக்கத்தில் ஜிப்பா அணிந்து கொண்டு உட்கார்ந்திருந்தது அவளுடைய அப்பாவேதான்.

அப்பாவும் கவர்னரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்; சரோஜினி ஆச்சரியத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டு பாட ஆரம்பித்தாள். அவளுக்கு உள்ளூற ஆனந்தம், பாட்டு அன்று பிரமாதமாக அமைந்தது. பாடி முடிந்ததும் கரகோஷம் வானைப் பிளந்தது. சரோஜினிக்குத் தன் தகப்பனருக்கு இப்படி ஒரு பதவி கிடைத்தது எப்படி என்று கொஞ்சங்கூடப் புரியவில்லை.

திரையும் விழுந்தது. சரோஜினி மேடையை விட்டு எழுந்ததும், ராதா ஓடி வந்து, "சரோஜினி, உன்னை எங்கள் அப்பா கூப்பிடுகிறார்!" என்று சொல்லி அழைத்துப் போனாள். சரோஜினிக்கு ஏதோ ஆகாயத்தில் நடப்பது போலவே இருந்தது. கவர்னருக்கு அறிமுகம் ஆனதும் அப்பாவைப் பார்த்தாள் சரோஜினி.

"சரோஜினி! நான் வருவதாக இல்லை. கவர்னரும் நானும் அந்தக் காலத்தில் ஒரே சிறையில் இருந்தோம். என்னிடம் இவருக்கு ஒரு பிரேமை. என்னுடைய சங்கீதத்தில் இவருக்குத் தனி ஆசை உண்டு. நான் சிறையில் நடத்தி வந்த சங்கீத வகுப்பில் படித்தவர். சீர்காழி என்றதும் என் ஞாபகம் வந்ததாம். கலெக்டரையும் அழைத்துக் கொண்டு நம்வீடு தேடி வந்தார். என்னுடன் சிறிது நேரம் அளவளாவி விட்டு என்னையும் கூடவே அழைத்து வந்து விட்டார். அதனால்தான் வந்தேன்" என்று அவர் சமாதானம் கூறினார்.

"அப்பா, இதுவரையில் உங்கள் அருமை தெரியாமல் இருந்து விட்டேன்" என்று அழுகையோடு கூறினாள் சரோஜினி.

கவர்னர் சரோஜினியைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். அவளுக்கு மறு பக்கத்தில் கவர்னரின் மனைவி அமர்ந்திருந்தாள். அவர்கள் இருவருக்கும் அன்றைய நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறிக்கொண்டிருந்தாள் சரோஜினி. அவள் மனம் பெருமையால் பூரித்துப் போயிருந்தது. எட்டிப் பின்புறம் ராதாவைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தாள் சரோஜினி. அந்தப் புன்னகை அவளை மட்டம் தட்டுவதுபோல் இருந்தது.

தாய்மார்கள் விரும்பி வாங்கும் அழகிய ஸ்டீல் தொட்டில், கொசு வலை ஸ்டாண்டுடன் கூடியது மலிவான விலை - நீடித்த உழைப்பு!

சைஸ் 2½ × 1½ விலை ரூ. 55/-





ஸ்டீல் மாண்டர் மடக்கும் நாற்காலி. வீடு, ஆபீஸ், ஹோட்டல், சினிமாக் கொட்டகை ஆஸ்பத்திரி, காண்டீன் முதலியவைகளுக்கு இன்றியமையாதவை. மிகக் குறைந்த விலை. உறுதியான ஸ்டீல் நாற்காலி. ஒன்றின் விலை ரூ. 16—0—0

விவரங்களுக்கு:

ஸாம்ஸன் & கம்பெனி லிமிடெட்

151, பிராட்வே :: மதராஸ் - 1


போன்: 4521 தந்தி: BARAFASH

நீங்கள் விரும்புவது போலவே....

அகில உலக நிகழ்ச்சிகளை வெகு எளிதாகவே கேட்டு ஆனந்திக்கலாம்

மாடல் 5118 ஏ. ஸி. மெயின்களுக்கு
மாடல் 5218 ஏ.ஸி./டி.ஸி. மெயின்களுக்கு

எல்லா வேவ் பாண்டுகளிலும் இயங்குமாறு முழு டியூன் அளிக்கும் ஆர். எப். ஸ்டேஜுடன் இணைக்கப்பட்ட மிக விசேஷமானதும் நேர்த்தியானதுமான 7 வால்வ் ஸூபர் ஹெட் பாண்ட் ஸ்ப்ரெட்டுடன் கூடியது. மிக நேர்த்தியான வால்நட் காபினெட்டில் பொருத்தப் பட்டது.





இந்தியாவில் விலை ரூ. 895/-

"HIS MASTER'S VOICE" *Radios*

The Gramaphone Co., Ltd. Calcutta-Bombay-Madras-Delhi

காரியாலயத்திலிருந்து அப்போதுதான் வீடு திரும்பிய ராகவன் 'அப்பாடா' என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். வீட்டுக்கு வந்து பத்து நிமிஷத்துக்கு மேல் ஆகியும் இன்னும் தன்னை வரவேற்க மனைவி லலிதா வராதது கண்டு சற்றுக் கோபம் கொண்டான் ராகவன். சமையலறையில் குழந்தைகள், அறையே இரண்டாகப் போகும்படி சத்தம் போடுவதையும் லலிதா அவர்களை அதட்டிக் கொண்டிருப்பதையும் கேட்டுக் கொண்டிருந்த ராகவனின் பொறுமை எல்லை மீறி விட்டது. "லலிதா! லலிதா......வ்!" என்று தன்னுடைய கோபத்தை யெல்லாம் வருவித்துக் கொண்டு சத்தம் போட்டான்.



"அப்பா வந்து விட்டார், கூடத்துக்கு வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே புன்முறுவல் தவழ லலிதா வந்தாள். அவள் பின்னாலேயே மூன்று சின்னஞ்சிறு குழந்தைகளும், "அப்பா வந்துட்டா! அப்பா வந்துட்டா!" என்று குதித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டு ராகவனைச் சூழ்ந்து கொண்டன. ஐந்து வயதான பெரிய பெண் சாந்தா ராகவனுடைய சட்டைப் பையைச் சோதிக்க ஆரம்பித்தாள் இரண்டாவது பிள்ளை சுந்தர் அப்பாவின் ஜிஜார்ப் பையைத் தடவத் தொடங்கினான். கடைசிக் குழந்தை உஷா உரிமையோடு ராகவனின் மடிமேல் ஏறி உட்கார்ந்து விட்டாள். ராகவன் களைப் படைந்து வீட்டுக்கு வந்த சமயத்தில் குழந்தைகள் அவனைச் சூழ்ந்து கொண்டு தொந்தரவு செய்வதை அவன் விரும்பவில்லை.

"ஏ, லலிதா! எப்போது பார்த்தாலும் பாலர் வகுப்பு வாத்தியாரம்மா மாதிரி கால்டனுன் குழந்தைகளோடு நிற்கிறாயே! ஆபீஸிலிருந்து களைப்புடன் வரும் கணவனை உபசரிப்போம் என்று உனக்குக் கொஞ்சமேனும் தெரிகிறதா? இந்தச் சனியன்களை எங்கே யாவது அனுப்பித் தொலைக்கக் கூடாதோ?" என்று கத்தினான்.

குழந்தைகள் அப்படியே நடுங்கிவிட்டனர். கொஞ்சம் விவரம் தெரிந்த மூத்த பெண் சாந்தா, "அம்மா, அடுத்த வீட்டுப் பத்மாவோடு விளையாடிவிட்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டுத் தன் தங்கையையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு போய்விட்டாள். குழந்தையின் சமர்த்தைப் பெரிதும் வியந்த லலிதாவின் மனம் அதே சமயத்தில் கணவனின் அர்த்தமற்ற கோபத்தைக் கண்டு புழுங்கியது. கண்களில் லேசாக வந்த நீரை ராகவனுக்குத் தெரியாமல் துடைத்துக் கொண்டே சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "உடையைக் கழற்றி விட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு வாருங்கள். இதோ காப்பி கொண்டு வருகிறேன்" என்று சொல்லி மீண்டும் சமையலறைக்குச் சென்றாள்.

ராகவனுக்கும் லலிதாவுக்கும் கலியாணம் ஆகி ஆறு வருஷங்கள்தான் ஆகியிருந்தன. அழகு என்ற சொல்லுக்கு அர்த்தம் கொடுப்பவள் லலிதா. நல்ல எடுப்பான தோற்றம், உள்ளத்தை ஊடுருவும் அகன்ற நீண்ட கண்கள், கள்ளமற்ற உள்ளம், குறுகுறுப்பான பார்வை, நல்ல படிப்புடன் பதவிசான நடத்தை இவ்வளவுமாகச் சேர்ந்து ராகவனை அவளைக் கண்டு மெய் மறக்கச் செய்தது. இருவரும் அன்னியோன்னியமான தம்பதிகள். இவ்வளவும் சேர்ந்திருந்த போதிலும் அவர்களுடைய இன்ப வாழ்வு எப்போதுமே பூரணத்துவம் பெறவில்லை என்று ராகவனுக்குத் தோன்றியது. அதற்குக் காரணம் கலியாணமான ஐந்து வருஷத்திற்குள் லலிதா மூன்று குழந்தைகளைப் பெற்று விட்டதுதான். ஆனால் லலிதாவைப் பார்த்த யாரும் அவள் மூன்று குழந்தைகளுக்குத் தாயார் என்று சொல்ல மாட்டார்கள். இன்னும் இளமை பொங்கி வழியும் தோற்றத்துடனேயே இருந்தாள்.

ராகவனுக்கு எப்போதும் லலிதாவைச் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டும், அவளோடு சதா இன்பமாகப் பேசி அளவளாவ வேண்டும் என்பது அவனுடைய அவா. வீட்டுச் சூழ்நிலை அவனுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்தது. சின்னஞ்சிறு குழந்தைகளின் தேவைகளைக் கவனிக்கத்தான் லலிதாவுக்குப் பொழுது சரியாக இருந்தது.

ராகவனுக்கும் குழந்தைகளின் மீது அன்பு இல்லாமலில்லை. ஆயினும் கவலையில்லாமல் லலிதாவோடு சினிமாவுக்கோ, பீச்சுக்கோ போக முடியவில்லையே என்ற ஏக்கம் அவனை வாட்டி யெடுத்தது. இந்த அசட்டு ஆசை ராகவனிடம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. அன்றும் ஆசையோடு ஜாதி மல்லிகை வாங்கிக் கொண்டு அதைத் தன் கையாலேயே லலிதாவுக்குச் சூட்டவேண்டு

மென்று வந்தான். வந்தவுடன் குழந்தைகள் தொந்தரவு செய்தபடியால் ராகவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

முகம் கழுவிக்கொண்டு வந்த ராகவனிடம் தயாராக ஆற்றி வைத்திருந்த ஆவி பறக்கும் காப்பியை எடுத்துக் கொடுத்தாள் லலிதா. காப்பியைக் கையில் எடுத்து, அதை அனுபவித்துக் குடித்து ரஸித்தவாறு லலிதாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் ராகவன். அதில் எவ்வித சலனமும் தெரியவில்லை. ராகவன் அவள் கையை ஆசையோடு எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டு, "என் மேல் கோபமா, லலிதா? குழந்தைகளைக் கோபித்துக் கொண்டதில் உனக்கு வருத்தம். இல்லையா? எனக்கு மட்டும் குழந்தைகளிடம் ஆசை யில்லையா, என்ன! ஆபீஸிலிருந்து வந்ததும் உன்னோடு கொஞ்ச நேரம் பேசிக் களித்தால் நாள் முழுவதும் உழைத்ததின் அலுப்புத் தீரும். அந்த சமயத்தில் குழந்தைகள் சுற்றிச் சூழ்ந்து கொண்டு கச்சரித்தால் எனக்குக் கோபம் வருகிறது. எங்கே, இப்படி என்னருகில் வந்து உட்காரு!" என்று அன்போடு அவளைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான்.

"எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. தங்கப் பதுமைகள் போலிருக்கும் குழந்தைகளைப் பார்த்து, கால் டஜன் அரை டஜன் என்று நீங்கள் சொல்லும்பொழுது என் மனசுக்குக் கஷ்டமாக இருக்கிறது. நம்மை விட்டுக் குழந்தைகள் எங்கே போகும், சொல்லுங்கள்! மாம்பலத்திலுள்ள என்னுடைய அக்கா கமலா காரும் பங்களாவுமாகக் கொழிக்கிறாள். இந்த மாதிரி ஒரு குழந்தைக்குத் தவம் செய்கிறாள். அவளுக்குக் கிடைக்கவில்லை. குழந்தைப் பேறு கிடைப்பதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? ஏதோ நமக்கு பகவான் கொடுத்த வரப்பிரசாதமாகிய குழந்தைகளை நீங்கள் வெறுத்துக் கொண்டேயிருக்கிறீர்களே!" என்று நாத்தழுதழுக்கக் கூறினாள். அவள் கண்களில் நீர் முட்டிற்று.

"சீ, அசடே! கண்களைத் துடைத்துக் கொள். நீ சொல்வது போலக் குழந்தைகள் சாமானியமாகக் கிடைக்கக் கூடிய பேறு இல்லை யென்றாலும் அதைப்போலத் தொல்லையும் வேறொன்றும் கிடையாது. பொம்மைகள் வாங்கிக் கொடுத்தால் பேசாமல் அவைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்களா? அதுதான் கிடையாது. அவைகளை உடனே தொலைத்து விட்டு மறுபடியும் நம்மிடம் வந்து தொந்தரவு செய்கிறார்கள். அப்பப்பா! இந்தக் குழந்தைகள் படுத்துவதே பெரிய தொல்லைதான்!" என்றான் ராகவன். லலிதாவும் அவன் சொல்லுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

மறுநாள் மத்தியானம் லலிதாவின் அக்கா அவளைப் பார்க்கத் தன்னுடைய பெரிய காரில் வந்திருந்தாள். கமலாவைப் பார்த்தவுடனே குழந்தைகள் மூவரும் 'பெரியம்மா, பெரியம்மா' வென்று கமலாவைச் சூழ்ந்து கொண்டன. கமலாவுக்குக் குழந்தைகளே இல்லாததால் தங்கப் பதுமைகள் போலிருந்த தங்கையின் குழந்தைகள் மீது அசாத்தியப் பிரேமை வைத்திருக்காள். குழந்தைகளைக் கொஞ்சி முத்தமிட்டாள். பிறகு லலிதாவைப் பார்த்து, "என்ன, லலிதா! நீ ஏன் மாம்பலம் பக்கமே வரவில்லை? குழந்தைகளைப் பார்க்காமல் என் கண்கள் பூத்து விட்டன. இன்றைக்குக் குழந்தைகளோடு நாமெல்லோரும் கடற்கரை போவோமா?" என அன்போடு கேட்டாள் கமலா.



"அவர் ஆபீஸிலிருந்து வந்து விடுவாரே அக்கா? நான் முன்னதாக அவரிடம் சொல்லியிருந்தாலும் கவலையில்லாமல் வரலாம். இன்றைக்குப் போகாவிட்டால் என்ன? இன்னொரு நாளைக்குப் போனால் போயிற்று!" என்றாள் லலிதா.

"நீ வராவிட்டால் வேண்டாம்! நான் குழந்தைகளையாவது இன்று கட்டாயம் அழைத்துக் கொண்டுதான் போகப் போகிறேன்" என்று கமலா சொல்லிவிட்டு லலிதாவின் பதிலுக்குக்கூடக் காத்திராமல், "சாந்தா, வா! உனக்குத் தலையைப் பின்னி விடுகிறேன். சுந்தர்! அம்மாவிடம் கேட்டு உனக்கு நல்ல சட்டை, நிஜாரை எடுத்துக் கொண்டு வா! லலிதா! குழந்தைகளுக்கு உடுப்புகளை எடுத்துக் கொடு, நான் அலங்காரம் செய்து விடுகிறேன்!" என்று மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டே குழந்தைகளோடு குழந்தையாய் ஒன்றிப்போய் அவர்களுக்கு அலங்காரம் செய்ய ஆரம்பித்தாள்.

லலிதாவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. இதுவரையில் குழந்தைகளைத் தனியே ஓரிடத்திற்கும் லலிதா அனுப்பினதே இல்லை. ஆகையால் குழந்தைகளைத் தானில்லாமல் கமலாவோடு அனுப்ப லலிதாவின் மனம் இடங் தரவில்லை. அனுப்பமாட்டேனென்று சொன்னால் குழந்தைப் பேறுக்குத் தவங் கிடக்கும் கமலா, வித்தியாசமாக நினைத்துக் கொள்வாள். மேலும் ர்கவன்தான் தினமும் குழந்தைகளிருப்பது தொல்லையென்றும், பிடுங்கலென்றும் சதா சொல்லிக் கொண்டிருக்கிறான். ஒரு நாள்தான் ராகவனின் இஷ்டப்படி குழந்தைகள் இல்லாமல் கலகலப்பாக இருக்கட்டுமே என்று லலிதாவுக்குத் தோன்றியது. அப்படி நினைக்கும் போதே அவளுடைய தாய் மனம் வருந்தியது. குழந்தைகள் இருவரும் அலங்காரம் செய்து கொண்டாகி விட்டது.

எல்லாரும் எங்கேயோ போகிறார்களென்பதை எப்படியோ தெரிந்து கொண்ட கடைசிக் குழந்தையான ஒன்றரை வயதுள்ள உஷா பெரியதாக அழ ஆரம்பித்து விட்டாள். அதைக் காணச் சகியாத கமலா உஷாவை அப்படியே வாரி அணைத்துக் கொண்டு, "என் கண்ணே! நீ அழாதேடி! உன்னையும் நான் அழைச்சுண்டு போறேன்" என்று சொல்லி விட்டு லலிதாவைப் பார்த்து, "லலிதா, உஷாவுக்கு நல்ல சட்டை கொண்டு வா! அவளையும் அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று சொன்னாள். "உஷா ரொம்பப் படுத்துவாளே அக்கா! எல்லாரையும் அழைத்துக் கொண்டு போனால் உனக்கும் கஷ்டமாக இருக்கும்! உஷா இங்கு இருக்கட்டுமே!" என்றாள் லலிதா.

"குழந்தைகள் என்றால் படுத்தாமலிருப்பார்களா லலிதா? அவர்கள் விஷமம் செய்வதும் ஒரு அழகுதான். அதை அனுபவிப்பதும் ஒரு கலை லலிதா! நீ குழந்தைகளைப் பற்றி ஒன்றுக்கும் கவலைப்படாதே! நான் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்கிறேன். சரியாக ஏழு மணிக்குள் வந்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு எல்லாக் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போய்விட்டாள். குழந்தைகள் காரில் கடற்கரைக்குப் போவதால் ஒரே கும்மாளம் போட்டுக் கொண்டு போய் விட்டார்கள்.

லலிதாவுக்குக் குழந்தைகள் இல்லாமல் வீடு வெறிச்சென்று போய் உள்ளே போகவே பிடிக்கவில்லை. பித்துப் பிடித்தாற் போல வாசலிலேயே உட்கார்ந்திருந்தாள். கடியாரம் டாண் என்று நாலரை மணி அடித்ததும்தான் உணர்வு பெற்று ராகவன் ஆபீஸிலிருந்து வரும் நேரமாயிற்றே என்று நினைத்து உள்ளே சென்றாள். அவசரம் அவசரமாய் முகம் கழுவிக் கொண்டு தலையை வாரி முடிந்து கொண்டாள். வேறு ஏதாவதொரு புடவையைக் கட்டிக் கொள்ளலாம் என்று பீரோவைத் திறந்து பார்த்தாள். கறுப்பு ஜார்ஜட் புடவைதான் அவள் கண்ணில் முதலில் பட்டது. அந்தப் புடவை ராகவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அதைக் கட்டிக் கொண்டால் குழந்தைகள் மேலே வந்து விழுந்து கிழுக்கி விடுகிறார்களென்பதற்காக லலிதா அந்தப் புடவையை உபயோகிப்பதே இல்லை. குழந்தைகள்தான் இன்று இல்லையே என்று அதைக் கட்டிக் கொண்டாள். அதற்கேற்ற ரவிக்கையும் போட்டுக் கொண்டு நிலைக் கண்ணாடியின் முன் நின்று பார்த்துக் கொண்டாள். அவளுக்கே தன் தோற்றம் மிகவும் கவர்ச்சிகரமாகத் தோன்றியது.

அலங்காரம் முடிந்து லலிதா வெளியே வருவதற்கும் ராகவன் ஆபீஸிலிருந்து உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது. லலிதாவைப் பார்த்து அப்படியே பிரமித்து நின்று விட்டான். "அடேடே! இது யார், என் லலிதாவா? அப்ஸரஸ் மாதிரி அல்லவா இருக்கிறாள்?" என்று சொல்லித் திறந்த வாயை மூடாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னை ஏன் அப்படி வெறிக்கப் பார்க்கிறீர்கள்? கண் திருஷ்டி பட்டுவிடப் போகிறது?" என்று சொல்லிக் கடகட வென்று சிரித்தாள் லலிதா.

"அது இருக்கட்டும்! குழந்தைகள் எங்கே காணோம்? வீடே நிசப்தமாக இருக்கிறதே!" என்று ஆச்சரியத்துடன் வினவினான் ராகவன்.

"மாம்பலத்திலிருந்து அக்கா வந்திருந்தாள். குழந்தைகளைக் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு போகிறேன் என்று சொல்லி ரொம்பவும் ஆசைப்பட்டு அழைத்துப் போயிருக்கிறாள்! சரி. பேசிக்கொண்டே யிருக்கிறீர்களே! உடையை மாற்றிக் கொண்டு வாருங்கள். டிபன் சாப்பிடலாம்" என்றாள்.

ராகவன் உடையை மாற்றிக் கொண்டு வந்து டிபன் சாப்பிட உட்கார்ந்தான். இளம் மனைவி வளையல் குலுங்க, புதுப் புடவைச் சரசரக்க டிபன் கொடுக்க, ராகவன் அதை ருசி பார்த்து நிதானமாய்ச் சாப்பிட்டான். இடையே லலிதாவைப் பார்த்து, "லலிதா!

இன்று டிபன் ரொம்ப ஜோர்! அது என் வயிற்றுக்கு மாத்திரம் விருந்தாக இல்லாமல் நீ அலங்காரம் செய்து கொண்டிருப்பது என் கண்களுக்கும் விருந்தாக இருக்கிறது" என்று கண்ணைச் சிமிட்டிய படியே கூறினான்.

"போதும் உங்களுடைய கவிதா வர்ணனை! இலையைப் பார்த்துச் சாப்பிடுங்கள்" என்று பொய்க் கோபத்துடன் கூறினாள் லலிதா. "லலிதா! குழந்தைகள் இருந்தால் என்னை இப்படி நிம்மதியாகச் சாப்பிட விடுவார்களா? பாவம்! அவர்கள் இல்லாமல் வீடு வெறிச் சென்றிருக்கிறது" என்றான் ராகவன். லலிதா அவனுடைய மன நிலையை உணர்ந்து தனக்குள் மெள்ளச் சிரித்தாள்.

ராகவனுக்கு ஆபீஸிலிருந்து வந்ததும் குழந்தைகள் தன்னைத் தொந்தரவு செய்யாமல் இருந்தது ஏதோ ஒன்று சூனியமாகவே இருப்பது போல் தோன்றிக் கஷ்டமாக இருந்தது. ஆயினும் லலிதாவுக்கு எதிரில் தன் மன நிலையைக் காட்டிக் கொள்ள அவனுடைய சுய கௌரவம் இடங் கொடுக்கவில்லை. "லலிதா! கேரம் ஆடி ரொம்ப நாளாயிற்று. கேரம் போர்டை எடுத்து வருகிறாயா? ஒரு ஆட்டம் போடுவோம்! பொழுதே போகவில்லை!" என்றான். சரியென்றவாறு லலிதா கேரம் போர்டை எடுத்து வந்தாள். இருவரும் ஆடத் தொடங்கினார்கள். ராகவனுக்கு ஆட்டத்தின்மீது கொஞ்சம் கூடக் கவனம் போகவே இல்லை.

கேரம் போர்டை எடுத்து விட்டால் சாந்தா தானும் ஆடுவேனென்று ஆட உட்கார்ந்து விடுவாள். சுந்தர் ஆடுபவர்களை ஆட விடாமல் கையைப் பிடித்திழுப்பான். குழந்தை உஷாவோ காய்களைக் கண்டபடி இறைக்க ஆரம்பித்து விடுவாள். இந்தத் தொந்தரவெல்லாம் இல்லாமல் ஆடுவது ராகவனுக்குக் கொஞ்சம் கூட ரஸிக்கவில்லை. கவனமில்லாமல் ஆடியதால் ராகவன் பத்து நிமிஷத்தில் தோற்றுவிட்டான். லலிதா கை கொட்டிச் சிரித்து விட்டு, "என்னிடம் தோற்றுவிட்டீர்களே!" என்று அவனைப் பார்த்துக் கேலி செய்தாள்.

"லலிதா! குழந்தைகள் இல்லாமல் வீடே வெறிச்சென்றிருக்கிறது. மணியும் ஆறடித்து விட்டது. இப்படி எல்லாக் குழந்தைகளையும் சேர்த்தாற்போல் யாருடனாவது அனுப்பலாமா? எனக்கென்னவோ மனம் கொஞ்சங் கூடச் சரியாக இல்லை. வா, லலிதா! வாசலில் போயாவது சற்று உட்கார்ந்து கொண்டு குழந்தைகள் வருகிறார்களா பார்ப்போம்!" என்று சொன்னான் ராகவன்.

"யாருடனாவது அனுப்பினேனா? என்னுடைய சொந்த அக்காவுடன்தானே அனுப்பினேன்? நீங்களுந்தான் ஆபீஸிலிருந்து வந்தால் குழந்தைகள் இருப்பது தொல்லையாயிருக்கிறதென்று சதா சொல்வீர்கள். அதனால்தான் இன்று ஒரு நாளாவது தொல்லையில்லாமல் நாம் நிம்மதியாக இருக்கலாமென்றுதான் அனுப்பினேன். அதுவும் உங்களுக்குப் பிடிக்கவில்லை!" என்றாள் பரிகாசத் தொனியில் லலிதா.

லலிதாவின் பதில் ராகவனுக்கு மட்டற்ற வேதனையையும் கோபத்தையும் உண்டாக்கியது. "குழந்தைகள் தொந்தரவு செய்தால் அதைச் சொல்வதற்குப் பெற்ற தகப்பனுக்கு உரிமையில்லையா, என்ன? அதை இப்போது என்னிடம் சொல்லிக் காண்பிக்கிறாயோ?" என்றான் சற்றுக் கடுமையாகவே. லலிதா அவன் மன நிலையை அறிந்து மேலே பேசாமல் வாளாவிருந்து விட்டாள்.

ராகவனுக்கு மனம் நிம்மதியின்றித் தவித்தது. இத்தனை நாளாக, ஒரு நாளாவது குழந்தைகள் தொல்லையில்லாமல் லலிதாவோடு தனிமையில் இன்பமாகப் பேசிக் களிக்க அவன் மனம் சதா விரும்பி ஏங்கியது. அவன் விரும்பிய தருணம் தானாகக் கிடைத்திருக்கும் இந்தச் சமயமோ அப்படி நிம்மதியாக அனுபவிக்க அவன் மனம் இடம் தரவில்லை. எண்ணங்களெல்லாம் சின்னஞ் சிறு குழந்தைகளையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. லலிதாவோடு சரளமாகப் பேசக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. மணி ஏழரை ஆயிற்று. இன்னும் கமலாவும் குழந்தைகளும் வரவில்லை.

ராகவனுக்கு ரொம்பவும் கோபம் வந்துவிட்டது. லலிதாவுக்கும் இன்னதென்று விவரிக்க முடியாத பயம் பிடித்துக் கொண்டது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடியவாறு திகிலடைந்து வீதியில் ஏதாவது கார் சத்தம் கேட்கிறதா, குழந்தைகள் வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தனர். அங்கு ஒரே மௌனம் நிலவியது. தன்னுடைய அதிகாரத் தொனியில் அந்த மௌனத்தைக் கலைத்தான் ராகவன். "நீ எப்படி என்னைக் கேட்காமல், குழந்தைகளை உன் அக்காவோடு அனுப்பினாய்! கமலாவுக்குக் குழந்தைகளே கிடையாது. அதனால் அவளுக்குக் குழந்தைகளைக் கட்டி மேய்க்கும் விதமும் தெரியாது. மூன்று சின்னஞ்சிறு குழந்தைகளை, அதுவும் துருதுருவென்று சதா விஷமம் செய்யும் குழந்தைகளை அனுப்பினால் அவள் எப்படி அவர்களோடு சமாளிப்பாள்? அனுப்பின இடமோ சமுத்திரக் கரை. நீ எல்லாரையும் அனுப்பிவிட்டு ஹாய்யாக டிரஸ் செய்து கொண்டிருக்கிறாயே" என்றெல்லாம் வசைமாரி பொழிந்தான்.

லலிதா அப்படியே பேசும் சக்தியற்று நின்று விட்டாள். ராகவன் இதுவரையில் லலிதாவை இப்படிக் கடுமையாகக் கோபித்துக் கொண்டதே யில்லை. அவளுக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது. தன்னுடைய இஷ்டத்திற்கு முற்றிலும் மாறாக, ராகவனைக் குழந்தைகளின் தொல்லையினின்று ஒரு நாளாவது திருப்தி செய்யும் நோக்கத்தோடுதான் குழந்தைகளைக் கமலாவோடு அனுப்பினாள். அதற்காக ராகவன் மகிழ்ந்து தன்னைப் போற்றுவான் என்றே அவள் எதிர்பார்த்தாள். அதற்கு நேர் எதிர்மாறாக ராகவன் நடந்து கொண்டதைப் பார்க்க லலிதாவுக்குத் திகிலாகி விட்டது. அவள் அழுதே விட்டாள். ராகவனைப் பார்த்து, 'என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குச் சந்தோஷமாக யிருக்கட்டும் என்ற எண்ணத்தோடுதான் அனுப்பி விட்டேன். நான் அனுப்பியிருக்கக் கூடாது தான். உஷாவும் சுந்தரும் துணிச்சலான குழந்தைகளாயிற்றே! கமலாவை மீறித் துஷ்டத்தனம் செய்து அலைகளின் அருகே ஓடி விட்டால் என்ன செய்கிறது? சாந்தா இரண்டுங் கெட்டான் குழந்தை, எங்கேயாவது பராக்குப் பார்த்துக் கொண்டே கமலாவென்று நினைத்துக்கொண்டு யாருடனாவது போய்விட்டால் என்ன செய்கிறது? பகவானே! இன்றுமட்டும் நான் செய்த தப்பை மன்னித்து என் குழந்தைகளை ஜாக்கிரதையாய் வீட்டில் கொண்டு வந்து சேர்! பிள்ளையாரே! ஆறு சிதர்த் தேங்காய் போடுகிறேன்" என்றெல்லாம் பலவாறாய்ப் புலம்பினாள். ராகவனுக்கும் இன்னது செய்வதென்று தெரியவில்லை. லலிதா சிறு குழந்தை போல் விசிப்பதைக் காண அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. "லலிதா! வீணாக ஏன் புலம்புகிறாய்? நடந்தது நடந்து விட்டது. குழந்தைகள் இருப்பது தொல்லை என்று நான் சொல்லி இருக்கக் கூடாதுதான். அதற்காக நீ அவர்களைக் கண்காணாமல் அனுப்பி விடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இன்று அவர்கள் வந்து, சேரட்டும். இனிமேல் யாருடனும் அனுப்பாதே! இந்தச் சில மணி நேர அனுபவம் போதும்!" என்றான்.

எட்டு மணியும் அடித்து விட்டது. சாப்பிடக்கூடப் பிடிக்காமல் அந்தத் தம்பதிகள் வாசலையே நோக்கியவாறு உட்கார்ந்திருந்தார்கள். பூம், பூம் என்று மோட்டார் சத்தம் கேட்கவும் லலிதாவும் ராகவனும் பாய்ந்து ஓடினார்கள் வாசலுக்கு.

"அம்மா, அம்மா! பெரியம்மா எனக்கு இந்தக் கண்மூடித் திறக்கும் பொம்மை வாங்கிக் கொடுத்தா, பார்!" என்று ஆனந்தத்தோடு கூவிக்கொண்டு கையில் ஒரு பொம்மையுடன் வந்தாள் குழந்தை சாந்தா.

"அப்பா! நாங்களெல்லாம் பீச்சுக்கும், கடைக்கும் போனோமே! இந்தச் சாவி கொடுக்கிற மோட்டாரை எனக்குப் பெரியம்மா வாங்கி குடுத்தாளே!" என்று மழலையில் கொஞ்சிப் பேசினான் சுந்தர். உஷா பேசத்தெரியாமல் பல பொம்மைகளைப் பெற்றோர்களிடம் காட்டி ஏதோ காச்சு மூச்சென்று அவள் பாஷையில் உளறிக் கொட்டினாள். ராகவனும் லலிதாவும் குழந்தைகளை மாறி மாறிக் கொஞ்சினார்கள். கமலா தான் குழந்தைகளுக்கு வாங்கின பொம்மை, விளையாட்டுச் சாமான் எல்லாவற்றையும் உள்ளே வைத்துவிட்டு, "லலிதா! குழந்தைகள் ரொம்ப சமர்த்து. என்னைக் கொஞ்சம்கூடத் தொந்தரவு பண்ணவே இல்லை. எனக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. குழந்தைகளை விட்டுப் பிரியவேண்டுமே என்று இருக்கிறது. நீ குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு மாம்பலத்தில் வந்து பத்து நாள் இரு!" என்று ஆசையோடு சொன்னாள் கமலா.

"அதற்கென்ன? வந்தால் போச்சு! நீ இங்கே சாப்பிட்டு விட்டுப்போ அக்கா!" என்றாள் லலிதா. ராகவனும் அதையே சொன்னான். "இல்லை, லலிதா! இன்று சாப்பிடவில்லை. உன் அத்திம்பேர் காத்துக் கொண்டிருப்பார். நான் போய் வருகிறேன்!" என்று சொல்லிக் குழந்தைகளை முத்தமிட்டு விட்டுப் புறப்பட்டாள் கமலா.

கமலாவை அனுப்பிவிட்டு உள்ளே வந்த லலிதா ராகவனைப் பார்த்து, "இனிமேல் நீங்கள் குழந்தைகள் இருப்பது தொல்லையென்றும் பிடுங்கல் என்றும் சொன்னால் நான் அவர்களை அக்காவிடம் அனுப்பி விடுவேன்?" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"ஐயையோ! அப்படியெல்லாம் அனுப்பி விடாதே! குழந்தைகள் இல்லாமல் நான் பட்ட அனுபவம் போதும்!" என்று சொல்லிச் சந்தோஷத்துடன் சிரித்தான் ராகவன். லலிதாவும் சிரித்தாள். இன்னதென்று புரியாமலே பெற்றோர்களுடன் சேர்ந்து அவர்கள் சிரிப்பதைப் பார்த்து அந்த சின்னஞ் சிறு குழந்தைகளும் கல, கலவென்று சிரித்தனர்.



மார்ச்சளி
உபத்திரவங்களுக்கு
உண்மையான உதவி
நோயினால் தாக்குண்ட மிருதுவான சுவாச உறுப்புகளுக்கு ஏஞ்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsion) மிகவும் இதமளிக்கிறது. மார்பில் ஏற்படும் எரிச்சலைத் தவிர்த்துத் தொண்டையையும் மார்பையும் குணப்படுத்துகிறது. இருமல், ஜலதோஷம் மற்றும் சுவாசாசய நோய்களுக்குப் பிறகு ஏஞ்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsion) சாப்பிடுவது நோயை விரைவில் குணப்படுத்த உதவுகிறது.
எல்லா கெமிஸ்டுகளிடமும்
வியாபாரிகளிடமும் கிடைக்கும்
ANGIER'S
EMULSION
EMULSION
(Angier's Emulsion)



'SCISSORS'
S-220
1900
1925
1952
'SCISSORS'
CIGARETTES
SPECIAL ARMY QUALITY
W.D.&H.O.WILLS.
BRISTOL & LONDON.
மூன்று தலைமுறைகளாகப் பிரசித்தி பெற்றவை
5½ அணாவுக்கு 10



ரா. விழிநாதன்

ஞாயிற்றுக்கிழமை மூன்று மணி இருக்கும். நான் கையில் பத்திரிகையை எடுத்துக் கொண்டு படிப்பதற்காகச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

இலங்கை வாழ் இந்தியர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்துக் கொண்டிருந்த நடவடிக்கை தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி ஒரு புறம் பிரசுரமாகி இருந்தது. மற்றொரு புறத்தில் மலானின் ஆதிக்க வெறியை எதிர்த்துத் தென் ஆப்பிரிக்கா வாழ் இந்தியர்கள் நடத்தும் உரிமைப் போரைப் பற்றிய செய்தி வெளியாகி யிருந்தது.

இன்னொருபுறம் தொழிலாளிகளின் தொல்லைகளை நீக்கி அவர்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காகத் திருத் தோழர் திம்மண்ணுச்சாமி நிகழ்த்தியிருந்த காரசாரமான சொற்பொழிவு பிரசுரமாகி யிருந்தது. மற்றொரு புறத்தில், 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று கங்கணங் கட்டிக் கொண்டு, தங்கள் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் பெரு நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டிருந்த மாதர் நல உரிமைச் சங்கத்தின் திறப்பு விழா நடத்திய மாதர் மந்திரி மந்தாகினி தேவியின் பிரசங்கம் இரண்டரைப் பத்திகளுக்குச் சற்று அதிகமாகவே வெளியாகி யிருந்தது.

பிரித்த பக்கங்களில் எல்லாம் உரிமைப் பிரச்னை பற்றிய விஷயங்கள் அடிபடவே, உலகத்தின் கண் வாழும் மாந்தர்களுக்கு உரிமை என்பது உண்ணும் உணவு உடுக்கும் உடை, வசிக்கும் வீடு இவற்றைப் போல் மிக மிக அத்தியாவசியமான பொருளாக இருக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்தேன். ஏனெனில் இந்த முடிவுக்கு வர எனக்கு உரிமை உண்டல்லவா!

உரிமை இழந்தவன் ஒன்றுக்கும் உதவாதவன். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்தக் காலத்தில் மாதர்கள் தங்கள் உரிமைக்காகப் புரட்சி செய்கிறார்கள். அந்தக் காலத்தில் அதாவது மனு வாழ்ந்த காலத்தில் மாதர்கள் மேம்பட்டும் ஆண்கள் தாழ்ந்தும் இருந்திருக்க வேண்டும். மனிதன் புரட்சி செய்து பெண்களை அடக்கி யிருக்க வேண்டும். அதன் பலனாகவே மனு ஆண்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க வேண்டி 'ந ஸ்திரீ ஸ்வாதந்த்ரியம் அர்ஹதி' அதாவது பெண்கள் சுதந்திரத்துக்கு அருகதை யற்றவர்கள் என்று சொல்லி யிருக்க வேண்டும்.

அடிமை நாடுகள் 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்று உரிமைப் போர் நிகழ்த்துவதும், பத்திரிகைகள் 'அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை' என்று கோஷிப்பதும், நம் வீட்டுப் பெண் குழந்தைகள் தங்கள் நலனையும் உரிமையையும் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகக் கண்ணீர் விடக் கற்பதற்கும் ஒரே காரணம், உரிமை பறி போகாமல் இருக்க வேண்டித்தானே!

இப்படியாக நான் உரிமையைப் பற்றி உரிமையுடன் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையிலே என் நண்பன் கும்பகர்ணன், "என்ன, அப்பா! பத்திரிகை படிப்பதில் பலமாக ஆழ்ந்து விட்டாய் போலிருக்கிறதே!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

கும்பகர்ணன் என் ஆப்த நண்பன். அவனும் நானும் கௌபீனம் கட்டத் தெரிந்த நாள் முதற் கொண்டு, ஏன்! பிறவி எடுத்த நாள் முதற் கொண்டே இணைபிரியாத் தோழர்களாகி விட்டோம். ஆகவே, அவனுக்கு என்னைக் காண வருவதற்கு, நேரம், பொழுது, போக்கு, சந்தர்ப்பம் என்று ஒன்றும் கிடையாது. நினைத்தபொழுதெல்லாம் என்னைக் காண வந்துவிடுவான்.

நான் காரியாலய அலுவலில் மும்முரமாக மூழ்கி யிருப்பேன். இந்தச் சமயம் பார்த்து, "இந்த வேலைக்கு என்ன அப்பா அவசரம்! மெதுவாகச் செய்து கொள்ளலாம். உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். என்னுடன் கொஞ்சம் உரையாட வாயேன்!" என்று உறவாடிப் பேசி என் காரியத்தைக் கெடுப்பான். எனக்கு அவனிடம் 'இப்படி வேலையைக் கெடுக்கிறாயே. பாவி!' என்று ஆத்திரம் ஆத்திரமாக வரும். இருந்தாலும் என்ன செய்வது!

சகவாச தோஷம் என்பது ஒரு விசித்திரப் போக்கு. இது யாருக்கும் புரியாத புதிர். சில நாட்கள் அவன் என்னைத் தேடி வர நாழிகையாகி விட்டால் எனக்கு என்னவோ போலிருக்கும். வேலை ஓடாது; இருப்புக் கொள்ளாது. 'இன்றைக்கு ஏன் இவ்வளவு நாழிகை ஆகியும் ஆளைக் காணோம்!' என்று அவனுக்காக ஏங்கித் தவங் கிடக்கத் தொடங்குவேன்.

அன்று நான் உரிமைப் போரைப் பற்றிப் பலமான யோசனையில் ஆழ்ந்திருந்த பொழுது, குண்டுச் சட்டியில் குதிரை யோட்டிய கதையாக அவன் வந்து சேர்ந்தது எனக்கு உள்ளூறச் சற்றுப் பிடிக்க வில்லைதான்.



இருந்தாலும் பால்ய நண்பனை, இணைபிரியாத் தோழனை, "போ!" என்று பிடித்துத் தள்ளி விடுவது ஒரு மனிதனுக்கு அழகாகுமா!

ஆகவே, "வா, அப்பா! வா! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்று உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறி அவனை வரவேற்றேன்.



அப்புறம், "ஏன் அப்பா! எனக்குப் பத்திரிகை படிக்கக் கூட உரிமையில்லையா! இப்படிச் சமயத்தில் வந்து கெடுக்கிறாயே!" என்று உரிமையுடன் கடிந்து கொண்டேன். உரிமைப் பிரச்னையில் ஈடுபட்டிருந்த நான் அப்பொழுது அவனை அப்படிக் கேட்டதில் என்ன தவறு!

"யார் அப்பா உனக்கு உரிமை இல்லை என்று சொன்னது! ஆனால் அவசரக் காரியம் என்றால் கண்பனைக் கூப்பிட்டுப் போக ஒருவனுக்கு உரிமை கிடையாதா!" என்று என்னைத் திருப்பிக் கேட்டான் அவன்.

"உண்டு, உரிமை உண்டு. உனக்கு அப்படி என்ன தலைபோகிற அவசர காரியம் வந்து விட்டது!" என்று அவனைக் கேட்டேன்.

"இப்பொழுதே புறப்பட்டுப் பக்கத்து ஊருக்குப் போய் வரவேண்டும்! அதற்கு நீ என் கூட வரவேண்டும். இன்று உனக்கு விடுமுறைதானே!" என்று கேட்டான்.

ஞாயிற்றுக் கிழமை யென்றால் விடுமுறை இராதா! விடுமுறை உரிமையை விட்டுக் கொடுத்து விட முடியுமா! ஆமாம், எந்த ஊருக்குப் போக வேண்டும்! இன்று இரவுக்குள்ளாக நாம் அங்கிருந்து திரும்பி வந்து விடலாம் அல்லவா!" என்று கேட்டேன்.

"வேலை யொன்றும் இல்லை. பக்கத்தில் உள்ள உரிமையூரைப் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வர வேண்டும். வெகு நாட்களாகப் போட்ட ப்ரோகிராம் நடைபெறாமலே போகிறது. அதற்காகத் தான்......" என்று இழுத்தான்.

"உரிமையூரா! என்ன, அப்பா! புதுப் பெயராக இருக்கிறதே! அது எங்கே இருக்கிறது! இதுவரை நான் கேள்விப்பட்டதில்லையே!"

"கேள்விப்பட்டதில்லையா! நீ சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறதே! இதோ பக்கத்தில் உள்ள ஊரைப்பற்றிக் கேள்விப்படவில்லை என்றால், நீ சரித்திரமும் பூகோளமும் படித்து உருப்பட்டாற் போலத்தான். உரிமையூர் பார்க்க வேண்டிய ஊர்களில் ஒன்று அப்பா!" என்றான்.

நான் உடனே எழுந்து சட்டையை மாட்டிக் கொண்டேன். பிறகு தலையை வாரிக்கொண்டே, "ஏன், அப்பா! பஸ்ஸில்தானே போக வேண்டும்! இங்கிருந்து எத்தனை மைல் இருக்கும்! பஸ் சார்ஜ் என்ன இருக்கும்!" என்று கேட்டேன்.

"அந்த ஊருக்குப் பஸ் போகாது. பரி வண்டியுங்கூடப் போகாது. அப்புறம்......"

'என்ன சொன்னாய்! பரி வண்டியா! அது என்ன வண்டி, அப்பா!" என்று கேட்டேன்.

"இது தெரியாதா! அதுதான் அப்பா, குதிரை வண்டி! அதுகூடப் போகாது. நரி வண்டிதான் போகும்!" என்றான்.

'ஏய்! இன்றைக்கு என்னைக் 'கோட்டா' பண்ணுவதற்கென்றே வந்திருக்கிறாயா, என்ன! என்னவோ பரி வண்டி, கரி வண்டி, நரி வண்டி என்கிறாயே!' என்றேன்.

"உன்னைப் பரிகாசம் செய்வதற்கு எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது! வாசலில் வந்து பார்! வண்டி நமக்காகத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறது!" என்றான்.

இருவரும் வாசலுக்கு வந்தோம். உண்மையிலேயே இரண்டு பேர் உட்காரக் கூடிய ஒரு நரி வண்டி எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. நான் வியப்புடன் கண்களை உருட்டி உருட்டி விழித்தேன்.

"உன் கண்களை அப்புறம் உருட்டி விழிக்கலாம். முதலில் வண்டியில் ஏறு. நாழிகையாகிறது!" என்று துரிதப்படுத்தினான் கண்பன்.

நாங்கள் ஏறி உட்கார்ந்ததுதான் தாமதம்; வண்டி வாயுவேக மனோ வேகமாக உரிமையூர்ச் சாலையை நோக்கி விரைந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் நாங்கள் உரிமையூரின் எல்லையை அடைந்து விட்டோம். கண்பன் படுத்திய அவசரத்தில் நான் சிற்றுண்டி, காப்பி முதலியவை அருந்தாமலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டேன். ஆகவே, எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

"டேய், கண்ணு! வயிற்றைப் பசிக்கிறதடா!" என்றேன் சனஸ்வரத்தில்.


"பசித்தால் என்ன செய்கிறது! வயிறு தன் உரிமையைக் கேட்கிறது. ஆனால் இந்த ஊரில் நான்கு மணிக்கு முன்னால் காப்பிக் கிளப் திறக்க மாட்டார்கள். யாராவது தங்கள் உரிமையை விட்டுக் கொடுப்பார்களா! இப்பொழுது கொஞ்சம் பசியாற அந்த வெற்றிலைப் பாக்குக் கடையில் போய் இரண்டு வாழைப் பழங்களும் ஒரு சோடாவும் சாப்பிட்டு வைப்போம். அப்புறம் ஹோட்டல் திறந்த பிறகு நல்ல டிபனாகச் சாப்பிடுவோம்!" என்றான்.

எனக்கும் அவன் சொல்வது சரியென்றே பட்டது. வண்டியை வெற்றிலைப் பாக்குக் கடை வாசலில் நிறுத்தச் சொன்னோம்.

கடையில் மலையத்தனை பெரிய வாழைப் பழங்கள் சீப்புச் சீப்பாகத் தொங்கிக் கொண்டிருந்தன. இத்தனை பெரிய பழங்கள் எங்கேயாவது இருக்குமா என்று எனக்கு வியப்பாயிருந்தது. "வாழைப் பழம் டஜன் என்ன விலை, அப்பா!" என்று கடைக்காரனைக் கேட்டேன்.

"டஜன் மூன்றணாவுங்க!" என்றான் அவன்.

'மூன்றணாதானா! அப்பப்பா! என்ன கொள்ளை மலிவு! இந்தப் பழம் நம் ஊரில் இருந்தால் பன்னிரண்டணாவும் சொல்லுவான், பதினைந்தணாவும் சொல்லுவானே! வீட்டுக்கும் கொஞ்சம் வாங்கிப் போனால் என்ன!' என்று எண்ணிய நான் இரண்டரை டஜன் பழம் எடுக்குமாறு சொன்னேன்.



கண்பன் இரண்டு சோடாக்கள் எடுக்கச் சொன்னான்.



"சார்! எது வேண்டுமானாலும் காசை முன்னால் எடுத்துக் கொடுத்து விட வேண்டும். இது எங்கள் ஸார்ப் பழக்கம்!" என்றான் கடைக்காரன்.

'காண்டரில் காசு கொடுத்து டோக்கன் வாங்கின பின் தானே டிபன் சாப்பிட முடிகிறது!' என்று எண்ணி நாங்கள் காசைக் கொடுத்துப் பழத்தை எடுத்தோம்.

அட! பார்ப்பதற்குப் பழம் அழகாகவும் பெரியதாகவும் இருந்ததே ஒழிய உரித்தால் ஒரே அழுகலாக இருந்தது. "என்ன, அப்பா! அழுகல் பழத்தைக் கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறாயே!" என்றேன் கடைக்காரனைப் பார்த்து.

அதற்குள்ளாக ஒரு வாய் சோடாவைக் குடித்த என் நண்பன், "இதென்ன சோடாவா! கழுநீரா!" என்று கேட்டான்.

"ஸார், என் கடையில் வாங்கிய சாமான்களைப் பற்றிக் குறை கூற உங்களுக்கு உரிமை கிடையாது, ஸார்!" என்றான் கடைக்காரன் சாந்தமாக.

"என்ன! உரிமை கிடையாதா! ஏமாற்றியதையும் ஏமாற்றி விட்டு உரிமை கிடையாது என்று வேறு பேசுகிறாயா! கீழே வையடா, காசை!" என்று நான் கடிந்தேன்.

"ஸார்! 'டா' போட்டுப் பேசாதீங்க, ஸார்! அது உரிமை பறி போகும் விஷயம்!" என்று வரும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கடைக்காரன் அமைதியாகவேதான் சொன்னான்.

"மோசக்காரப்பயலை 'டா' போட்டுப் பேசாமல், 'ஸார்' போட்டு மரியாதையாகப் பேச வேண்டுமோ! மரியாதையாகக் கீழே வைக்கிறாயா! இல்லை, போலீஸிலே ரிப்போர்ட்டுச் செய்யட்டுமா!" என்றான் நண்பன் ரௌத்திராகாரமாக.

போலீஸில் போய் 'ரிப்போர்ட்' செய்ய உங்களுக்கு ஏது ஸார், உரிமை! போனால் போகிறது என்று பொறுத்துப் பார்த்தேன். மேலே ஏதாவது பேசினால் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன்! நாக்கை அடக்கிப் பேசுங்கள், ஸார்!" என்று ஆரம்பித்து விட்டான் கடைக்காரன்.

எனக்கு 'இதேதடா, வம்பு!' என்று பயமாகப் போய் விட்டது. நண்பனைச் சமாதானப் படுத்தி, "எதற்கு வீண் தகராறு! காசு போனால் போகிறது. வா, அப்பா!" என்றேன்.

நண்பன் என் சொல்லைக் காதில் வாங்கிக்கொண்டால்தானே! "இவனுக்கு இப்படியெல்லாம் பேச ஏதடா உரிமை! யாருக்கு என்ன உரிமை என்று ஒரு கை பார்த்து விடுத்தான் மறு காரியம்!" என்று விருப்புடன் சொன்னான். உரிமையூர்த் தண்ணீரை, இல்லை, இல்லை, கழுநீரை ஒரு வாய் குடித்து விட்டதனால் அவனுக்கும் உரிமை உணர்ச்சி வந்து விட்டது போலும்!

"ஆமாம், ஆமாம்! சட்டத்தை நாட எனக்கும் உரிமை உண்டு!" என்று கத்தினான் கடைக்காரன்.

கடையில் கடைக்காரனுக்கும் நண்பனுக்கு மிடையே வார்த்தை தடித்துக் கைக் கலப்பு ஏற்படும் போலாகி விட்டது.

'ஏதடா இது! விருதுப்பட்டிச் சனியனை விலைக்கு வாங்கிய கதையாக முடிந்து விடும் போலிருக்கிறதே!' என்று உடல் நடுங்க, உள்ளம் நடுங்க நான் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது நல்ல வேளையாக அந்தப் பக்கமாக ஒரு போலீஸ்காரன் வரவே, நான் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, விஷயத்தை விவரமாக அவனிடம் சொன்னேன்.

அவன், "இந்த வழக்கைத் தீர்த்து வைக்க எனக்கு உரிமை கிடையாது. ஆகவே, நடவுங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு!" என்றான்.

எனக்கு 'ஏன் சொன்னோம்!' என்றாகி விட்டது. "நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவில்லை. நாங்களே ஒரு விதமாகத் தீர்த்துக் கொள்கிறோம். நீ போய் வா, அப்பா!" என்றேன் அவனிடம்.

"என்னிடம் நீங்கள் சொன்னது சொன்னது தானே! ஆகவே, உங்களை விட்டுப் போக எனக்கு உரிமை கிடையாது. நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்துதான் ஆக வேண்டும்!" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டான் போலீஸ்காரன்.

'அட கடவுளே! பிள்ளையார் பிடிக்கப் போய் இப்படிக் குரங்காக முடிந்து விட்டதே!' என்று எண்ணிப் போலீஸ்காரனைக் காசைக் கொடுத்துச் சரிக்கட்ட எண்ணினேன். ஆகவே, பர்ஸைத் திறந்து புத்தம் புதிய இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினேன்.


அவன் அதைப் பார்த்ததும் ஒரு தள்ளுத் தள்ளிக் குதித்து, "பணம் கொடுக்க உங்களுக்கு உரிமையில்லை. வாங்கிக் கொள்ள எனக்கு உரிமையில்லை. அது மட்டும் அல்ல; எடுத்த பணத்தைப் பர்ஸில் வைக்கவும் உங்களுக்கு உரிமை கிடையாது. அப்படியே கையில் எடுத்துக் கொண்டபடி நடவுங்கள்!" என்று சொல்லி விட்டான். லஞ்சம் கொடுக்க முயன்றதாக நம்மீது வழக்குத் தொடரப் பட்டால் என்ன செய்வது என்ற பயம் வேறு அப்பொழுது என்னைப் பிடித்துக் கொண்டது.



கடையில் நாங்கள் மூவரும் வேறு வழியின்றி போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடக்கும்படி ஆகிவிட்டது.

ஸ்டேஷனில் இருந்த ஸப் இன்ஸ்பெக்டர், அன்பாக அழைத்து, உரிமை

யுடன் வரவேற்று எங்களுக்கு உட்கார ஆசனமும் கொடுத்தார். அவருடைய அன்பைக் கண்டு நான் உரிமையுடன் அவரிடம் வழக்கை விவரமாக எடுத்து உரைத்தேன்.



"இந்த வழக்கை இப்பொழுதே தீர்த்து முடிவு சொல்ல எனக்கு உரிமையில்லை. நாளைக்குத் தீர அமர ஆலோசித்து முடிவு சொல்லத்தான் எனக்கு உரிமை உண்டு. அதுவரை உங்களைச் சிறையில் அடைத்து வைக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறது. ஆனால் உங்களைப் பார்த்தால் மிகவும் கண்யம் வாய்ந்தவர்களாகத் தோன்றுகிறீர்கள். ஆகவே, இன்று போய் நாளை வாருங்கள்!" என்றார் ராமபிரானை ராவணனுக்கு விடை கொடுத்தனுப்பியது போல.

உரிமையை உபயோகிக்காமல் இந்த மட்டும் நம்மை விட்டாரே! சிறையில் அடைத்துத் தம் உரிமையை நிலை நாட்ட முயற்சித்தாரானால் நம் நிலைமை என்ன ஆகி யிருக்கும் என்று உள்ளூற நான் மகிழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே உரிமைப் பித்துப் பிடித்த என் நண்பன், "உங்கள் தயவு தாட்சண்யம் இங்கு யாருக்கும் தேவையில்லை, ஸார்! உங்கள் உரிமையை நிறைவேற்றுங்கள். இந்த வழக்குக்குச் சிறையில் போடுவதாயிருந்தால் ஒரு நாள்தானே போட முடியும்! அதைக் காட்டிலும் உங்களுக்கு உரிமை கிடையாதே!" என்று கேட்டு விட்டான்.

அதைக் கேட்டதும் எனக்குப் பகீர் என்றது. அதற்கேற்றாற் போல் இன்ஸ்பெக்டரின் முகத்து மீசைகள் வேறு துடித்தன.

"என்ன சொன்னீர்கள்! உங்களைச் சிறையில் அடைக்க எனக்கு ஒரு நாள்தான் உரிமை உண்டா! என் உரிமையைப் பற்றிப் பேச நீங்கள் யார், ஐயா!" என்று மொல்லு மொல்லென்று சண்டைக்கு வந்து விட்டார் இன்ஸ்பெக்டர்.

"எங்களுக்குச் சட்டம் தெரியாது என்று நினைக்காதீர்கள், ஸார்!" என்று ஆரம்பித்து விட்டான் என் நண்பன். அதன் பலன் என்னவென்று சொல்ல வேண்டுமோ! நாங்கள் சிறைச்சாலைக்குள்ளே பிடித்துத் தள்ளப் பட்டோம்.

'இப்படிச் சிறையில் அடைக்கப்பட்டு விட்டோமே, நாளைக்கு ஆபீஸுக்குப் போய் ஆக வேண்டுமே!" என்பதை எண்ணியதும் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "ஏய், உன் அசட்டுத் தனத்தினால் அல்லவா இந்தச் சங்கடம்! கொஞ்சம் நாம் தணிந்து போயிருந்தால் இந்தத் தொந்தர வெல்லாம் ஏற்பட்டிரா தல்லவா!"

'ஏ



என்று நண்பன் என்ற உரிமையில் அவனைக் கடிந்து கொண்டேன்.

"அதற்காக உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறாயா! உயிர் போவதாயிருந்தாலும் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டேன். உனக்குக் கஷ்டமாயிருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ஒழிந்து போ!" என்றான் அவன்.

'நண்பனைச் சங்கடத்தில் ஆழ்த்தும் நண்பன் என்ன நண்பன்! அவன் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். நாம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு கம்பி நீட்டுவோம்' என்று தீர்மானித்து இன்ஸ்பெக்டரிடம் சென்று மன்னித்து விடுதலை செய்யுமாறு வேண்டிப் பல்லை இளித்தேன்.

அவரும் பரிதாபப்பட்டு, "ஆனால் எனக்கு மன்னிக்க உரிமை இல்லையே, ஸார்!" என்றார்.

அப்புறம் சிறையில் 'சிவ, சிவா' என்று உட்கார்ந்திருப்பதைத் தவிர வேறு வழி!

நாங்கள் சிறை வைக்கப் பட்டிருந்த இடத்துக்கு நேர் எதிரே ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் நடப்பதெல்லாம் அங்கிருந்தபடியே கண்ணுக்குத் தெரியும்; பேசும் பேச்செல்லாம் காதுகளுக்குக் கேட்கும். நான் எதிரே பார்த்த பொழுது அந்த வீட்டுத் தம்பதிகளுள் தாம்பத்ய பிணக்கு நடந்து கொண்டிருந்தது. காதையும் கண்ணையும் படைத்தவர்களுக்குக் கேட்கவும் காணவும் உரிமை உண்டல்லவா!

"அடியே! தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாயேன்!" என்றான் கணவன். அவன் குரலில் அதிகாரம் தொனித்தது.

"அடியே, நுனியே' என்ன வேண்டிக்கிடக்கிறது! உங்கள் அதிகாரம் ஒன்றும் இங்கே செல்லாது. மனைவி சொல்லைக் கேட்காதவர் சொல்லை நான் எதற்குக் கேட்க வேண்டும்! நான் ஒன்றும் உங்களுக்கு அடிமை இல்லை! வேண்டுமானால் நீங்களே போய் எடுத்துக் குடியுங்கள். என்னைச் சொல்ல ஏது உரிமை!" என்றாள் மனைவி.

"ஹஹூம். வர வர வாய் துளிர்த்து விட்டாற் போலிருக்கிறதே! ஆணுக்குப் பெண் அடிமை தான். ஆணின் உரிமையைப் பறிக்க உன் பாட்டி வந்தாலும் முடியாது. நினைவு வைத்துக் கொள்."

"அந்தக்காலம் மலையேறி எத்தனையோ காலம் ஆகி விட்டது. நானும் ஒரு மனுஷி. எனக்கும் உரிமை இருக்கிறது. என்னுடன் சம உரிமை கொண்டு வாழ இஷ்டமிருந்தால் இந்த வீட்டில் என்னுடன் வாழ உங்களுக்கு உரிமை உண்டு. இல்லாவிட்டால் கட்ட வேண்டியதுதான் நடையை!" என்றாள் பெண்.

"சம்பாதித்துப் போடுபவன் நான். உட்கார்ந்து சாப்பிட உனக்கு உரிமையிருக்கிறது என்று எண்ணினாயோ! என் வீட்டை விட்டு நீதான் வெளியேற வேண்டும்!" என்றான் கணவன்.

இப்படியாகத் தடித்த உரிமைப் பேச்சுக் கடைசியில் அடி தடி வரைக்கும் உரிமைப் போராக விசுவரூபம் எடுத்து விட்டது.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர் பரிதாபப் பட்டு அந்தப் பூசலைத் தீர்த்து வைக்கலாமே என்று எண்ணி அவர்களுடைய வீட்டுக்குள் நுழைந்தார்.

நுழைந்தவர் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. உரிமைப் போரில் ஈடுபட்டிருந்த தம்பதிகள் தங்கள் சண்டையை மறந்து அடுத்த வீட்டுக்காரரிடம் சண்டைக்கு வந்து விட்டனர்.

"எங்கள் கணவன் மனைவிக்குள் ஆயிரம் இருக்கும். எங்கள் சண்டையைத் தீர்த்து வைக்க உங்களுக்கு என்ன ஐயா உரிமை!" என்று அடுத்த வீட்டுக்காரரைக் கேட்டான் புருஷன்.

"என் கணவன் என்னை அடிக்கலாம், உதைக்கலாம்; கொல்லலாம் அதற்காக அடுத்த வீட்டுக்காரர் உள்ளே நுழைய உரிமை என்னவென்று கேட்கிறேன்!" என்று மனைவியும் கணவனுடன் சேர்ந்து ஒத்துப் பாடினாள்.

"நன்றாயிருக்கிறதே, நீங்கள் சொல்வது! பக்கத்து வீட்டில் கொலை நடந்தால் பார்த்துக்கொண்டிருப்பதுதான் அயல் வீட்டுக்காரனின் காரியமோ! சண்டையைச் சமாதானப்படுத்தித் தீர்த்து வைப்பதற்கு அவனுக்கு உரிமை உண்டு, ஐயா!" என்றார் அடுத்த வீட்டுக்காரர்.

"உமக்கு உரிமை இருக்கிறதா! எந்தச் சட்டத்தில் ஐயா எழுதியிருக்கிறது!" வாரும் ஐயா, போலீஸுக்கு!" என்று கையைப் பிடித்து இழுத்தான் புருஷன்.

"வாருங்கள், நானும் வருகிறேன், இது நல்லதுக்குக் காலமில்லை. அடுத்த வீட்டுக்காரர்கள் எப்படிப் போனால் இவர்களுக்கு என்னவாம்!" என்று கூறி மனைவியும் அவர்களுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தாள்.

வழக்கைப் பதிவு செய்து கொண்ட ஸப் இன்ஸ்பெக்டர் 'விசாரணை நாளைக்கு!" என்று சொல்லித் தம் உரிமையைப் பிரயோகித்து அவர்களைச் சிறைக்கு அனுப்பி வைத்தார். எங்களைப் போலவே உரிமைப் போருக்குப் பலியான அந்த நபர்களுக்கு நாங்களும் உரிமையோடு இடம் அளித்தோம்.

அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு குடியானவன் கண்ணைப் பிசைந்து கொண்டே வந்த தன் பிள்ளையைக் 'கர கர' வென்று பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு பள்ளி உபாத்தியாயருடன் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்.

பையன் மூக்கைச் சிணுங்கியவாறு, "போலீஸ் ஐயா! இந்த வாத்தியார் சுளீர் சுளீர் என்று என்னை அடித்து விட்டார். என்னை அடிக்க உங்களுக்கு உரிமை கிடையாது என்றேன். அதன் மேல் 'பளார், பளார்' என்று முதுகில் வேறு அறைந்து விட்டார். இவருக்கு என்னை அடிக்க உரிமை உண்டுங்களா!" என்று விசித்துக் கொண்டே கேட்டான்.

"எனக்குப் பள்ளிக் பையன்களை அடிக்க உரிமை இல்லையா! யார் சொன்னது! தோலை வைத்து முதுகை உரிக்க எனக்குப் பூரண உரிமை இருக்கிறது. வாண்டுப் பயலே! என் உரிமையைப் பற்றிப் பேச நீ யாரடா!" என்றார் உபாத்தியாயர்.

"எப்படி உரிமை உண்டுங்க, நீங்களே சொல்லுங்கள், போலீஸ் ஐயா!" என்றான் பையன்.

"இன்ஸ்பெக்டர் ஸார்! நான் இந்தப் பையனின் நலனை உத்தேசித்து இவனை அடித்தேனே யொழிய இவனுக்குக் கெடுதல் செய்யும் நோக்கத்துடன் அடிக்கவில்லை. இப்படியிருக்கும் பொழுது இவனோ, இவன் தகப்பனோ என் ஜீவாதார உரிமையைப் பறிக்க முயல்வது தவறு அல்லவா!" என்று கேட்டார் உபாத்தியாயர்.

அதைக் கேட்டதும் பையன், "என் நலனுக்காக அடித்தீர்களா, வாத்தியார் ஐயா! அப்படியானால் இன்னும் இரண்டு அடிவேண்டுமானாலும் கொடுங்கள். உங்களுக்கு உரிமை உண்டு. என் தெரியாத்தனத்தை மன்னிச்சிடுங்க. உங்கள் உரிமையை நான் பறிக்க வரவில்லைங்க!" என்றான்.

அதைக் கேட்ட தகப்பனுக்குக் கோபம் வந்து விட்டது. 'முட்டாள் பயல்! நிமிஷத்துக்கு நிமிஷம் மூளை மாறும் இந்தப் பயல் பேச்சைக் கேட்டுக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தேனே, என் மூளையைச் செருப்பால் அடிக்கணும்..." என்றான்.

"மிஸ்டர்! உங்கள் மூளையைக் குறைகூற உங்களுக்கு உரிமை கிடையாது. தெரிந்ததா!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"போலீஸ் ஐயா! நீங்களே சொல்லுங்கள், நியாயத்தை! என்னதான் பெற்ற தகப்பனாயிருந்தாலும் என்னை முட்டாள் என்று சொல்ல இவருக்கு உரிமை ஏது!" என்று கேட்டான் பையன்.

"உண்டு, உண்டு; உரிமை உண்டு. நூறு தரம் வேண்டுமானாலும் முட்டாள் என்று சொல்லுவேன்!" என்றான் தகப்பன்.

"அப்பா! அப்புறம் எனக்குப் படுகோபம் வந்து விடும். உங்களுக்கு என்னை முட்டாள் என்று சொல்ல உரிமை கிடையாது. அப்படிச் சொன்னீர்களானால் என் உரிமைக்காகப் போராடி உங்களை என் கார்டியன் பதவியிலிருந்து நீக்கி



வேறு கார்டியன் நியமிக்க ஏற்பாடு செய்வேன்!" என்று பையன் உரிமை பேசினான்.

'அப்பப்பா! உரிமையூரில் உள்ள சின்னச் சின்ன வாண்டுகளுக்குக் கூட அல்லவா உரிமையைப் பற்றிய சட்ட திட்டங்கள் தெரிந்திருக்கின்றன!' என்று எண்ணி வியந்தேன்.

இதற்குள்ளாகக் குடியானவன், "ஏன் ஐயா! இவனுக்கு இப்படியெல்லாம் பேச உரிமை உண்டுங்களா!" என்று கேட்டான்.

"உரிமையைப் பற்றித் தெரியாத நீ உரிமை வழக்குத் தொடுக்க உரிமையில்லாதவன். உரிமை புணராத உங்கள் எல்லோரையும் சிறையில் அடைக்க எனக்கு விசேஷ உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே......" என்றார் இன்ஸ்பெக்டர்.

"என்ன ஐயா, இது அநியாயம்! குறைகூறக் கூடவா எங்களுக்கு உரிமை கிடையாது!" என்று தொண்டை கிழியக் கத்தினான் குடியானவன்.

அப்பொழுதுதான் எனக்கு ஞானோதயம் பிறந்தது. "பேஷ்! சரியாகச் சொன்னாய், அப்பா!" என்று குடியானவனுக்கு ஒரு புகழ்மாலை சூட்டி விட்டு, "இன்ஸ்பெக்டர்! நீங்கள் செய்வது அநியாயம். குறை கூறுவதற்கான எங்கள் ஜீவாதார உரிமையைப் பறிப்பது அநியாயத்திலும் அநியாயம்!" என்று உரக்கக் கத்தினேன்.

"ஏன்னா! என்னவோ! 'அநியாயம், அநியாயம்' என்று கூக்குரலிடுகிறீர்களே! என்ன விசேஷம்! இந்த லீவு நாட்கள் வந்து விட்டாலே

உங்களுக்கு உங்கள் நண்பரோடு உறவாடத்தான் பொழுது சரியாயிருக்கிறது! காப்பி போட்டு எத்தனை நாழிகை யாகிறது! எழுந்திருங்கோன்னு!" என்று உரிமையோடு தட்டி எழுப்பினாள் என் மனைவி.

உரிமையோடு தட்டி எழுப்பிய மனைவியிடம், "என்னைத் தட்டி எழுப்ப உனக்கு ஏது உரிமை!" என்று சீறி விழுந்தேன்.

"எனக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு வந்து விட்டது! நன்றாயிருக்கிறது! உங்களுக்கு என்ன இப்படி மூளை போய் விட்டது!" என்று கடித்து கொண்டாள் என் சகதர்மிணி.

அதைக் கேட்டதும் என்னுடன் அவ்வளவு நாழிகையாக அளவளாவிக் கொண்டிருந்த என் நண்பன் சொல்லிக் கொள்ளாமல் ஒரு வாய் காப்பி கூடச் சாப்பிடாமல் ஓடிவிட்டான்.

என் மார்பில் கிடந்த பத்திரிகையைத் தூக்கி விட்டெறிந்துவிட்டு மனைவி உரிமையோடும் அன்போடும் கொடுத்த காப்பியை வாங்கி மடமட வென்று விட்டுக் கட்டினேன்.

"ஏன்னு! இன்றைக்கே போய் தீபாவளி துணி எடுத்து வந்து விட்டால் என்ன! நாள் நெருங்க நெருங்கக் கடையில் கூட்டம் அதிகமாகி விடுமே!" என்று கண்கள் பளிச்சிடக் கேட்டாள் மனைவி.

அதற்குள் என் சின்னப் பெண் லக்ஷ்மி ஓடி வந்து, "அப்பா! எனக்குக் காதுக்கு ஒரு லோலக்கும், ஸ்டாரும் வாங்கித் தருகிறாயா!" என்றாள் என் பெரிய பெண் கதவு ஓரத்தில் நின்று கொண்டு எட்டிப் பார்த்தாள். "அவளுக்கு என்ன வேண்டுமாம்!" என்று கேட்டேன்.

"வைரத்தோடு...!" என்ற சொல் எங்கிருந்து வந்ததோ, தெரியவில்லை! ஏனெனில் அந்தப் பெயரைக் கேட்டதும்தான் என் தலை மூன்று லோகத்துக்கும் சுற்றி விட்டதே!

'ஆ!' என்று வாயைப் பிளந்தேன்.

"ஏன்னு! உங்களுக்கு வாழ்க்கைப்பட்ட எனக்கு ஒரு புடவை கேட்டு வாங்கிக் கொள்ள உரிமை கிடையாதா!" என்றாள் என் மனைவி.

"ஏன், அப்பா! உங்களுக்குப் பெண்ணாய்ப் பிறந்த எங்களுக்கு......" என்று இழுத்தாள் என் சின்னப் பெண் லக்ஷ்மி.

"எல்லாருக்கும் எல்லாம் கேட்க உரிமை உண்டு. யார் இல்லை என்று சொன்னார்கள்! எல்லாரும் டிரஸ் செய்து கொண்டு தயாராயிருங்கள். இதோ வந்து விட்டேன்!" என்று உரிமையோடு சொல்லிவிட்டு எழுந்தேன்.

அப்பொழுது வந்தவன் இன்னும் வீட்டுக்குப் போகவில்லை. இதோ 'பனகல் பார்க்' சிமிட்டிப் பெஞ்சியில் உட்கார்ந்து இந்த உரிமைக் கதையை எழுதிக் கொண்டிருக்கிறேன். இங்கே உட்கார்ந்து இந்தக் கதை எழுத உனக்கு உரிமை கிடையாது என்று யார் சொல்ல முடியும்! என் உரிமையை நிலைநாட்டுவதற்காக எழுதத்தான் எழுதுவேன். என்னை யாராலும் தடுக்க முடியாது.



ஆனால் ஆசிரியர் கையில் அல்லவா இடைப்பிரகரிப்பதா வேண்டாமா என்று முடிவு செய்யும் உரிமை இருக்கிறது. அதை நினைத்தால்தான் சற்று யோசனையாயிருக்கிறது. ஆனால் பேனாப் பிடித்து எழுதுவது என் ஜீவாதார உரிமையாயிற்றே! அந்த உரிமையைப் பறி கொடுக்கவா! முடியாது. எனக்கு ஆத்ம திருப்தி அளிக்கும் அந்த உரிமையை யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியவே முடியாது. ஆமாம், சொல்லி விட்டேன்.

உரிமைவாழி! உலகம் வாழி!

உரிமை யூர் இருக்கும் உலகம் வாழி!

ஒருவர் (போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரிடம்):—ஸார், என் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று தெருவில் கெட்டுப் போய்விட்டது. அதை ஒரு வேளை யாராவது கண்டெடுத்து இங்கே கொடுத்தார்களோ?

இன்ஸ்பெக்டர்:—இல்லையே, யாரோ ஒருவன் ஒரு பத்து ரூபாய் நோட்டைத்தான் கொண்டு வந்து கொடுத்தான்!

அவர்:—அப்படியானால் அந்தப் பத்து ரூபாய் நோட்டை என்னிடம் கொடுங்கள். இந்தாருங்கள், பாக்கி ஐந்து ரூபாய்!



10. எதிர்பாராத சந்திப்பு

வள்ளி மட்டும் நினைத்தால் மாதவியின் மனம் மாறி விடுமா, என்ன! மாதவியின் மனமும் அல்லவா அதற்கு அனுசரணையாக இருக்கவேண்டும்! ஆனால் மாதவியின் பபாக்கைப் பார்த்தால் அவள் இலேசில் அதை மறக்கமாட்டாள் போலிருந்தது. அவள் பேசிய தோரணை அப்படியிருந்தது. "வள்ளி, நீ ஏன் இந்த ஜனங்களை யெல்லாம் விட்டுப் பிரிந்து வந்தாய்! அவர்களோடு இருந்திருந்தால் நீ எவ்வளவு சுகமாக இருந்திருக்கலாம், தெரியுமா!'' என்றாள்.

"ஆமாம்! அவர்களோடு இருந்திருந்தால் குட்டிச் சுவராய்த்தான் போயிருக்கலாம். அவர்களோடு நான் இருந்து கண்ட சுகம் போதும். அதுவும் ஒரு வாழ்வா! தரித்திரம் பிடித்த வாழ்வு! எனக்குத் தெரியும். அவர்கள் பிழைப்பு! அவர்களோடு நான் இருந்தபோதெல்லாம் சரியான மனுஷியாய் இல்லை. மிருகம் போலத்தான் இருந்தேன். இதோ பார், மாதவி! இனிமேல் அவர்களைப் பற்றியே பேசக்கூடாது. உன்னைப்போலிருக்கிற ஒரு பெரிய குடும்பத்துப் பெண் அவர்களை எல்லாம் கண்ணாலே பார்ப்பது கூடக் கெடுதல். தெரியுமா!'' என்றாள் வள்ளி மிகவும் கண்டிப்பான குரலில்,

மாதவி வள்ளியின் முகத்தைப் பார்த்தபோது அவள் முகத்தில் என்றும் இல்லாத ஒரு வேதனைக் குறி குடிகொண்டிருப்பதைக் கண்டாள். அவள் வள்ளியை அவ்வளவு கண்டிப்பும் கோபமும் கொண்ட நிலையில் பார்த்ததே இல்லை. மாதவி எப்பொழுதும் வள்ளியின் சுபாவத்திற்கு இணங்கியே நடந்து வந்திருக்கிறாள். "வள்ளி, நீ உன் சொந்த மனிதர்களை இப்படிக் கேவலமாகப் பேசிக் கேட்டதே யில்லையே! இப்போது நீ இவ்வளவு கேவலமாகப் பேசுவது ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது! அவர்கள் அவ்வளவு கெட்டவர்களாக எனக்குத் தோன்ற வில்லை. அவர்கள் கூட்டத்தில் ஒரு ராணி கூட இருக்கிறாள், வள்ளி! அவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள், தெரியுமா! அவளை எல்லோரும் எவ்வளவு கொண்டாடுகிறார்கள். தெரியுமா! எனக்குக்கூட நான் அந்தக் கூட்டத்தில் ஏன் ஒரு ராணியாகப் பிறந்திருக்கக் கூடாது என்று தான் தோன்றுகிறது!'' என்றாள் மாதவி வள்ளியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

வள்ளி இதைக் கேட்டதும் அப்படியே கற்சிலைபோல் நின்று விட்டாள். எத்தகைய விபரீதமான எண்ணம் மாதவியின் மனத்தில் ஏற்பட்டு விட்டது! உண்மையாகவே தெய்வம் அவள் பிறவியை நினைந்து அவள் மனத்தில் அத்தகைய எண்ணம் உதயமாகும்படி செய்ததா! அப்படியிருந்தால்...! அதை வள்ளியால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அந்த வார்த்தை அவள் இருதயத்தையே உலுக்கியது. அதை நினைக்கவே அவளுக்கு நடுக்கமாய் இருந்தது. "அந்தமாதிரியான வார்த்தையை மறுபடியும் சொல்லாதே, மாதவி! அந்த நாடோடிப் பட்டாளம் இந்த ஊரைவிட்டு ஒழிகிறவரை அவர்கள் நிழலைக்கூட நீ பார்க்கக் கூடாது. நீ மறுபடியும் அவர்கள் இருக்கிற இடத்திற்குப் போனால் நான் கட்டாயம் உன் தாத்தாவிடம் சொல்லி உன்னை வீட்டோடு பூட்டிவைக்கச் சொல்லுவேன்'' என்று கண்கள் உதிரம்போல் சிவக்கக் கோபத்துடன் எச்சரிக்கை செய்தாள் வள்ளி.

வள்ளிக்கு ஏற்பட்ட கோபத்தைப் பார்த்து மாதவி பிரமிப்படைந்து மௌனமாக நின்றாள். வள்ளியிடம் இன்னும் ஏதாவது பேசினால் அவள் நிச்சயம் தாத்தாவிடம் போய்ச் சொல்லி விடுவாள் என்று மாதவி பயந்தாள். மாதவிக்கு எப்பொழுதுமே தன் தாத்தா பட்டக்காரரிடம் சிறிது பயம் உண்டு. அவர் இவ்வளவு நாளும் மாதவியை அவளுடைய இஷ்டத்திற்குச் சுதந்திரமாக விட்டு வைத்திருந்ததற்குக் காரணம் அவள் வள்ளியின் பாதுகாப்பில் வளருகிறாள் என்பதுதான். இப்பொழுது வள்ளியே அவரிடம் போய் அவள் மீது உள்ள குற்றத்தைச் சொன்னால் அது எவ்வளவு விபரீதமாக முடியும்!

வள்ளி இவ்வளவு கடுமையாகவும் கோபமாகவும் இருந்து அவள் அதுவரை பார்த்ததில்லை. ஆகவே அவள் அப்படி நடந்து கொள்வதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று மாதவிக்குத் தோன்றியது. இனிமேல் ரொம்ப ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஏதாவது விபரீதமாக முடியும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அன்று இரவு ஏரிக்கரையிலுள்ள ஆலமரத்தடியில் கோவிந்தனைச் சந்திப்பதாக வாக்களித்தது மாதவியின் ஞாபகத்திற்கு வந்தது. தனக்காகக் கோவிந்தன் நிச்சயம் அங்கே வந்து காத்துக் கொண்டிருப்பான் என்று அவளுக்குத் தெரியும். அவள் அவனுக்கு அளித்த வாக்குறுதியை நிறை

வேற்ற வேண்டுமென்று விரும்பினாள். அந்த இரவில் கோவிந்தனைச் சந்திக்க வேண்டுமென்று அவள் தீர்மானித்ததற்கு அவள் மனத்தில் எவ்வித மான காதல் உணர்ச்சியோ அடக்க முடியாத ஆர்வமோ எழுந்து வாட்டியதாக நினைக்க முடியாது. கோவிந்தனின் மனத்தில் அத்தகைய உணர்ச்சி இருந்தாலும் மாதவி அவனிடம் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து அவனைச் சோதிக்க நினைத்தாள். அவள் அன்று இரவு எப்படியாவது அவன் குறிப்பிட்ட இடத்தில் அவனைச் சந்திக்க வேண்டுமென்று நினைத்ததற்குக் காரணம் அவ னுடைய மனப்போக்கைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டு மென்பதுதான்.

அந்தக் கட்டிடத்திலுள்ள எல்லோரும் இரவு வேளையில் வெகு சீக்கிரமாகவே தூங்கி விடுவது வழக்கம். மணி ஒன்பது இருக்கும். அப்பொழுது எங்கும் ஒரே நிசப்தமாக இருந்தது. மாதவி மாத்திரம் தூங்கவேயில்லை. அவள் அந்த நிசி வேளையில் வெளியே செல்வதை வள்ளி பார்த் தால் கட்டாயம் அவளைத் தடுத்து நிறுத்திவிடு வாள். மாதவி மெதுவாக வள்ளி படுத்திருந்த இடத்திற்குப் போய் அவள் தூங்கி விட்டாளா என்பதைப் பார்த்தாள். வள்ளி ஆழ்ந்த நித்தி ரையி லிருப்பதாக அவளுக்குத் தெரிந்தது. அந்த வீட்டில் எல்லாக் கதவுகளும் சாதாரணமாகத் திறந்திருப்பதுதான் வழக்கம். அதனால் அந்த வீட்டை விட்டு வெளியே செல்வது அவளுக்கு அவ்வளவு கடினமாகப் படவில்லை. ஒரு சில வினாடிகளில் அமைதியிலாழ்ந்திருக்கும் அந்த வீட்டை விட்டுத் தோட்டத்திற்கு வந்து அடர்ந்த மரங் களின் நிழலில் பதுங்கி நடந்து ரஸ்தாவை அடைந்தாள்.

அவள் மிக முதிர்ந்த அந்த ஆலமரத்தடிக்கு வந்தபொழுது அவளை யறியாமலேயே அவள் நெஞ்சில் ஒரு பயம் எழுந்தது. பல வருடங்களுக்கு முன்னால் நடந்த ஒரு கோரமான கார் விபத்தை இன்னும் ஞாபகப் படுத்துவதுபோல் அந்த ஆல மரத்தின் கிளையொன்று ரஸ்தாவின் ஓரமாகக் கிடந்தது. பெரிய மண்டபத்தைத் தாங்கும் தூண்கள்போல் அந்த ஆலமரத்தின் தடித்த விழுதுகள் தொங்கிப் பூமியோடு பதிந்திருந்தன. மாதவி தயங்கியபடியே நான்கு புறமும் தன் பார்வையைச் செலுத்தினாள். மரங்களின் இடை வழியே விழுந்த நிலவொளி ரஸ்தாவில் அங்கு மிங்குமாகத் திட்டுத் திட்டாகத் தெரிந்தது.

கோவிந்தன் இன்னும் வரவில்லை. அவளுக்கு முன்னால் அவன் வந்து விட்டான்... அவன் வராமல் இருக்க மாட்டான். கட்டாயம் வந்து விடுவான்.

அந்த மரத்தடியில்தான் அவளுடைய தாயும் தகப்பனும் விபத்திற்குள்ளாகிக் கொலையுண் டனர். இதை நினைக்கும்போது அவள் மனத்தில் ஒரு பயம் எழுந்து அவளை நடு நடுங்க வைத்தது. ஆனால் கண நேரத்தில் அவளிடம் இயற்கையாக அமைந்துள்ள துணிவு அவள் அச்சத்தைத் தவிர்த்தது.

நெஞ்சில் திடத்தையும் தைரியத்தையும் ஏற் படுத்திக் கொண்டு கோவிந்தனின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருக்கத் தீர்மானித்தாள். பாதை ஓரமாக விழுந்து கிடந்த மரக்கிளை அவள் உட்காருவதற்குச் சௌகரியமானதாக இருந்தது. அவள் அந்தக் கிளையில் உட்கார்ந்து ஒரு பெரு மூச்சு விட்டாள். இரவின் மௌனம் அவள் மனத் தைக் குறுகுறுக்கச் செய்தது. அந்தத் தனிமை அவளுடைய ரத்த ஓட்டத்திலேயே ஒரு மாறு தலைச் செய்து விட்டது போலிருந்தது. அவள் எதைக் கண்டும் அஞ்சவில்லை. சமீபத்தில் ஏரிக்



கரையிலிருந்து நாடோடிக் கூட்டத்தினர் பாடும் பாட்டு, காற்று வாக்கில் மிதந்து வந்து அவளது காதுகளில் மோதியது.

திடீரென்று அந்த ரஸ்தா வழியே யாரோ நடந்து வருவது போன்ற ஓசை கேட்டது. வரு வது கோவிந்தனாகத்தானிருக்க வேண்டுமென்று அவள் நினைத்தாள். கோவிந்தனாக இல்லாமல் வேறு யாராகவாவது இருந்தால்...! அவளை இந் தச் சமயத்தில் அந்த இடத்தில் யாரேனும் பார்த் தால் என்ன நினைத்துக் கொள்வார்கள்! நில வொளியில் உட்கார்ந்திருந்தவள் சட்டென்று இரு ளில் மறைந்து நின்று, வருவது யாரென்று கவனித்தாள். அப்பொழுது அவளுக்கு ஏற்பட்ட படபடப்பில் அவளுடைய இருதயத் துடிப்பே நின்று விடும்போலிருந்தது.

சில விநாடிகளுக்கு முன் யாரோ வருவது போன்று கேட்ட சலசலப்புச் சப்தம் இப்பொழுது

இல்லை. அவளுக்கு அது வியப்பாகவே இருந்தது. அவள் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக ஏதேனும் அதிசயம் அங்கு நடந்து விடுமோ என்று அவளுக்குத் தோன்றியது. அவள் மறுபடியும் முன்பு உட்கார்ந்திருந்த இடத்திலேயே வந்து அமர்ந்தாள். திடீரென்று அவள் கண் எதிரில் ஒரு உருவம் தோன்றியது. அவள் மறுபடியும் இருளில் சென்று மறைந்து நிற்பதற்குள் ரஸ்தாவில் நடந்து வந்து கொண்டிருந்த அந்த உருவம் அவளை நெருங்கி வந்து விட்டது.

அது கோவிந்த னல்ல. ஆனால் அந்த உருவத்தைக் கண்டதும் அவள் திகைப் படைந்து நின்றுவிட்டாள். என்ன ஆச்சரியம்! அது சிங்காரம். பொத்தான் போடப் படாமல் இருக்கும் கோடிட்டசட்டை, அகன்ற மார்பு, நீண்ட கரங்கள். ஆண்மையும் அலட்சியமும் நிறைந்த அதே கண்பார்வை. அவனைக் கண்டதும் அவள் பயந்து அலறி விடவில்லை. ரஸ்தாவில் நடந்து வந்து கொண்டிருக்கும் அவன் எதிரில் போய் நின்றாள்.

இரவின் அமைதியைக் கிழிப்பதுபோல் அவன் கலகல வென்று சிரித்தான். அவன் சிரிப்புக்கு எதிரொலி செய்வது போல் அவளும் சிரித்தாள்.

"ஓ நீயா...!" என்றான் சிங்காரம். அவளும் பதிலுக்கு "ஓ, நீயா!" என்றாள்.

மறுபடியும் ஒரு சிரிப்பு.

"உன் பெயர் சிங்காரம் அல்லவா! அந்த நாடோடிக் கூட்டத்திலே...!" என்றாள் மாதவி.

"உன் பேரு மாதவி யில்லே! இந்த ஊரு பட்டக்காரர் பேத்தி..." என்றான் அவன்.

"இந்த வேளையில் நீ இங்கே எதற்கு வந்தாய்!" என்று கேட்டான் அவன்.

"நீ எதற்காக வந்தே...!" என்றாள் அவள்.

"நானு! யாரையோ எதிர்பார்த்து வந்தேன்! நீ...!" என்றான் அவன்.

"நானும் யாரையோ எதிர்பார்த்துத் தான் வந்தேன்..." என்றாள் அவள்.

"நீ யாரை எதிர்பார்த்து வந்தாய்!"

"நீ...!" என்று கேள்வியை ஆரம்பித்த சிங்காரம், "உன்னைத்தான் எதிர்பார்த்து வந்தேன் என்று வைத்துக் கொள்ளேன்!" என்றான்.

"நானும் உன்னைத்தான் எதிர் பார்த்து வந்தேன் என்று வைத்துக் கொள்......" என்றாள் மாதவி சிரித்துக் கொண்டே.

"என்னை எதற்காக நீ எதிர் பார்க்கணும்!"

இதற்கு மேல் பேசுவதற்கே இடமில்லை. இந்தச் சம்பாஷணை இப்படியே வளர்ந்து கொண்டு



போனால் இதற்கு ஒரு முடிவு வேண்டாமா! சிறிது நேரம் அங்கு மௌனம் சூழ்ந்திருந்தது. சிங்காரம் மாதவியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றான். மாதவியும் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு சிங்காரம், ''நீ இதைப் பைத்தியக்காரத்தனமாக நினைப்பே. நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் எங்களை இந்த ஊரைவிட்டுத் துரத்தினாலும் துரத்தி விடுவீங்க. எங்களுக்கும் இந்த ஊரை விட்டுப் போனால் எத்தனையோ ஊர் இருக்கிறது. ஆனால் எங்கே போனாலும் நான் உன்னை மறக்க முடியாது. இந்த நேரத்தில் அழகான பட்டு மெத்தையில் படுத்து நீ உறங்கிக் கொண்டிருப்பாய் என்று தான் நான் நினைச்சேன். ஆனால் நீ இந்த இடத்தில் தனியாக வந்து நிற்பது எதற்காக வென்று எனக்குப் புரியவில்லை. இதுவும் என் அதிர்ஷ்டம்தான்'' என்றான். அவன் திடம் நிறைந்த வாலிபனாகக் காணப்பட்டாலும் அப்பொழுது அவன் வார்த்தைகளில் சிறிது தழுதழுப்பும் தடுமாற்றமும் ஏற்பட்டன.

அவள் அவன்மீது இருந்த பார்வையைத் திருப்பி வேறு எங்கோ தன் பார்வையைச் செலுத்தினாள்.

''நீ இந்த வேளையில் 'எதற்காக இங்கே வந்தாய்......!'' என்று கேட்டான் சிங்காரம்.

''நான்தான் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னேனே!'' என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டே மாதவி.

''யாரை எதிர் பார்க்கிறாய்! இன்று சாயந்திரம் என்னிடம் அடி வாங்கினாரே, அந்தத் துரையையா......!'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் சிங்காரம்.

மாதவி தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவளுடைய சிரிப்பில் எத்தனையோ அர்த்தங்கள் தொனித்தன. அந்த நேரத்தில் அவள் தன்னுடைய வீட்டைத் தாண்டி வந்து இப்படி ஒரு நாடோடி வாலிபனோடு பேசிக் கொண்டிருப்பது எவ்வளவு தகாத காரியம் என்பது அவள் சிந்தனை செய்து பார்ப்பதற்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. இந்தச் சமயத்தில் கோவிந்தன் வந்து இதைப் பார்த்தால் அவன் மனத்தில் பல உணர்ச்சியும் பொறுமையும் கட்டுக் கடங்காம லல்லவா போய்விடும்! இது அவளுக்கு நெருப்போடு துணிந்து விளையாடுவது போல் இருந்தது. "ஆமாம்! அவரை எதிர் பார்த்துத்தான் நிற்கிறேன். அவர் யார், தெரியுமா! என்னுடைய அத்தான். அவர் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேணும் என்று ஆசைப் படுகிறார். என்னிடம் ஏதோ தனியாகப் பேச வேணும் என்று இங்கே வரச் சொன்னார். நான் இங்கே வந்து விட்டேன். ஆனால் அவரைக் காணோம்!'' என்றாள்.

சிங்காரம் சிரித்தான். அவனுடைய சிரிப்பில் ஒரு ஏளனம் கலந்திருந்தது. ''ஹும்! என் கையால் அடி வாங்கின ஒரு மனிதன் உன் மேலே ஆசை வைக்கிறான் என்றால் அது வெட்கக்கேடு. அவனுடைய வார்த்தைக்கு இணங்கி நீ இந்த வேளையில் இங்கே வந்தது அதைக் காட்டிலும் ரொம்ப வெட்கக்கேடு'' என்று வெறுப்போடும் அலுப்போடும் சொல்லிவிட்டு, 'ஹும்! நான் இருந்தால் உங்களுக்கு ஏதாவது இடையூறாக இருக்கும். நான் போகிறேன்'' என்றான்.

மாதவிக்குப் பளிச்சென்று விடை கொடுத்து அவனை அனுப்ப மனமில்லை. அவனோடு இன்னும் சிறிது நேரமாவது பேசிக் கொண்டிருக்க வேண்டுமென்று தோன்றியது. அந்தச் சமயத்தில் அவள் கோவிந்தனைப் பற்றித் துளிக்கூட லட்சியம் செய்யவில்லை. அவனைச் சந்திக்க வந்த இடத்தில் சிங்காரத்தைச் சந்திக்க நேர்ந்தது ஒரு பெரிய அதிர்ஷ்டமாகத்தான் அவளுக்குப் பட்டது. ''ஏன், இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்கலாமே! உங்களோடெல்லாம் பேசி உங்கள் கதைகளை யெல்லாம் நிறையக் கேட்க வேண்டுமென்று எனக்கு ரொம்ப ஆசை'' என்றாள்.

''எங்கள் கதைகளைக் கேட்க உனக்கு ஆவலா! அதிலே என்ன இருக்குது! நிலையான வாழ்க்கை இல்லை. ஊர் ஊராகச் சுற்றி வயிறு வளர்க்கும் கழைக்கூத்தாடியின் கதையில் என்ன இருக்கிறது! காலும் கையும் உருவாக இருக்கும்போது பிச்சை எடுத்துச் சாப்பிடுவது கேவலம் என்று சில வித்தைகளைத் தெரிந்து கொண்டு அதைச் செய்து காட்டி உடலாலே உழைத்துச் சம்பாதிக்கிறோம். இதைத் தவிர பிச்சைக்காரர்களுக்கும் எங்களுக்கும் ரொம்ப அதிக வித்தியாசமில்லை......'' என்றான்.

"எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. உங்களைப் போன்ற கழைக் கூத்தாடிகளின் கதையில்தான் நாங்கள் தெரிந்து கொள்ளாத விஷயமெல்லாம் இருக்கும். நீங்கள் எப்படி வசிக்கிறீர்கள்! எப்படிக் குடித்தனம் நடத்துகிறீர்கள்! இதை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் எனக்கு ஆசை. எனக்கென்னவோ நாலுபுறமும் சுவர் எழுப்பிய வீட்டிலிருப்பதே பிடிக்கவில்லை. உங்களை யெல்லாம் பார்க்கும் பொழுது எனக்கும் வீட்டை விட்டுக் கிளம்பி உங்களோடு சேர்ந்து சுதந்திரமாகக் கட்டுப்பாடு இல்லாமல் ஊர் ஊராகச் சுற்றி மலை, ஆறு, ஏரி, எல்லா இடத்தையும் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது'' என்றாள்.

மாதவி பேசும்போது அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சிங்காரம். உலகத்தில் இப்படியும் ஒரு பெண் இருப்பது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவள் பேச்சும் அவள் பேசும்போது அவள் விழிகளில் தோன்றும் ஆர்வமும், அவள் நெஞ்சிலுள்ள ஆசையை அவனுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டின. அவளுடைய ஆசை அவனுக்கு விபரீதமானதாகப் பட்டது. அந்தச் சமயம் அவ்விடத்தில் அவளோடு தனிமையில் நின்று பேசுவது அவ்வளவு நல்லதாகப் படவில்லை. எந்தச் சமயத்திலும் அந்த இடத்திற்குக் கோவிந்தன் வரலாமல்லவா! அவன் அவர்களிருவரையும் தனிமையில் பார்த்தால் எத்தகைய கெடுதல் ஏற்படுமோ! அவளை ஏரிக் கரைப் பக்கம் அழைத்துக் கொண்டு போவதுதான் அவனுக்கு அச்சமயம் உசிதமாகப் பட்டது.

''என்னைப் பற்றி உனக்கு எத்தனையோ கதை சொல்லுவேன். ஆனால் அதற்கு இந்த இடம் சௌகரியமில்லை. ஏரிக் கரைப் பக்கம் போய் உட்காருவோமா!'' என்று கேட்டான் சிங்காரம். அவளும் அதற்குச் சம்மதித்தாள். இருவரும் ஏரிக் கரையை நோக்கி நடந்தனர். அவர்கள் அந்த இடத்தை விட்டு நிலவொளியில் நிழல் போல் சென்று மறைந்தபொழுது அங்கே ஒரு மர நிழலில் இருட்டிடையே ஒளிந்திருந்த உருவம் ஒன்று வெளிப்பட்டு நடுரஸ்தாவில் வந்து நின்று உறுமிக் கொண்டே ஒரு பெரு மூச்சு விட்டது. அந்த உருவம் வேறு யாருமில்லை. கோவிந்தன்தான். அவன் அங்கு வந்ததைக் கூடக் கவனிக்காமல் மெய் மறந்த நிலையில் நின்று பேசிக் கொண்டிருந்து விட்டனர் மாதவியும் சிங்காரமும்.

''ஹும்! இப்படியா கதை! இந்தப் பயலை ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்'' என்று மனம் குமுறிச் சொல்லிவிட்டுக் கோவிந்தன் அந்த இடத்தை விட்டுச் சென்றான். (தொடரும்)

கசப்பில்லை — வாசனை இல்லை



ஸ்வஸ்திக்

MEDICINAL CASTOR OIL

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்.,
வாடாலா, பம்பாய்

ம௪௦ 192

அமுத கலசம்

பி. இருதயநாத்

பால்ய நண்பர்களான பாலனும் நாதனும் அன்று இரவு வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு முடிந்து வீட்டுக்குப் புறப்பட்ட பாலன், "நாதன்! என் பையனை ஏதாவது ஒரு காலேஜில் சேர்க்க வேண்டும். ஒரே பிடிவாதமாய் பி.ஏ. பட்டம் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறான். நான் எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் பலன் கிடைக்கவில்லை. நீ யாரை யாவது பார்த்து ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

"கலாசாலையில் சேர்ப்பதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சியை, வேலை தேடும் விஷயமாக எடுத்துக் கொள்ளலாமே! உன் பையன் பி. ஏ. படித்துவிட்டு என்ன பிரமாதமாகப் புரட்டி விடப் போகிறான்? கல்லூரியில் வாசிக்க வைப்பது நல்லதுதான். ஆனால், விரலுக்குத் தகுந்த மோதிரம் தானே செய்யவேண்டும்? உன்னால் நாலு வருஷம் கல்லூரிப் படிப்புக்குச் செலவு செய்ய முடியுமா?" என்று திருப்பிக் கேட்டார் நாதன்.

"என்ன செலவு ஆனாலும் சரி, படித்துப் பட்டம் பெற வேண்டுமென்று ஆசைப்படும் போது, நாம் அதைத் தடை செய்யக் கூடாது. பட்டம் பிற்கால வாழ்க்கைக்கு உதவியாக இருக்கலாம் அல்லவா?" என்றார் பாலன்.

"செலவு செய்யப் போகிறவன் நீ. நீயே அதைப் பற்றிக் கவலைப் படாதபோது, உன் பிள்ளை படித்துப் பட்டம் பெறுவதற்கு நான் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்? சரி, நாளைக் காலையில் வா. புரொபஸர் ராஜன் வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாம். அவர் எனக்குத் தெரிந்தவர்; நல்ல மனிதர். அவரால் செய்யக் கூடியதைச் செய்வார்" என்றார்.

மறு நாள் இருவரும் புரொபஸர் ராஜனுடைய பங்களாவுக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் அங்கு சென்ற சமயத்தில் ராஜன் தன் மனைவி லில்லியுடன் தாழ்வாரையில் உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார். தங்களுடைய பங்களாவுக்குள் இருவர் வருவதைக் கண்டதும், "மிஸ்டர் நாதனா? வாருங்கள், வாருங்கள்!" என்று இழுத்தார் ராஜன்.

"வாருங்கள்" என்று ராஜன் இழுத்ததைக் கண்டு நாதன் அவரது முகத்தை உற்றுப்பார்த்தார். அப்பொழுது ராஜனும் அவரது மனைவியும் ஏககாலத்தில் பாலனை ஒரு விதமாக வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்தத் தம்பதிகளின் முகத்தில் பல வித உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன.


அவர்களைப் பார்த்த பாலன் திடுக்கிட்டுத் தலை குனிந்து கொண்டார்.

இந்தக் காட்சியைக் கண்ட நாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் ராஜன் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு அவர்களை வரவேற்றார்.

அப்போது பாலனுடைய முகத்தில் ஈயாடவில்லை. அவருக்கு 'நாம் ஏன் இங்கு வந்தோம்?' என்றுகூட இருந்தது.

* * *

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் லில்லி பி.ஏ.எல். டி. பட்டம் பெற்று ஒரு ஹைஸ்கூலில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தாள். ஆனால் அந்தப் பணியில் அவளுக்குப் போதிய ஊதியம் கிடைக்காததால், ஆசிரியைத் தொழிலை ராஜிநாமா செய்து



விட்டு, ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தாள். அந்தக் கம்பெனியில், அவள் வேலைசெய்த பிரிவில் சுமார் இருபது குமாஸ்தாக்கள் வரை இருந்தார்கள். அவர்களில் சிலர் திருமணமாகாத வாலிபர்கள்.

லில்லியைப்போல் வேறு இரண்டு பெண்களும் அங்கு வேலைசெய்து வந்தார்கள். அவர்களில் லில்லியே மிகவும் அழகு வாய்ந்தவள்; உயர்ந்த படிப்புப் படித்தவள்.

எனவே, லில்லியின் நல்ல அபிப்பிராயத்தைப் பெறுவதற்காகக் கல்யாணமாகாத சில வாலிபர்கள் போட்டி போட்டுக் கொண்டு முயற்சித்ததில் ஆச்சரியம் இல்லை. லில்லிக்கு அவள் வேலை சுலபமாக இருக்கும் பொருட்டு ஒவ்வொரு வாலிபரும் நான், நீ என்று அவளுக்கு உதவி செய்ய விரும்பினார்கள்.


இருந்தாலும் அவர்களுடைய போட்டி லில்லிக்குப் பெரிதும் தர்மசங்கடமாக இருந்தது. அவள் ஏழ்மையான குடும்பத்தில் அடக்க ஒடுக்கத்துடன் வளர்ந்தவள். ஆதலால், அவளுக்கு மற்றக் குமாஸ்தாக்களுடன் சரளமாகப் பழக முடியவில்லை. தவிர, எல்லாருமே கல்மஷமற்றவர்களாக இருப்பார்கள் என்று எண்ணிவிட முடியுமா?

ஆகையால், அவள் ஆபீசில் வேலை செய்யும் விஷயத்தில் ஒருவருடைய உதவியும் தனக்குத் தேவையில்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். ஆனால் நல்ல காத்திரமோ, தன்னைக் காட்டிலும் அதிகப் படிப்போ இராத அப்பாவியான ஒரு குமாஸ்தா மாத்திரம் அவளுக்கு ஏதாவது உதவி செய்து வந்தார். அதை அவள் தடுக்கவில்லை. ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த ஒரு குமாஸ்தாவின் உதவி எப்படியும் வேண்டியதுதானே?

தங்களைக் காட்டிலும் எந்த விதத்திலும் உயர்ந்த லில்லிமீது மற்ற இரண்டு பெண் குமாஸ்தாக்களும் பொறாமை கொண்டனர். லில்லி தங்களிடம் கண்டிப்பாக நடந்து கொண்டதற்காக மற்றக் குமாஸ்தாக்கள் அவள்மீது ஆத்திரம் கொண்டனர். எனவே, அவர்கள் எல்லாரும் சதிசெய்து லில்லிக்கு விரோதமாக அபாண்டமான வதந்தியொன்றைக் கிளப்பி விட்டனர். அந்த அப்பாவி குமாஸ்தா லில்லியின் காதலன் என்பது தான் அந்த வதந்தி.

மேற்படி வதந்தி நாளுக்கு நாள் விசுவரூபம் எடுத்து லில்லியைத் திடுக்கிடச் செய்து விட்டது. தன்னைப் பற்றி ஆபீசிலும் வெளியிலும் பலர் பலவிதமாகப் பேசியதை லில்லியே தன் காதால் கேட்க நேர்ந்தது.

இந் நிலையில் லில்லிக்கு மனவேதனை தாங்க முடியவில்லை. அதிக ஊதியத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு அமைதியான ஆசிரியைத் தொழிலை விட்டு வந்ததற்கு இத்தகைய தண்டனையா என்று ஏங்கினாள். மன அமைதி ஏற்படுவதற்காக அவள் ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டாள்.



ரஜாவிலிருந்து திரும்பிவந்த பின்னரும் பழைய தொல்லை ஓய்ந்தபாடில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகத் தொடங்கியது. அவள் அப்பாவிக் குமாஸ்தாவைக் காதலிக்கிறாள் என்ற பேச்சே எங்கும் நிலவியது.

ஒரு நாள் அந்தக் குமாஸ்தா, லில்லியிடம், "நான் இனி ஆபீசில் உங்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது என்று கூறுவதற்கு வருந்துகிறேன். தங்களுடன் நான் இனிப் பேசவும் மாட்டேன். என்னால் உத்தமகுணம் படைத்த உங்களுக்குக் கெட்ட பெயர் எதற்காக?" என்று துயரத்துடன் கூறினான்.

ஒருநாள் லில்லி ஆபீசுக்குச் சென்றபோது திடுக்கிடும் செய்தி அவளை வரவேற்றது. அவளையும் ஏழைக் குமாஸ்தாவையும் பற்றிய வதந்தி கம்பெனி மானேஜருக்கு எட்டிவிடவே, அவர் மேற்படி குமாஸ்தாவின் நடத்தையைக் கண்டித்து அவனுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டார்.

இதைக் கேட்டதும் லில்லியின் கண்களில் நீர் ததும்பியது. நிரபராதியான குமாஸ்தாவுக்கு அவ்விதத் தண்டனையா? இது என்ன பாழும் உலகம்?



பேரன் (புதிதாகச் சென்னை வந்திருக்கும் தாத்தாவை ஹைகோர்ட் கட்டிடத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறான்):—தாத்தா, இங்கிருந்து மேலே பாரு, தாத்தா! எவ்வளவு ஜோராயிருக்கிறது!

தாத்தா (மேல் மூச்சு வாங்க):—சுத்த முட்டாளாயிருக்கிறாயே! இதைக் கீழே இருந்த படியே பார்த்திருக்கலாமே! என்னத்துக்காக என்னை இந்தத் தள்ளாத வயசிலே மேலே இழுத்துக் கொண்டு வந்தாய்?

லில்லி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பல நாட்களாக அவள் மனத்தில் எங்கேயோ ஓரத்தில் மறைந்து கிடந்த எண்ணம் வலுவடைந்தது.

செல்வ வந்தனாகவும் பட்டம் பெற்றவனாகவும் இருந்து அன்பில்லா விட்டால் என்ன பலன்? படிப்பில் தன்னைக் காட்டிலும் குறைந்தவரைக் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்று மனிதன் இயற்றியுள்ள சட்டமோ ஆண்டவனின் சட்டமோ கூறவில்லை. சில அயோக்கியர்களின் கற்பனையிலிருந்து உதித்த வதந்தியை உண்மையாக்கி விட்டால்......? அவ்வாறு செய்வது தர்மத்துக்கு முரணல்ல.

தன்னுடைய முயற்சியால் அந்தக் குமாஸ்தா மேல் படிப்புப் படிப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது.

தன் அபிப்பிராயத்தை அந்தக் குமாஸ்தாவுக்குத் தெரிவித்தாள் லில்லி. இதைக் கேட்டதும் அவனுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நோயாளிக்கு அமுத கலசம் கிடைத்தால் எப்படி இருக்குமோ, அப்படி அவன் உடலும் மனமும் பூரிப்படைந்தன.

இருவரும் ஏககாலத்தில் கம்பெனி வேலையை ராஜிநாமாச் செய்தனர். லில்லி ஒரு ஹைஸ்கூலில் வேலைக்கு அமர்ந்தாள்.

அந்த ஏழைக் குமாஸ்தா எவ்வளவோ சொல்லியும் அவனை வேறு வேலை தேடுவதற்கு அவள் அனுமதிக்கவில்லை. அவனுடைய மேல் படிப்புக்கு அவளே உதவி செய்தாள். அதிர்ஷ்டவசமாக அவனும் சில வருஷங்களில் கல்லூரிப் படிப்பைப் பூர்த்தி செய்து, பி. ஏ. பி. டி. பட்டம் பெற்றான்.

ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியில் பெரிய படிப்பில்லாத ஏழைக் குமாஸ்தாவாக இருந்த தன்னை உத்தாரணம் செய்து, தன் வாழ்க்கையையே மாற்ற வந்த ஒரு தேவதையைப் போல் லில்லி அவன் கண்ணுக்குக் காட்சியளித்தாள்.

அந்தப் பங்களாவின் வாசற் புறத்தில் இன்று புரொபஸர் ராஜன், பி.ஏ.பி.டி. என்று எழுதப்பட்டிருந்த பலகை தொங்கிக் கொண்டிருந்தது.

* * *

அந்தக் காலத்தில் ராஜனுக்கும் லில்லிக்கும் விரோதமாக வதந்தியைக் கிளப்பி விடுவதற்கு மூலகாரணமாக இருந்தவர்தான் பாலன். அந்தச் சம்பவங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது பாலனுக்கு வெட்கம் தாங்க முடியவில்லை.

ஆனால், ராஜனும் லில்லியும் பாலனின் நிலையை நன்கு அறிந்து கொண்டனர். பாலன் மீது அவர்களுக்கு அக்காலத்தில் மிகுந்த ஆத்திரம் ஏற்பட்டது உண்மையே. எனினும் பாலனின் விபரீதமான போக்கு அவர்களுக்கு இறுதியில் நன்மையாகவே முடிந்து விட்டது அல்லவா?

எனவே, அவர்கள் புன்முறுவலுடன் இரண்டு நண்பர்களையும் வரவேற்றனர்.

"இவர் எனது நண்பன் பாலன்" என்று நாதன் தனது நண்பரை அறிமுகம் செய்து வைத்தபோது, "பாலன் அவர்களை எங்களுக்கு வெகுகாலமாகத் தெரியுமே!" என்று மாத்திரம் சொன்னார் புரொபசர் ராஜன்.


தாங்கள் வந்த காரியத்தை நாதன் அவரிடம் தெரிவித்தபோது, "நீங்கள் சிறிதும் கவலைப் படவேண்டாம். இது என்ன பிரமாதம்? உங்கள் பையன் காலேஜில் சேர்ந்து விட்டதாகவே நினைத்துக் கொள்ளுங்கள். நாளைக்கே அவனை எங்கள் காலேஜுக்கு அழைத்து வாருங்கள்" என்றார் புரொபசர் பாலனைப் பார்த்து.

பாலனின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. எந்த ராஜனுக்கு ஒரு காலத்தில் அவர் இல்லாத ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டுத் தீங்கிழைத்தாரோ, அதே ராஜன் அவருடைய தீச் செயலை மறந்து உதவி செய்ய முன் வந்ததை நினைக்க நினைக்க அவர் மனத்தை என்னமோ செய்தது. ஒரு காலத்தில், தான் அவர்களுக்கு இழைத்த அநீதிக்காக அவர்களிடம் மன்னிப்புக் கோருவது போல் பாலனின் கண்கள் நீரை வடித்தன.



துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 179-50 TM



கேசவர்த்தினி அணா 14; ஷாம்பு அணா 14; தபால் செலவு வேறு: எங்கும் கிடைக்கும்.
தென் இந்திய ரஸாயனசாலை, கோயமுத்தூர்

பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது

நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்ததுமுதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதி யுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அழகாயாசமாக வைத்துக்கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்கள்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும்போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிப்பு, எரிச்சல், வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப்போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரமாக வேலை செய்கிறது. தமைச்சல், எரிச்சலை ஒரு நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி— நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி புதுப்பாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார்: "12 வருஷமாக தமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் தமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரிய மடைந்தனர்."



BEFORE AFTER

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக்கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் அழகாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

39 வாழும் வகைகள்!

"அர்ஜுனா! தபஸ்விகளைக் காட்டிலும், ஞானிகளைக் காட்டிலும் நித்திய நைமித்திய காம்ய கர்மங்களைச் செய்பவர்களைக் காட்டிலும் இயம நியமாதிகளுடன் கூடிய யோகாப்பியாசம் செய்யக்கூடியவனே உத்தமோத்தமன். ஆகையால் நீயும் இயமாதிகளைக் கைக்கொண்டு யோகியாவாய்" என்பது பகவத்கீதையின் வாக்கு.

எனவே, அர்ஜுனன் ஒன்றும் முற்றிலும் துறந்த முனிவனல்ல. குடும்பத்திலிருந்து கொண்டு ராஜ்ய காரியங்களைக் கவனிக்கும் க்ஷத்திரியன். அவனை இயமநியமாதிகளுடன் கூடிய யோகப் பயிற்சியைச் செய்யும்படியாகத் தூண்டுகிறார் கிருஷ்ண பரமாத்மா. உலகுடன் ஒட்டி வாழ இவை எவ்வளவு முக்கியமானது என்று இனிச் சொல்லத் தேவை இல்லையல்லவா! இந்த யோகாப்பியாசமே பேரின்ப நிலைக்குக் கொண்டு செல்லும் இடமான மார்க்கம். அந்த நிலை அடைய எட்டு படிகளை வகுத்திருக்கிறார்கள். இயமம் அதில் முதல் படி. இரண்டாவது படி நியமம். மூன்றாவது படிதான் ஆசனம். அதில் ஸ்திரப்பட்டுத்தான் - இதில் தேறித்தான் மற்ற படிகளுக்கெல்லாம் செல்ல வேண்டும். இதனை நடைமுறையில் கொண்டு வரக் காடு மலை தேடிக் கானகம் ஏக வேண்டியதில்லை. பிள்ளை பெண்டாட்டியை வெறுத்துச் சன்னியாசம் கொள்ள வேண்டியதில்லை. இயமம், நியமாதிகளை அனுசரித்துக் கொண்டே ஆசனம் செய்யலாம்.

"இவ்வுலகம் பொய், தனம் பொய், உற்றார் உறவினர் பொய், பிள்ளைக் குட்டிகள் பொய், காம் காணும் அனைத்தும் பொய். ஏன் நாமே பொய்! அப்படியிருக்க இவ்வுடலை அவ்வளவு சிரத்தையாய்க் காப்பாற்ற வேண்டுமா! ஆசனமாம், யோகமாம். அதுகளெல்லாம் வேலையில்லாத வீணர்களின் வார்த்தை என்று இன்னலை வேதாந்தம் பேசலாம். முற்றிலும் துறந்த முனிவர், அருட்பெரும் வள்ளலார் ஸ்ரீ இராமலிங்க அடிகள்,

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்,
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும்,
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்,
பெருநெறிபிடித் தொழுகவேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவுபெண்ணாசையை மறக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்........."

என்று "நோயில்லா வாழ்வு நான் வாழவேண்டும்" எனக் கதறுகிறார். அவருக்கென்ன இவ்வுலகம் பொய், இவ்வுடல் பொய், என்பது தெரியாதா! பின் ஏன் அவ்விதம் கேட்க வேண்டும்! ஸ்ரீ கிருஷ்ணன் யோகாப்பியாசம் செய்பவனே உத்தமோத்தமன் என்கிறார்! அது ஏன்!

அதில்தான் வாழும் வகை அமைந்திருக்கிறது. இவ்வுடலை வைத்துத்தான் உலகில் வாழ வேண்டியிருக்கிறது. ஞானியாகவும் இவ்வுடல் இருக்கும் போதுதான் முன்னேற முடியும். யோகியாகவும் இவ்வுடலின் துணை கொண்டுதான் முன்னேற முடியும். பெரிய அறிவாளி ஆகவும் இவ்வுடல் நன்றாய் இருந்தால் தான் முடியும். இன்னுலு வாழவும் இவ்வுடல் சீராய் இருந்தால்தான் முடியும். சகலத்துக்கும் இவ்வுடல் என்னும் தோணியைக் கொண்டுதான் சம்சாரமெனும் சாகரத்தைக் கடக்க வேண்டியிருக்கிறது. தோணி ஓட்டையாகவோ, உளுத்தோ விட்டால் மூழ்கி இறக்க வேண்டியது தான். நம்மைக் கொண்டு செலுத்தும் சரீரம் எனும் இத்தோணியை எவ்வளவு கவனத்துடன் காப்பாற்றுகிறோமோ அவ்வளவு தூரம் பிரயாணத்தைச் சீக்கிரமாக முடிக்கலாம். இல்லையானால் அவ்வளவுதான்.

அதனால்தான் பெரிய பெரிய ஞானிகளும், யோகிகளும், இந்த உடலைக் காப்பாற்ற ஆசனங்களைப் போதிக்கும் ஹடயோகத்தை உண்டாக்கினார்கள்.

அன்பர்கள் இயமம், நியமம் என்று வெறுமனே இவர் சொல்லிக் கொண்டு போகிறாரே, அவை யென்னவென்று கேட்கலாம். அவை வாசகர்களுக்குத் தெரிய வேண்டியது மிகவும் அவசியமாகையால் சுருக்கமாய் வரைகின்றேன்

முதல்படி இயமம்

1. அஹிம்சை: முதல்படி கொல்லாமை இயமம், எவர்க்கும் கஷ்டத்தை உண்டாக்காமை.




"தீபாவளி முடையா இருக்குங்க. பணம் ஏதாவது கொடுங்க."

"தீபாவளி முடையா இருக்குங்க போவிட்டு அப்புறம் வாங்க."

இக்கட்டுரை ஆசிரியர்: ஸ்ரீ வி. என். குமாரசாமி, 216, திருவொற்றியூர் ஹைரோடு, தண்டையார்பேட்டை, சென்னை

ஆபரேஷன் பலிக்கவில்லை!



ஐந்து வருஷங்களாகச் சிறையில் பலவித இன்னல்களுக்கும் ஆபரேஷன்களுக்கும் உள்ளான எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கான் சிறிதும் தளராமலும் உணர்ச்சி குன்றாமலுமிருப்பதாக அவரைப் பேட்டி கண்ட பத்திரிகையாளர் தெரிவித்திருக்கிறார்.

---

2. சத்யம்: உண்மையையே பேசல்.

3. அஸ்தேயம்: மனோ வாக்கு காயத்தாலும் பிறர் பொருளைத் தொடாமை.

4; பிரம்மச்சர்யம்: எந்த வழியிலும், கெட்ட வழிகளில் வீரியத்தை நஷ்டமாக்காமல் இருத்தல்.

5. க்ஷாமா: இன்ப துன்பங்களினால், மனத்தை மாற்றிக் கொள்ளாமல் இருத்தல்.

6. த்ருதி: நல்ல காரியங்களினால் என்ன இடையூறு நேர்ப்பட்டாலும் மனோ தைரியமுடன் கடமையைச் செய்தல்.

7. தயா: சத்ரு, மித்ரு, அந்நியன், பந்து என்ற வித்தியாசமின்றி எல்லோரிடமும் ஒரே வித அன்பைச் செலுத்தல்.

8. ஆர்ஜவம்: மனத்தை நேர்மையான வழியில் செலுத்தல்.

9. மிதஹாகாரம்: பாதி வயிறு உணவும், கால் வயிறு தண்ணீரும் கால் வயிறு காலியாகவும் வைத்து இருத்தல்.

10. சௌசம்: உள்ளும் புறமும் சுத்தமாய் இருத்தல். இவைகளெல்லாம் ஒன்றும் புதியதல்ல. நாம் சாதாரணமாகப் பள்ளிக்கூடப் புத்தகங்களில் கூடப் படித்தவைதான்.

இரண்டாம்படி நியமம்

1. தபஸ்: உஷ்ணம், குளிர்ச்சி, சுகம், துக்கம், பிரீதி, த்வேஷம், முதலியவைகளைச் சமமாக ஏற்றுக் கொண்டு தர்மத்தை அனுஷ்டித்தல்.

2. சந்தோஷம்: காலதேச வர்த்தமானங்களால் சுக துக்கம் ஏற்படின் அவைகளைப் பரிசுத்த மனத்துடன் ஏற்றல்.

3. ஆஸ்திக்யம்: கடவுள் நம்பிக்கையுடன் அவனை யடைய முயற்சித்தல்.

4. தானம்: நியாய சம்பாத்தியத்தைப் பிரதிப் பிரயோஜனம் எதிர் பாராமல் வழங்கல்.

5. ஈசுவர பூஜை: வேத முறைப்படி கடவுளை வழி பட்டு வருதல்.

6. சித்தாந்த வாக்கிய சிரவணம்: மகான்களின் வாயிலாக வேதாதி சாஸ்திரங்களை முறையாகக் கேட்டல்.

7. ஹ்ரீ: இதற்கு முன் ஏதாவது தவறுகள் செய்திருந்தால் பெரியோர் முன்னிலையில் தெரிவித்து இனிச் செய்யாமல் இருக்கப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு வாழுதல்.

8. மதி: தியானித்தல்.

9. ஜபம்: கடவுள் நாமத்தை ஜெபித்தல்.

10. ஹோமம்: தேவதா பிரீதிக்காக அதாவது இயற்கையின் நன்மைக்காக, வேதோக்தமான அக்னி ஹோத்திரம் செய்தல்.

இவைகளும் நமக்குத் தெரிந்தவைதான். மனிதர்களாகப் பிறந்தவர்கள் சன்மார்க்கர்களாக அநுசரிக்கக் கூடியவைகளே இவைகளெல்லாம். எனவே இயம நியமங்கள் என்றால், என்னவோ ஏதோ என்று பயப்பட வேண்டியதில்லை. உத்தமனாய் இருக்கச் சொல்லியது இயம நியமங்கள். அத்துடன் உடலையும் பேணச் சொல்லியது ஆசனம்.

இவ்வுடலில் பல ரகஸ்யங்கள் அமைந்திருக்கின்றன. சமூகத்துடன் வாழும்போது ஏதாவது அஜாக்கிரதையினால் நோய் வந்தால், அதற்குத் தன்னைத்தானே சுகப்படுத்திக் கொள்ள சிகிச்சை செய்து கொள்ள, உடலில் அங்கங்கே மருந்துப் பெட்டிகளைப் போன்று பல இருக்கின்றன. அம்மருந்துப் பெட்டிகளிலுள்ள மருந்துகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியது நமது கடமை. அதைக் கெட்டியாக மூடி விட்டுத் துருப் பிடிக்க வைத்துவிட்டு, நமக்கு ஏதாவது உடம்புக்கு வந்து விட்டால் உடனே வேறு வெளி மருந்துகளை உள்ளுக்குச் செலுத்துகிறோம். இயற்கை மருந்துப் பெட்டிகளை நாம் உபயோகிக்க மறந்து விட்டோம். அம்மருந்துகளை எப்படி உபயோகிப்பது ! அந்த மருந்து ஏதோ அலமாரியில இருக்கிறது என்றால் வேண்டிய மருந்தை எடுத்து உபயோகிக்கலாம். உடலுக்குள் இருப்பதை எப்படி உபயோகிப்பது !

அதற்குத்தான் யோக ஆசனங்கள் பல கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. கோளங்களைப் பற்றியெல்லாம் முன் பல அத்தியாயங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது.

அவைகளெல்லாம் கூட அற்புதமான மருந்துப் பெட்டிகளே. தைராய்ட், பாரா தைராய்ட் என்னும் மருந்துப் பெட்டிகளைத் திறக்க சர்வாங்காசனத்தையும், பிட்யூடரி, பினியல் பாடி என்ற மருந்துப் பெட்டிகளைத் திறக்கச் சிரசாசனத்தையும் அட்றினல் மருந்துப் பெட்டியைத் திறக்க அர்த்த மத்ஸ்யேந்திராசனமும் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறது. இன்னும் பல மருந்துப் பெட்டிகள் வயிற்றில் உள்ளன. பொதுவாகவே வயிற்றிலுள்ள மருந்துப் பெட்டிகள் எல்லாவற்றையும் திறக்க ஒரு பொதுச் சாவியுண்டு. அதற்குத்தான் யோகமுத்திரா என்று பெயர்.

யோகமுத்திரா என்றால் யோகத்தின் சின்னம்; 'அடையாளம்' என்று அர்த்தம். இச்சின்னத்தைக் கண்டதும் மருந்துப் பெட்டிகள் தானாகவே திறந்து கொள்ளுகின்றன. நாம் எத்தனை விதமான ஆகாரங்களைச் சாப்பிடுகிறோம் ! இனிப்பு, காரம், புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, கைப்பு, இம்மாதிரி அறுசுவையான பண்டங்களில் பலவித சத்துக்கள் நிறைந்த காய் கறி, கீரை, பழ வகைகள், தானியங்கள், பால் மாமிசம் முதலியனவெல்லாம் இவ்வயிற்றுக்குள் தானே செல்லுகின்றன ! வயிற்றிலுள்ள உறுப்புக்கள் அத்தனையும் ஜீரணமாக இன்ஸுலினாகவும், பித்த நீராகவும், காஸ்டிக் ரசமாகவும், மற்றும் பல ரசங்களைக் கொண்ட மருந்துகள் வந்து கலக்கின்றன. அதனால்தான் சாப்பிட்டவை எல்லாம் ஜீரணமாகின்றது. ஜீரணமாகி வரும் ரசங்களிலிருந்து மறுபடியும் தமக்கு வேண்டியதைச் சேகரித்துக் கொள்ளுகின்றன. இதற்குத்தான் மருந்துப் பெட்டிகள் என்று பெயர்.


உதாரணமாக இன்ஸுலின் உற்பத்தியாகும் மருந்துப் பெட்டியாகிய பாங்கிரியாஸ் என்னும் உறுப்பு வேலைசெய்ய மறுத்தால், நாம் என்ன செய்கின்றோம் ! அது எதனால் வேலை செய்யவில்லை. அதன் புகார் என்ன ! அதில் குறையென்ன ! என்று கொஞ்சம் கூடச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அதை அப்படியே விட்டுவிட்டு, இன்ஸுலின் என்ற மருந்தை ஊசி மூலமாகக் குத்தி உடலில் ஏற்றிக் கொள்ளுகிறோம். இம்மாதிரியே ஒவ்வொரு அவயவமும் வேலை செய்யவில்லையென்றால், அதிலிருந்து என்ன உற்பத்தியாகுமோ அந்தச் சத்துடைய மருந்தை ஊசி மூலமாகக் கொள்ளுகிறோம். அதற்குப் பதிலாக உடலுள்ள மருந்துப் பெட்டிகளையே திறக்கச் சிறிது முயன்றால் இயற்கையாகவே, காசு செலவில்லாமல் ஊசி குத்தல் இல்லாமல், தேக பாதை இல்லாமல் அம் மருந்துகளை உபயோகித்துக் கொள்ளலாமே ! அம்மாதிரி அடைந்து கிடக்கும் மருந்துப் பெட்டிகளைத் திறக்கும் சாவியின் பெயர் தான் யோகமுத்திரா. யோக முத்திராவைச் செய்வதால் வயிற்றிலுள்ள சகல உறுப்புகளும், திறக்கப்பட்டு அதற்குத் தேவையான மருந்தை வேண்டிய மட்டும் விநியோகம் செய்யலாம். (தொடரும்)

அன்னை ஆனந்தமயி

★

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷி போன்ற மகான்களைப் போல் சிறு வயதிலேயே ஞான, யோக, பக்தி மார்க்கங்களில் ஈடுபட்ட அன்னை ஆனந்தமயி கூடிய சீக்கிரம் சென்னைக்கு விஜயம் செய்வார். சென்னை நகரில் சில தினங்கள் தங்கி யிருந்த பின் தமிழ் நாட்டில் உள்ள பல முக்கிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வார். 1896-ம் வருஷம் வங்காளத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பிறந்த அன்னை ஆனந்த மயிக்கு மிகச் சிறு வயதிலிருந்தே தெய்வ சாந்நித்யம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.




டிரக்குகள்
மற்றும்
பஸ்ஸுகளுக்கு
சிவப்பு
வளையத்தைக்
கவனித்து
வாங்கவும்
சூப்பர் இந்தியா





அக்காளும் அத்திம்பேரும் என்னைப் பெங்களூருக்கு அனுப்பி வைக்கும்படி அப்பாவுக்குக் கடிதம் எழுதிக் கொண்டே இருந்தார்கள். எனக்கும் பெங்களூர் போக வேண்டும் என்று ரொம்ப நாட்களாக ஆசை. ஆனால் அப்பாவுக்கு மட்டும் என்னை அங்கே அனுப்புவதில் விருப்பமில்லை. காரணம் வேறொன்றுமில்லை. நான் அங்கே போனால் என் படிப்பு குட்டிச் சுவராய்ப் போய் விடுமாம். கோடை விடுமுறையின் போது கூட நான் புத்தகமும் கையுமாக இருக்க வேண்டும் என்பது அப்பாவின் விருப்பம்.

"பள்ளிக்கூடப் படிப்பு ஒரு வழியாக முடியட்டும். அப்புறம் உன் இஷ்டப்படி பெங்களூருக்குப் போகலாம்!" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார் அப்பா.

என் பள்ளிப் படிப்பு ஒருமாதிரி முடிவடைந்தது. அந்த வருஷம் அத்திம்பேர் சென்னைக்கு வந்திருந்தார். திரும்பவும் ஊருக்குப் போகும்போது என்னையும் தம்முடன் பெங்களூருக்கு அழைத்துக் கொண்டு போனார்.



பெங்களூரில் என் அக்கா ஒரு தனி பங்களாவில் இருந்தாள். காம்பவுண்டு, தோட்டம் எல்லாம் மிகவும் அழகாயிருந்தன. வாசல் கேட்டுக்கு அருகில் என்னைக் கண்டதும் என் அக்காவின் பெண் கோகிலம் குதித்துக்கொண்டு ஓடிவந்து, "மணி! நீ எப்போ வந்தே? உன்னை அழைத்துக் கொண்டு வரப் போவதாக அப்பா என்னிடம் சொல்லவே இல்லையே!" என்று முகத்தில் மகிழ்ச்சி பொங்கச் சொல்லிக் கொண்டே என் கைகளைப் பலமாகப் பிடித்துக்கொண்டாள்.

கோகிலத்தின் தம்பி ராஜா "மாமா, மாமா!" என்று உற்சாகத்துடன் கத்திக் கொண்டே ஓடி வந்து என் காலைக் கட்டிக் கொண்டான். அவர்களிடமிருந்தெல்லாம் விடுவித்துக் கொண்டு நான் மிகவும் சிரமத்துடன் உள்ளே போனேன். உள்ளே போய் என் பெட்டியையும் படுக்கையையும் வைத்தேன். உடனே என் அக்காளின் மூன்றுவது குமாரன் கிட்டு, "மாமா!" என்று அலறிக் கொண்டு ஓடி வந்து என் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

"வா, மணி! படிப்பெல்லாம் முடிந்ததா? பரீட்சையில் நன்றாய் எழுதியிருக்கிறாயா? அண்ணா, தங்கை சரஸ்- எல்லோரும் சௌக்கியமா? தினம் உன்னைப் பத்திய பேச்சுத்தான் இங்கே! ஒவ்வொரு வருஷம் கோடை லீவிலும் நீ வருவாய் என்று எதிர் பார்த்துக் குழந்தைகள் ஏமாந்து போய் விட்டன. அதுவும் போன வருஷம் நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு அங்கே வந்திருந்தேன் அல்லவா? ஒரு மாசம் இருந்து உன்னோடு பழகிய பிறகு குழந்தைகள் எல்லோருக்கும் உன் ஞாபகம்தான்!" என்று அக்கா பேசிக் கொண்டே போனாள்.

எனக்குப் பெங்களூர் ரொம்பப் பிடித்திருந்தது. அதுவும் அக்காவின் அகத்தில் குழந்தைகளோடு நானும் ஒரு குழந்தையாக விளையாடி, ஓடி, சிரித்துப் பொழுதைப் போக்கியதில் நாள் போனதே தெரியவில்லை.

அக்காவின் குழந்தைகள் செய்த விஷமத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. அதுவும் கடைக்குட்டி அம்பி இருக்கிறானே, அவன் செய்யும் விஷமங்களுக்கு அளவே கிடையாது.

ஆனால் வரவர அந்தக் குழந்தைகளின் துஷ்டத்தனம் சகிக்கக் கூடியதாயில்லை. அத்திம்பேர் வீட்டில் இருந்தால் எல்லாக் குழந்தைகளும் பரம சாதுக்களாக விளங்கும்.

அத்திம்பேர் ஆபீஸுக்குப் போனதும் குழந்தைகளின் சேஷ்டைகள் ஆரம்பமாகிவிடும். அதாவது வீடே ஒரு கிஷ்கிந்தா காண்டமாக மாறிவிடும். அக்கா, நிமிஷத்துக்குப் பத்துத் தடவையாவது குழந்தைகளைக்கூப்பிட்டு அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்து கொண்டிருப்பாள்.

அன்றைக்கு அக்காளெங்கேயோ வெளியிலே போவதற்குத் திட்டமிட்டிருந்தாள் என்பது அவளிடம் இருந்த அசாதாரணப் பரபரப்பிலிருந்து விளங்கியது. காலையிலிருந்து வீடு அமர்க்களப் பட்டது. காலையில் எல்லோருக்கும் காப்பி கொடுத்துக் கொண்டே அக்கா, "கோகிலம், நான் அத்தை அகத்துக்குப் போய் விட்டு வருவதற்குக் கொஞ்ச நேரம் ஆனாலும் ஆகும். அதுவரையில் நீங்கள் எல்லோரும் சமர்த்தாயிருக்க வேண்டும், தெரியுமா? நீ கிட்டுவையும் ராஜாவையும் விடப் பெரியவளோ இல்லையோ? அவர்களையெல்லாம், சண்டை போட்டு மண்டை உடையாமல் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். அம்பிப் பயலைக் கூட இங்கேயேதான் விட்டுவிட்டுப் போகப் போகிறேன். அவனையும் அழ விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன?" என்று கேட்டாள் அக்கா.



"நானும் வருகிறேனே, அம்மா!" என்றாள் கோகிலம் கெஞ்சும் குரலில்.

அக்காளுக்குக் கோபம் வந்து விட்டது. "எண்டி நான் சொன்னதைக் கொஞ்சம்கூடக் கவனிக்காமல் பேசுகிறாயே! உங்களையெல்லாம் அங்கே அழைத்துக் கொண்டு போவதற்கு இல்லை என்பதனாலேதானே இவ்வளவு தூரம் சொல்லுகிறேன்? அத்தைக்கு உடம்பு சரியில்லை. இரண்டு நாளாக அதிகமாயிருக்கிறதாம். எப்படி இருக்கிறதோ என்னவோ! ஆகையினால் நீங்களெல்லோரும் அங்கே வர வேண்டாம். அம்பிப் பயலைக் கூட இங்கேயே உங்களோடு விளையாட விட்டு விட்டுப் போகப் போகிறேன்!" என்று அக்கா ஒருவாறு அவளைச் சமாதானப் படுத்தினாள்.

பிறகு, ராஜாவும் கிட்டுவும் ஓடிவந்து அக்காவின் கையைப் பிடித்துக் கொண்டார்கள். "அம்மா, நானும் வருகிறேன், அம்மா!" என்றான் ராஜா. "அம்மா, நானும் அத்தை அகத்துக்கு வருகிறேன், அம்மா!" என்று அடம் பிடித்தான் கிட்டு.

உடனே அக்கா கோபத்துடன், "நீங்கள் ஒருத்தரும் வரப்படாது. ஊரிலேயிருந்து மாமா மணி வந்திருக்கிறானே இல்லையோ! அவனோடு எல்லோரும் விளையாடிக் கொண்டிருங்கள்!" என்று சொல்லிவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கச் சென்றாள்.

நான் அக்கா சொன்னதையெல்லாம் மாடிப் படியில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் நான் மட்டும் அக்கா கண்ணில் பட்டிருந்தால் அவ்வளவுதான்! இந்த விசித்திரக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை என் தலையில் கட்டியிருப்பாள். அக்கா வெளியே போகும் வரையில் அவள் கண்ணில் படாமல் இருந்து விட்டு, அவள் வெளியே போனதும் நானும் அதே சமயத்தில் எங்கேயாவது வெளியே போய் விடுவது என்று என் மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

அத்திம்பேர் சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குப் போய் விட்டார். அதற்கு அப்புறம் தான் அக்காவின் பரபரப்பு அதிகமாயிற்று. எங்களுக்கெல்லாம் சாப்பாடு போட்டு விட்டு அக்காளும் அவள் மாமியாரும் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட ஆயத்தமானார்கள். அவர்கள் புறப்படுவதற்குள் எங்கேயாவது போய்விடலாம் என்று நினைத்துச் சட்டையைப் போட்டுக் கொண்டு மெதுவாக நழுவலானேன்.

அந்தச் சமயம் பார்த்து என் அருமை மருமான் ராஜா, "மாமா, எங்கே போகிறாய்?" என்று கேட்டான். அப்பொழுது அக்கா குழாயடியில் சோப்புத் தேய்த்து முகம் அலம்பிக் கொண்டிருந்தவள், அப்படியே நான் இருந்த இடத்துக்கு வந்து என்னைப் பார்த்து, "நீயும் வெளியிலே போகிறாயா, மணி? நான் பஸவன்குடிக்குப் போய்விட்டுச் சீக்கிரமாக வந்து விடுகிறேன். அதுவரையில் நீ வீட்டைப் பார்த்துக் கொண்டு இங்கேயே இருந்தாயானால் சௌகரியமாயிருக்கும்!" என்றாள் அக்கா.

"சாதாரண வீட்டைப் பார்த்துக் கொள்ளுவதைப் பற்றி எனக்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை. ஆனால் மிருகக் காட்சிச் சாலைமாதிரி இருக்கும் இந்த வீட்டைப் பார்த்துக்கொள்ள என்னால் முடியாது!" என்றேன் நான்.

அக்காளுக்குக் கோபம் பிரமாதமாக வந்து விட்டது. "சரி, மிருகக் காட்சிச் சாலையில் இருக்கும் மிருகங்கள் உள்ளே போய் ஒன்றும் செய்யாமல் பார்த்துக் கொள்; அது போதும். என் மாமனாருக்கு நீ ஒன்றும் செய்யவேண்டாம். ஒருவேளை அவருக்கு இருமல் வந்தால், உள்ளே பிளாஸ்கில் இருக்கும் வெந்நீரில் கொஞ்சம் எடுத்துக்கொடு. நான் போய் விட்டு உடனே வந்து விடுகிறேன்!" என்றாள். நான் பதில் பேசாமல் வேண்டா வெறுப்பாகத் தலையசைத்தேன். அப்புறம் அக்கா குழாயடிக்குப் போய் முகம் கழுவிக் கொண்டு, மாமியாரையும் அழைத்துக் கொண்டு பஸவன்குடிக்குப் புறப்பட்டு விட்டாள்.

அக்காள் போனதும் வீடே ரணகளமாக மாறிவிட்டது. ராஜாவும் கிட்டுவும் அக்கா வீட்டில், இருந்த வரையில் ராம லக்ஷ்மணர்களாக இருந்தார்கள். அவள் வெளியே போன மறு நிமிஷம் வாலி சுக்ரீவர்களாக மாறி விட்டார்கள். இவர்களை விலக்கப்போன கோகிலத்துக்குப் பலமாக இரண்டு மூன்று குத்துகள் விழுந்தன. அவ்வளவுதான். உடனே கோகிலமும் போரில் இறங்கி விட்டாள். அவர்களுக்குள் அடிதடி மும்முரமாக நடந்தது.

"என்ன ரகளை அங்கே? நான் அங்கே வந்தால் ஆளுக்கொரு அறை கொடுப்பேன்!" என்று தாத்தா (அக்காவின் மாமனார்) சத்தம் போட்டார். உடனே அந்தப் பாழும் இருமல் 'லொல்லு லொல்லு' என்று ஆரம்பித்து அந்தக் கிழப் பிராணனை உலுக்கி எடுத்து விட்டது. நான் உடனே பிளாஸ்கிலிருந்த வெந்நீரை ஒரு டம்ளரில் எடுத்துக் கொண்டு அவரிடம் ஓடினேன். அவருக்கு வெந்நீரைக் கொடுத்துச் சாந்தப் படுத்துவதற்குள், என் மருமான்கள் சண்டை முற்றிவிட்டது. நான் அவர்களுக்கிடையே நுழைந்து ஆளுக்கொரு அறை கொடுத்து அமைதியை நிலைநாட்டப் பெரும் பாடுபட்டேன்.

அடி விழுந்ததும் எல்லோரும் ஒற்றுமையாகி என் மீது பாய்ந்தார்கள்.

"என்ன மாமா இது? குழந்தைகள் சண்டை போட்டால் இப்படித்தான் அவர்களை அறைவதோ?" என்று அழுகை கலந்த குரலில் கேட்டான் ராஜா.

"அப்பப்பா! எப்படி அறைந்துவிட்டான் முதுகிலே! நன்றாய்க் கேளுடா, ராஜா! இன்னொரு தடவை கேளு!" என்றாள் கோகிலம் ஆத்திரத்தோடு.

"குழந்தைகள் சண்டையில் உனக்கு என்ன மாமா?" என்று சிறுவன் கிட்டு.

"நீங்களெல்லாம் குழந்தைகளா? பேஷ்! ஓடுங்கள் வெளியே! உள்ளே வந்தால் இன்னும் அறை விழும்!" என்று ஆவேசம் வந்தவன் மாதிரி கத்தினேன். ராஜா, கிட்டு, கோகிலம் மூவரும் வெளியே ஓடிவிட்டார்கள்.

பிறகு உள்ளே சென்ற எனக்கு ஒரு அதிசயம் காத்துக் கிடந்தது. அம்பிப் பயலைப் பார்த்தேன். எங்கும் காணோம். எனக்குத் திகிலாய்ப் போய்விட்டது. அங்கும் இங்கும் பரபரப்பாய்த் தேடினேன். குழாய்ப் பக்கத்திலிருந்து "மாமா, மாமா!" என்று குழந்தையின் குரல் கேட்டது. அங்கே போய்ப் பார்த்தால் குழந்தையைக் காணவில்லை. குரல் மட்டும் கேட்டது. சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். நிறைய ஜலம் நிரப்பப் பட்டிருந்த பக்கெட்டில் அம்பிப் பயல் உட்கார்ந்து கொண்டு "மாமா, மாமா!" என்று கூப்பிட்டுச் சிரித்தான். அவனைப் பக்கெட்டிலிருந்து தூக்கி என் மேல் துண்டினால் துடைத்துக் கூடத்துக்கு அழைத்துக் கொண்டு வந்தேன். துரு துரு வென்று அலையும் அவனை ஓர் இடத்தில் சமர்த்தாக உட்கார்ந்திருக்கும்படி செய்வதற்கு என்ன செய்யலாம் என்று என் மேதையை யெல்லாம் செலவழித்து யோசனை செய்தேன். கடைசியில் ஒரு யோசனை தோன்றியது. நான் இந்த யோசனையில் ஈடு பட்டிருக்கும் நேரத்தில் அம்பிப் பயல் என்னென்னவோ விஷமங்களெல்லாம் செய்து விட்டான்.

அக்கா மூடி வைத்திருந்த மாவு டப்பாவைக் கீழே தள்ளிக் கூடம் முழுவதும் மாவாக்கி யிருந்தான். மீண்டும் அவனைப் பொறுமையோடு துடைத்து விட்டு என் தந்திரத்தைக் கையாள ஆரம்பித்தேன்.

ஒரு கிண்ணத்தில் சோப்புக் கரைத்த தண்ணீரும் ஒரு வைக்கோல் துரும்பும் எடுத்துக் கொண்டு வந்து, அம்பிப் பயலை என் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, கொப்புளம் ஊதுவதற்குக் கற்றுக் கொடுத்தேன். அவனும் நல்ல வேலையாக அதே மாதிரி ஊத ஆரம்பித்தான். அவனை நான் கூடத்து ஜன்னலுக்கு நேரே உட்கார வைத்து விட்டு உள்ளே போனேன். தாத்தா வாசல் தாழ்வாரத்தில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். நான் இருந்த அறையின் ஜன்னலின் வழியாக அம்பிப் பயல் அமைதியாக உட்கார்ந்திருந்ததைப் பார்க்க முடிந்தது.

அப்பாடி! இப்போதுதான் என் மனம் ஒருவாறு நிம்மதி யடைந்தது. நான் போட்ட கர்ஜனையில் ராஜா, கிட்டு, கோகிலம் எல்லோரும் நடுங்கிப் போயிருக்க வேண்டும். நான் வெளியேற்றிய பிறகு அவர்களுடைய பேச்சுக் குரலே கேட்கவில்லை. பேஷ், நல்ல யோசனை என்று சொல்லிக் கொண்டே நான் முதல் நாள் பாதியில் நிறுத்தி யிருந்த நாவலை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க



உபாத்தியாயர் :—ராமு, உனக்கு இந்தப் பாடத்தை உன் அப்பா தானே எழுதிக் கொடுத்தார்? உண்மையைச் சொல்லு.

ராமு :—இல்லை, ஸார்! நான்தான் எழுதினேன்.

உபாத்தியாயர் :— அப்பாவின் கையெழுத்தைப் போலவே இருக்கிறதே!

ராமு :—ஆமாம், ஸார். அவர் பேனாவினால்தான் எழுதினேன்!

ஆரம்பித்தேன். படிப்பில் மனசைச் செலுத்த முடியவில்லை. அக்கா குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் போயிருக்கிறாளே! ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு ஜன்னல் வழியாக அம்பிப் பயலைப் பார்த்தேன். அவனைக் காணவில்லை. உடனே பரபரப்புடன் வெளியே வந்து பார்த்தேன். அவன் தவழ்ந்து கொண்டே வந்து தாத்தாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டிருந்தான். எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. குழந்தை தாத்தாவிடம் போய் விட்டான். இனிமேல் அவர் கவனித்துக் கொள்ளுவார்.

நான் என் அறைக்குப் போய் மறுபடியும் நாவலைப் படிக்கத் தொடங்கினேன். ஆனால் என்னால் படிக்க முடியவில்லை. தூக்கம் கண்ணைச் சுற்றியது. சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் புத்தகத்தை மார்பில் போட்டுக் கொண்டு தூங்க ஆரம்பித்தேன்.

என் தூக்கத்துக்கு இடையில் அக்கா ஒப்படைத்து விட்டுச் சென்ற பொறுப்பு தோன்றி உறுத்திக் கொண்டே இருந்தது. கண்ணைத் திறந்து பார்த்தேன். நான் தூங்க ஆரம்பித்து அரை மணி நேரம் ஆகி விட்டது. ஜன்னல் வெளியே கொப்புளங்கள் காற்றில் பறந்து செல்வது தெரிந்தது. சரி, அம்பி சாதுவாக சோப்புக் கொப்புளங்களை ஊதிக் கொண்டிருக்கிறான் என்று நிர்மானித்தேன். தாத்தாவும் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருப்பார். இல்லாவிட்டால், அவர் இருமலின் சத்தம் என்னை எழுப்பியிருக்கும். ஆகையால் எல்லாம் சரியாகவே இருக்கிறது என்று நிச்சயம் செய்து கொண்டேன்.

கொஞ்ச நேரத்துக்குப் பின், சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்திருந்தேன். அதேசமயம் என் அக்கா, வெகு சீக்கிரமாக (நாலு மணி நேரத்துக்குள்ளாக) திரும்பி வந்தாள். மிகவும் கோபத்தோடு என் அறைக்குள் நுழைந்தாள். "ஏண்டா மணி, நான் உன்னிடம் என்ன சொல்லிவிட்டுப் போனேன்? குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லவில்லையா?" என்று தொண்டை கிழியக் கத்தினாள்.


நான் உடனே எழுந்து, "இப்பொழுது என்ன நடந்துவிட்டது?" என்று கேட்டேன்.

"என்ன நடந்திருக்கிறது என்று நீயே பார்த்துத் தெரிந்துகொள்! அம்பிப் பயல் டிபனுக்காகச் செய்து வைத்திருந்த உப்புமாவையெல்லாம் கீழே கொட்டி வீணாக்கி விட்டான். காப்பியில் ஜலத்தைக் கொட்டியிருக்கிறான்! உன்னுடைய பூட்ஸில் ஜலத்தை நிரப்பியிருக்கிறான். உன் புதுக் குல்லாவில் ஜலத்தைக் கொட்டி அதில் காகிதக் கப்பலை மிதக்க விட்டிருக்கிறான். அத்திம்பேரின் மேஜைமேலிருந்த சிவப்பு மசியை உடம்பெல்லாம் பூசிக்கொண்டிருக்கிறான். இன்னும் என்னவெல்லாம் செய்திருக்கிறானோ, பார்த்தால் தெரியும். மற்றக் குழந்தைகளெல்லாம் எங்கே?" என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போனாள் அக்கா.

உடனே வீட்டுக் கொல்லைப்புறத் தோட்டத்துப் பக்கம் ஓடினேன். அங்கே நான் கண்ட காட்சியை என்னவென்று சொல்வது?

ராஜாவும் கோகிலமும் மாமரத்தில் ஏறிக் கல்லை வீசி மாங்காய் அடித்துக் கொண்டிருந்தார்கள். கிட்டு, கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டு அதன் வாலை முடுக்கித் தோட்டம் முழுவதும் சுற்றி வந்தான்.

உடனே தாத்தாவின் ஞாபகம் வந்தது எனக்கு. அவராவது சுகமாகத் தூங்குகிறாரா என்று பார்ப்பதற்காக உள்ளே ஓடினேன். வாசல் ஜன்னல் அருகில் உட்கார்ந்து சோப்பு ஜலத்தை வைத்துக் கொண்டு வைக்கோல் துரும்பினால் மிகவும் சாவதானமாகக் கொப்புளம் ஊதிக் கொண்டிருந்தார் தாத்தா. குழந்தைக்கு விளையாட்டுக் காட்ட நான் செய்த தந்திரம் தாத்தாவுக்காவது பொழுது போக்காக உபயோகப் படுகிறதே என்று சந்தோஷப் படுவதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்?



நடனம் ஆடினர்!

பம்பாய் டெலிபோன் இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ எச் ராமையா அவர்களின் புதல்விகளான குமாரி இந்திரா லலிதா இருவரும் சென்ற மாதம் மதுங்கா போதார் கல்லூரி ஹாலில் அற்புதமாக அபிநயம் பிடித்து நடனம் ஆடினர். மேற்படி நடனம் போதார் கல்லூரியைச் சேர்ந்த கலை அரங்கத்தின் ஆண்டு விழாவில் நடைபெற்றது. நடன நிகழ்ச்சிகளைப் பார்த்த ரசிகர்கள் அனைவரும் குமாரி லலிதாவையும் இந்திராவையும் பாராட்டினர்.

திறமை மிக்க வேலைப்பாடு
வெகு நாள் மறையாது
நிகழ்கிறது



காசி கோயில்
கி.மு. 500ல் கட்டப்பட்டது.

Stanes

'ஸ்டேன்ஸ்'
சிகப்பு லேபில்
சுத்தமான காப்பி



தி யுனைடெட் காப்பி ஸப்ளை கம்பெனி லிமிடெட்

கோயம்புத்தூர்,
தென் இந்தியா

கோயமுத்தூருக்கு ஏஜண்டுகள் :
தி புரொவிஷன் ஸ்டோர்ஸ்
ராஜா தெரு

வேலூருக்கு ஏஜண்டுகள் :
மெஸர்ஸ். வில்வம் பிரதர்ஸ்
கமிஸரி பஜார்



"ஸார், தந்தி!"

"ஸார், தபால்!"

சேகர் இரண்டையும் கையில் வாங்கிக் கொண்டான். மனித சுபாவப்படி அவனுக்கும் தந்தியைத்தான் முதலில் பிரித்துப் படிக்கத் தோன்றிற்று.

அவன் நினைத்தபடி அது அவன் மாமனாரிடமிருந்துதான் வந்திருந்தது. அவன் மனைவி சாந்தா ஒரு பிள்ளைக் குழந்தையைப் பெற்றெடுத்து அவனைத் தந்தையாக்கி விட்டாள். இதுதான் தந்தியின் சாரம்.

கடிதமோ, அவன் வேலை செய்யும் கம்பெனியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்திருந்தது. அவன் மானேஜராகப் பதவி வகித்து வந்த கிளையில் லாபம் கிடைக்கவில்லையாம். ஆகவே, அந்தக் கிளையை மூடிவிடப் போவதாகவும், சேகர் தலைமை ஆபீஸிலேயே உதவி மானேஜராக வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் எழுதியிருந்தது.

தந்தியில் ஏற்பட்ட மகிழ்ச்சி இரண்டாம் கடிதத்தால் எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டது. வெறுப்புடன் உள்ளே நுழைந்தான் சேகர். மாற்றலைப் பற்றியோ, தலைமை ஆபீஸில் வேலை செய்யவேண்டி நேரிட்டதைப் பற்றியோ, அவன் வருத்தப்படவில்லை. ஆனால், மானேஜராக வேலை செய்துவிட்டு, அந்த குட்டோடு உதவி மானேஜராகப் பதவி ஏற்றுக் கொள்வதென்றால்...? சம்பளம் வேறு நூறோ, ஐம்பதோ குறைந்து விடும். மேலும் கிளை ஆபீஸில் வேலை செய்யும் சிப்பந்திகளில் ஒருவரைத் தவிர எல்லோருக்கும் சீட்டுக் கிழிக்க வேண்டுமே!

அவன் உடம்பு சிலிர்த்தது! தந்தியையும், கடிதத்தையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான் அவன்.

✶

மறு நாள் ஆபீஸில் நுழைந்த போது அவன் தன்னையுமறியாமல் தனக்குக் கீழ் வேலை பார்த்து வந்த ஒவ்வொருவரையும் பார்த்தான். சற்று நேரத்திற்குள் தங்கள் வேலையே போய்விடப் போவதை உணராத அந்த அப்பாவிகள், மானேஜர் தங்களைக் கவனிக்கிறாரே என்ற உணர்ச்சியில் முன்னைவிட ஊக்கமாக வேலை செய்யத் துவங்கினர்.

சாதாரணமாகச் சேகர், தன் இடத்தில் உட்கார்ந்ததும் ஒரு கப் காப்பி கொண்டு வரச் சொல்லுவது வழக்கம். அன்று அவன் விரக்தியுற்ற மனத்தோடு இருந்ததால் அவன் அன்றைய வேலைகளைக் கூட கவனிக்கத் துவங்கவில்லை. ஆபீஸ் பையன் சங்கரன் அவனைக் கேட்காமலேயே ஒரு கப் காப்பியை அவன் மேஜையில் வைத்தான்.

பத்து நிமிஷங்கள் கழித்துச் சங்கரன் மறுபடியும் அறைக்குள் நுழைந்த போது காப்பி வைத்தது வைத்தபடி இருந்தது. மெள்ள "ஸார்" என்று கூப்பிட்டான் அவன்.

"என்னடா" என்று சீறி விழுந்தான் சேகர். அவன் மனத்தில் அப்போதைக்கு ஒரே ஒரு பிரச்னைதான் தலைதூக்கி நின்றது. எதிர்பாராத இந்தச் செய்தியை எப்படி சிப்பந்திகளிடம் தெரிவிப்பது என்ற குழப்பம்தான் அது.

எஜமானிடம் சங்கரனுக்கு ஏற்பட்ட இந்தப் புதிய அநுபவம் அவனுக்குத் திகைப்பைத் தந்தது. அடுத்த நிமிடம் அவன் நினைவு "எஜமானியம்மாள் கர்ப்பிணியாயிற்றே, அவளுக்கு ஏதாவது நேரிட்டிருக்குமோ?" என்ற சந்தேகத்துக்குத் தாவிற்று. அவன் மறுபடியும் சேகரைக் கூப்பிட்டு மரியாதையோடு கேட்டான். "எஜமானியம்மாளுக்கு உடம்பு ஏதுவும் இல்லைங்களே?"

சிறுவனின் தவிப்பு சேகரின் கோபத்தைக் கொஞ்சம் தணித்தது. "அவளுக்கென்ன? நன்றாகத்தான் இருக்கிறாள். பிள்ளைக் குழந்தை கூடப் பிறந்திருக்கிறது" என்றான்.

சங்கரன் துள்ளிக் குதித்து வெளியே சென்றான். காரியாலயத்திலேயே அவனுக்குத் தானே முதல் முதலில் இந்தச் சமாசாரம் தெரிந்திருக்கிறது? அதைக் குமாஸ்தாக்களிடம் சொல்வதில் அவனுக்கும் பெருமை இல்லையா?

மெள்ள மெள்ளப் பொழுது தேய்ந்து கொண்டு வந்தது. ஒரு வழியாகத் தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொண்டு சேகர் டைப் அடிக்கும் குமாஸ்தாவை அழைத்தான். கசப்பான ஒரு செய்தியைத் தன் வாயால் சொல்வதைவிட 'அறிக்கை' யாக வெளியிட்டு விடுவது சுலபம் என்று எண்ணினான்.

இதற்குப் பிறகு பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் அவன் காரியாலயத்தில்

இருக்கவில்லை. அவன் வெளியே வருவதற்கும் சங்கரனோடு தலைமைக் குமாஸ்தா பேசிக் கொண்டிருப்பதற்கும் சரியாக இருந்தது.

"எந்த வேளையில் பிள்ளை பிறந்தானோ, அப்பனின் பெரிய வேலைக்குக்கூட குந்தகம் செய்து விட்டது. அதன் விளைவு அதன் தந்தையை மாத்திரம் அல்லாமல் நம் எல்லோரையும் சேர்த்தல்லவா பாதிக்கிறது?"— இது தலைமைக் குமாஸ்தா.

இவைகளைச் சேகர் நன்றாகக் கேட்டான். அந்த வார்த்தைகளே அவன் மனத்தில் எதிரொலி செய்து கொண்டிருந்ததால் பிறகு யார் யாரோ என்னென்னமோ பேசினார்கள். அவர்கள் பேசியது எதுவும் அவன் காதில் விழவில்லை. அவன் 'விடுவிடு' என்று வெளியே வந்து காரைக் கொண்டு வரச் செய்து மறு நிமிஷமே வீட்டை நோக்கிச் சென்றான்.

அன்றைய இரவும் முதல்நாள் இரவைப் போலவே தூக்கமில்லாத இரவாக அமைதியின்றிக் கழிந்தது. தனிக்காட்டு ராஜாவாக இருந்துவிட்டு, ஊதியக் குறைவோடு தலைமை ஆபீஸில் ஒருவனுக்குக் கீழ் வேலை செய்ய வேண்டுமே என்ற நினைவு அவனை அலைக்கழித்தது. இவ்வளவுக்கும் காரணம் அவன் மகன் பிறந்த வேளை என்ற உணர்வு, கொஞ்சம் கொஞ்சமாகத் தோன்றி அவன் மனத்தில் திரையிட்டுப் படரவும் ஆரம்பித்தது. இந்த உணர்ச்சியின் முயற்சியில் அவனுக்கு அவன் மகனிடம்—அவன் பார்க்கக்கூட இல்லாத—மகனிடம் வெறுப்பு ஏற்பட்டது.

★

மனிதன் கவலைப்படுகிறான் என்பதற்காகவோ, அல்லது சந்தோஷத்தோடு இருக்கிறான் என்பதற்காகவோ காலம் கடப்பது நின்று விடுவதில்லை. சேகரும் தலைமைக் காரியாலயத்தில் வேலை ஒப்புக் கொண்டு ஒரு ஆண்டு ஆகியிருந்தது. இந்த ஓராண்டையும் மனைவியைக் கூப்பிட்டுக் கொள்ளாமல் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டு தனிமையாகவே கழித்தான் சேகர். மனைவியிடம் அவனுக்கு வெறுப்பு இல்லை என்றாலும், அவள் வந்தால் அவன் மகனும் வந்துதானே ஆகவேண்டும்!


சேகரின் மனைவி சாந்தா அடிக்கடி கடிதம் எழுதினாள், கெஞ்சினாள், புலம்பினாள். இறைவனாக இழைத்து விட்ட தீம்புக்கு மகனிடம், பச்சிளங் குழந்தையிடம் வர்மம் ஏன் என்று அரற்றினாள். ஆனால், அவளுக்குச் சேகர் பதில்கூடப் போடவில்லை.

காரியாலயத்திலிருந்து ஓய்ச்சலோடு திரும்பும் போதும், காலை, தலையை வலிக்கும் போதும் அவனுக்குச் சாந்தா இல்லாத குறை உறுத்தும். அவளுக்கும் நிம்மதியில்லாமல் நடக்கும் வாழ்க்கையை எண்ணி அவன் உள்ளம் அங்கலாய்க்கும். ஆனால், அவன் தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டான்.

ஓராண்டின் மறைவிலே கூட அவன் மனப் தெளிவு பெறவில்லை.

எல்லாம் சரியாக இருந்திருந்தால் சேகரின் மகனுக்கு அன்றைக்கு ஆண்டு நிறைவு நடந்திருக்க வேண்டும். சென்ற வருடம் அதே தினத்தில் நடைபெற்ற துர் சம்பவத்தை நினைத்துப் பார்த்துக் கொண்ட சேகருக்கு அந்த நினைவு துன்பமாக இருந்தது. காலையிலேயே காரியாலயத்துக்குச் சென்றான்.

சொல்லி வைத்தாற் போல அன்றைக்கென்று நிறைய வேலை இருந்தது. செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து முடித்து விட்டு வீடு திரும்பியபோது அவன் தன் நினைவு இல்லாமல் காரைச் செலுத்திக் கொண்டு வந்தான். சாதாரணமாகப் போக்குவரத்து அதிகம் என்று கருதப்படும் அந்தச் சாலையில் திரும்பிய போது அவன் கார் எதிரே வந்த லாரியில் மோதிற்று.







குடுமிக்காரர்:—காத்தூர் சுப்பராமன் கச்சேரிக்குத்தான் நான் போகிறது வழக்கம், சார்.

குல்லாய்:—ஏன்? அவர் ரொம்ப நன்றாகப் பாடுவாரோ?

குடுமி:—உம், இல்லை சார், மனுஷன் கண்ணை இறுக மூடிக்கொண்டு பாடுகிறார்! அவருக்குத் தெரியாமல் எழுந்துவரச் சௌகரியமாய் இருக்கிறது.

அவன் உயிர் பிழைத்தது உண்மையில் யாரோ செய்த புண்ணியத்தின் பலன் என்றார் டாக்டர். கடைசியாக, பத்து நாட்களுக்குப் பிறகு ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய சேகர் அவன் மகனிடத்தில் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த மாறாத வெறுப்பை உறுதிப் படுத்திக் கொண்டான். பிறந்த நாளன்று தன் வேலை குறைந்தது. ஆண்டு நிறைவன்று உயிருக்கே அபாயம் ஏற்படக்கூடிய அளவுக்கு விபத்தை உண்டாக்கியது. எல்லாவற்றிற்கும் மகன் பிறந்த வேளை தான் காரணம் என்று நினைத்தான் அவன்.

தனக்கு விபத்தேற்பட்டதை அவன் மனைவிக்கு எழுத விரும்பவில்லை.

ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் மாலை வீட்டுக்கு வந்ததும் அவனுக்கென ஒரு கடிதம் காத்துக் கிடந்தது. சாந்தாதான் எழுதியிருக்தாள். "குழந்தை பாலுவுக்குடம்பு சரியாக இல்லை. மூன்று நாட்களாக ஜுரம். நேற்று டாக்டரிடம் காண்பித்தேன். அவனுக்கு 'டைபாய்ட்' ஜுரமாம். இன்ஜெக்ஷனுக்காக ஏதோ நாலைந்து மருந்துகளை எழுதித் தந்திருக்கிறார். இந்தச் சமயம் பார்த்து அப்பா ஊரில் இல்லை மருந்து வகையறா மாத்திரம் இருபது ரூபாய்களுக்கு மேல் ஆகிறது. தயவு செய்து அடுத்த நிமிஷமே பணம் அனுப்பவும்" என்று எழுதியிருந்தாள் சாந்தா.

சேகர் துளிக்கூடக் கலங்கவில்லை. 'அவன் பிறந்ததால் யாருக்கு என்ன லாபம் கிடைத்து விட்டது' என்று முணுமுணுத்தான் அவன்.

மறுநாள்.

ஒன்றுமே செய்யத் தோன்றாமல் வீட்டை வளைய வளைய வந்துகொண்டிருந்தான் சேகர். அவனுக்கே அவன் செய்கை பிடிக்கவில்லை. வருத்தமாகக் கூட இருந்தது. ஆனால், அந்த வருத்தத்தையும் மீறிய அவன் பொறுப்பை அவனால் தடுக்க முடியவில்லை. படித்துப் பட்டம் பெற்றுவிட்ட அவன், வெறும் பிறந்த வேளையால் ஏற்பட்டதாக ஒரு சம்பவத்தைக் கற்பித்துக்கொண்டு மகனை வெறுப்பது புத்தி சாலித்தனமாக அவனுக்குப் படவில்லை.

அன்றைக்குச் சாயந்திரம் சேகர் மாலைப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் கவனம் பத்திரிகையின் ஒரு பக்கத்தில் வெளியாகி இருந்த செய்தியில் சென்றது. வீறிட்டலறினான் அவன். "பாலு! உன்னை உயிரோடு பார்க்கக் கொடுத்து வைத்திருப்பேனா?"

விஷயம் இதுதான். சேகர் சென்னையில் இன்ஷூரன்ஸ் ஆபீஸில் மானேஜராக வேலை பார்த்து வந்தபோது அவர்கள் காரியாலயம் எந்தக் கட்டிடத்தில் இருந்ததோ அந்தக் கட்டிடம் முதல் நாள் தரை மட்டமாகி இருந்தது. ஏற்கெனவே பழைய கட்டிடம் எனக் கருதப்பட்ட அது புயல் காற்றடித்து மழையும் பெய்தபோது இடிந்து விட்டது. பட்டப் பகலில் சுமார் இரண்டு மணிக்கு இந்த விபத்து நேரிட்ட காரணத்தால் அந்தக் கட்டிடத்தில் நடந்து வந்த காரியாலயங்கள் அவ்வளவிலும் வேலை செய்யும் சிப்பந்திகள் எல்லோரும் ஒருவரைத் தவிர விபத்துக்குப் பலியானார்கள்.

சேகரின் நினைவு பின்னோக்கித் தாவிற்று. 'பார்க்கப் போனால் அந்த ஊரைவிட்டு வெளி வந்ததால் ஊதியம் குறைந்ததே தவிர உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. மகன் பிறந்த வேளையால் கெடுதல் ஏற்படாது இருந்தால், அவன் பிறந்த வேளையில் நல்லதும் ஏன் ஏற்படக் கூடாது? ஆகவே மகன் பிறந்த வேளையில்தான், தான் ஊரை விட்டு வெளியே வந்து தன் உயிரும் காப்பாற்றப்பட்டதாக ஏன் நினைக்கக் கூடாது?'

"தெய்வமே! என்னை மன்னித்துவிடு. என் மகனின் உயிரைக் காப்பாற்றி எனக்குத் தா! இனி இந்த மாதிரி அசட்டுத்தனமாகப் பிழை செய்வதில்லை" என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்து கொண்டான்.

டிரங்குப் பெட்டியில் நாலைந்து வேஷ்டிகளையும், இரண்டு சட்டைகளையும் திணித்துக் கொண்ட அவன் ஸ்டேஷனை நோக்கி விரைந்தான். வண்டியில் ஏறும்போது அவன் மனம் அவனுக்குச் சொல்லிற்று:—

மனிதனின் அன்றாட அலுவல்களை வேளையும் நாழிகையும் எதுவும் செய்துவிட முடியாது. மதியினால் விதியைக்கூட வென்று விடலாம். வேளையையும் நாழிகையையும் மனத்தில் வைத்துக்கொண்டு இயற்கையாக நேரிட்ட சம்பவங்களை வேளையின் பெயரால் குறிப்பிடுவது அறியாமை; படு முட்டாள்தனம்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119 Sladens Garden, Poonamallee High Road, Kilpauk Madras

நாளுக்கு நாள்
அதிக தெளிவுள்ள
அழகான சருமம்



ரெக்ஸோனு சோப்பை தினமும் உபயோகியுங்கள். இதில் அடங்கி யிருக்கும் 'கேடில்' உங்கள் சருமத்திற்கு புது அழகும், தெளிவும் தரும்.

ரெக்ஸோனு

'கேடில்'* கலந்த
சோப் இது ஒன்றே



* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்கலவையின் ரெஜிஸ்டர் செய்யப் பட்ட பெயர் இது.

ரெக்ஸோனு ப்ரொப்ரைடடரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

RP. 90-50 TM

REGD. No M. 4392

Registered as a newspaper in Ceylon